உ

உருத்திரபுரீசுவரன் துணை



பூநகரியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் உயர் திரு. திருநாவுக்கரசு இராசநாயகம்

அவர்கள் சிவபதமெய்தியமை குறித்த

# நினைவு மலர்

02.12.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

## உயர்திரு. திருநாவுக்கரசு இராசநாயகம்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 02-11-2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

உருத்திர புரீசுவரன் துணை

# சமர்ப்பணம்

உழைப்பால் உயர்ந்தவரே
நல்மனத்தால் எமைக் கவர்ந்தவே
கடமை என்பது கண்ணெனக் கொண்டு
உயிரினம் போற்கும் உத்தமரே.

பெருமையுடன் வாழ்ந்து கொண்டு
எம்மை பெருமை கொள்ள வைத்த
உள்ளம் ஒளிர்கின்ற விளக்காய் நின்று
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறைந்த எம் தெய்வத்தின்
மலர்பாதம் இம் எழுத்தெனும்
மலரால் சிவபதப் பேற்றை
சூட்டுமலராக்கி பணிகின்றோம்.

ஆத்மாசாந்தி அமைதி பெற
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

# அமரர் உயர்திரு. திருநாவுக்கரசு இராசநாயகம்



மலர்வு

01.05.1946

உதிர்வு

02.11.2017

## திதி நிர்ணய வெண்பா

நீண்ட புகழ் இராசநாயகம் எனும் பேரோன் நிலம் விட்ட
ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனநல் ஐப்பசித்திங்கள் பதினேழில்
பூர்வபட்ச சதுர்தசியாம் புண்ணிய நன்நாளில்
பூபாரம் தீர்த்து சிவனடியே சேர்ந்த நன்நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி



ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்துதழ போற்றுகின்றேனே

## தேவாரம்

அப்பன்நீ அம்மைநீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாயென் நெஞ்சந்துறப்பிப்பாய் நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும் நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற் கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்.
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுயதுமே.

## திருப்புராணம்

நின்றுமிருந்துங் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவதுன் மலர்தாளடித் தாமரையின்
ஒன்றுமரும் பொருளே யருளே யுமையே யுமைத்
தன்றும் பிறந்தவளே யழியா முத்தியானந்தமே.

## திருப்புகழ்

பத்தியால் யானுமைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனாமாறெனைப் பெரு வாழ்வின்
முத்தியே சேர்வதற் (கு) அருள்வாயே
உத்தமா ஞான சற்குண நேயா
ஒப்பிலா மாமணிக்கிரி வாசா
வித்தகா ஞான சத்திநி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுருக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திரு திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள் - ஓய்வு நிலை கிளிநொச்சி மாவட்டச் செயலாளரும் பிரதிப்பிரதம செயலாளரும் வடக்கு மாகாண சபை - அவர்களது வாழ்க்கைப் பின்னணியும் பன்முகப்பட்ட சமய, சமூக சேவைகளும், பணிகளும்

இவர் பூநகரியில் பாரம்பரிய சித்த மருத்துவத்தில் புகழ் பூத்து விளங்கிய தவசித்தம்பி வினாசித்தம்பி பெத்தார் குமாரசுவாமி பரம்பரையைச் சேர்ந்த குமாரசாமி திருநாவுக்கரசுவுக்கும் விசுவலிங்கம் பாக்கியம் என்பவருக்கும் மண்ணின் மைந்தனாக 01.05.1946 பூநகரியில் அரும்புவிட்டார்.

இவருக்கு உறுதுணையாய் அமரர். கோபாலசிங்கம், கிருஸ்ணசாமி, சிவலிங்கம், அமரர் முத்துலட்சுமி, அன்னலட்சுமி ஆகியோர் உடன் பிறந்தனர்.

பின்னர் இவர் யாழ்ப்பாணத்தில் தம்பு சரஸ்வதி தம்பதிகளின் ஆசை மகள் கமலாதேவியை கரம் பிடித்து இனிதே இல்லறம் நடத்தினார். பத்தாவிற்கு ஏற்ற பதிவிரதையாக வாழ்ந்தார் அவரது அன்புத்துணைவியார்.

அவரது அன்புக் கணவரின் எல்லா முயற்சிகளிலும் முன்னேற்றங்களிலும் அன்புடனும் கனிவுடனும் கண்டிப்புடனும் பங்கேற்று அவர் வாழ்நாளில் துணை நின்றார் அவரது அன்புத்துணைவி. அவர்களது இல்லறப்பயனாக சசிந்தா, சசிகுமார், சசிகரன், சசிலேகா என நான்கு நன்மக்களைப் பெற்று சீரியவழியில் வளர்த்து ஆளாக்கினார்.

சசிந்தா கேதீஸ்வரனையும் சசிகுமார் தாரகாவையும் சசிகரன் சாஜாவையும் சசிலேகா கஜந்தனையும் திருமணம் செய்ததன் பேறு அன்பான மருமக்களையும் பெற்றுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்ததி செழிப்புற வந்தனா, சாதனா, அஞ்சனா, ஐதார்த்வின் தேஜஸ்வி, ஜெய்டன், லயா, ஜனுமெனன், சாகித்யா ஆகிய பொன்போன்ற பேரப்பிள்ளைகளைப் பெற்று பேரானந்தம் அடைந்தார்.

## ஆரம்பக்கல்வி

## வாழ்க்கையின் உயர்ச்சிக்கான அத்திவாரம்

ஆரம்பக் கல்வியை பூநகரி அத்தாய் சிறி முத்துக்குமாரசுவாமி பாடசாலையிலும் பின்னர் பூநகரி மகா வித்தியாலத்தில் சேர்ந்து க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்று 1961ல் தேர்வுக்கு தோற்றி திறமைச் சித்திகள் பெற்றார். கல்வியுடன் மட்டும் நில்லாது பூநகரி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் போது பல விளையாட்டுப் போட்டிகளிலும் விவாத மேடைகளிலும் பேச்சுப் போட்டிகளிலும் விவேகானந்த சபையின் சமயப்போட்டிகளிலும் பங்கு கொண்டு தன் ஆளுமைகளை அரங்கேற்றிப் பல பரிசில்களைப் பெற்றார்.

## உயர்தரக் கல்வி

க.பொ.த. உயர்தர கல்வி பெறுவதற்காக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1962ம் ஆண்டு சேர்ந்து கல்வி கற்று 1964ம் ஆண்டு க.பொ.த உயர்தர கலைப்பிரிவில் தேர்வுக்கு தோற்றி சித்தியடைந்து பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து அவ்வருடம் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு கலைப்பிரிவு மாணவனாகத் திகழ்ந்த வகையில் இவர் இக்கல்லூரியின் பெருமைமிகு மாணவனாக போற்றப்பட்டார்.

இவர் யாழ் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் போது அங்கு கற்பித்த ஆசிரியராகவும் புகழ் பெற்ற நாடக இயக்குனராகவும் இருந்த " தேவன் யாழ்ப்பாணம்" என பெயர் பெற்ற புகழ்மிகு நாடக இயக்குனர் திரு இ. மகாதேவா அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறியாள்கையில் இரு நாடகங்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்து பெருமை சேர்த்தார். அத்துடன் யாழ் இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றம், அரசியல் மாணவர் மன்றம், விடுதி மாணவர் மன்றம் ஆகியவற்றில் முக்கிய பதவி வகித்து திறம்பட இயங்க இவர் முக்கிய பங்களித்தார்.

இவரது உயர்தரக் கல்விக் காலத்தில் எவரும் வரலாற்றுக் கல்வியை விரும்பாத நிலையில் ஐரோப்பிய வரலாறு, இலங்கை வரலாறு ஆகியவற்றை க.பொ.த உயர்தர வகுப்புக்குரிய பாடமாக எடுத்த பெருமைக்குரியவரும் இவரே. ஐரோப்பிய வரலாற்றுக்கு வகுப்பில் இரு மாணவரே இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்திய, ஐரோப்பிய வரலாற்றை பல்கலைக்கழகம் வரை கற்றார்.

இந்துக் கல்லூரியில் பல கலை இலக்கிய விவாத மேடைகளில் பங்கு பற்றி பல வெற்றிகளும் பெற்று பிரகாசித்து சிறந்த மாணவனாக விளங்கிய இவர் பல்கலைக்கழகம் செல்ல 7 மாதங்கள் இருந்தமையால் அக்காலத்தில் கிளிநொச்சி விவசாயப்பாடசாலையில் சேர்ந்து விவசாயக் கல்வி பயின்று விவசாயத்தில் தேர்ச்சியுற்ற மாணவனானார்.

பல்கலைக்கழகக் கல்வி

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் போது பல்கலைக்கழக மாணவர் மன்றத்தின் செயற்குழு உறுப்பினராகவும் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படச் செயற்பட்டார்.

இக்காலத்தில் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட முருகன் கோவிலுக்கு மாணவர் மன்றத்தினூடாகப் பல சிரமதானப் பணிகளை ஆற்றி உந்துதலாக இருந்தார். பேராதனைப் பல்கலைக்கழக வாழ்விலும் மெச்சுதற்குரிய மாணவனாகத் திகழ்ந்து போற்றப்பட்ட திரு தி. இராசநாயகம் 1968ல் பட்டதாரியாகி வெளிவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவில் நிருவாக சேவைப்பணிகள்

1968ம் ஆண்டிலே சிவில் நிருவாகத்தில் காலடி பதித்தார். அன்று தொடக்கம் 2011 வரை சிவில் நிருவாகத் துறையில் காலடி பதித்து அவர் ஆற்றி வந்த பணி பெருமைமிக்கது. அவரது சேவையால் மக்கள் பெரும் பயனடைந்துள்ளதுடன் அவர் அலங்கரித்த பதவிகளும் பெருமை பெற்றன. எமது மக்கள் துன்ப துயரங்களையும் அவலங்களையும் எதிர்கொண்ட மிக மிக நெருக்கடி மிகுந்த ஒரு காலகட்டத்தில் வன்னிப்பெருநிலப்பரப்பில் முக்கியமான மாவட்ட சிவில் நிருவாகப் பொறுப்பை துணிச்சலுடன் ஏற்று அயராது பாடுபட்டு அவர் ஆற்றிய விஞ்சிய சேவை இன்னும் வெகுவாகப் புகழ்ந்து மதிக்கப்படுகின்றது. அவரது சிவில் நிருவாகக் காலம்

1.12.1968 ஆண்டு கணக்காய்வாளர் நாயகம் திணைக் களத்தில் கணக்காய்வாளராக சேர்ந்து அரச பணியை ஆரம்பித்தார்.

1.7.1972ல் அபிவிருத்தி உதவியாளராக திட்டமிடல் அமைச்சில் சேர்ந்தார்.

2.3.1981ல் திட்டமிடல் அதிகாரியாக பதவி உயர்வு பெற்று மன்னார் மாவட்ட செயலகத்தில் பதவியேற்று பணி புணிந்தார்.

1.1.1985ல் உதவித்திட்டமிடல் பணிப்பாளராக பதவியேற்றார்.

30.04.1992 மன்னாரில் இந்து கலாசார மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் உதவிப்பணிப்பாளராக கடமையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே நேரத்தில் பல அரச பதவிகள் வகித்தமை

அந்த வகையில் 2.5.1992ல் பிரதித்திட்டமிடல் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றியபின் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 1992ம் ஆண்டு வந்து 1992 லிருந்து 1996ம் ஆண்டு வரை பிரதித்திட்டமிடல் பணிப்பாளராகவும் புனர்வாழ்வு அமைச்சின் திட்டப்பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

ஒரு பதவியில் தனது சேவையை முடிக்கும் பல அரச உத்தியோகத்தர்கள் மத்தியில் பல அரச பதவிகள் வகித்து நாட்டு மக்கள் மத்தியில் உத்தமபுருசராகத் திகழ்ந்த வகையில் இவரது பன்முகப்பட்ட பணி நாவார போற்றப்படத்தக்க தொன்றாகும்.

இப்பணிகளுக்கு மேலதிகமாக நெருக்கடியான அக்காலத்தில் நிருவாக சேவை அதிகாரிகள் அரசாங்க அதிபராக, மேலதிக அரசாங்க அதிபராக இம் மாவட்டத்தில் சேவை செய்ய மறுத்த நிலையில் இலங்கைத் திட்டமிடல் சேவையைச் சேர்ந்த திரு தி. இராசநாயகம் மேலதிக அரச அதிபராக 1996இலும் அரச அதிபராக 1997இலும் நியமிக்கப்பட்டார். திட்டமிடல் சேவையைச் சேர்ந்த அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட ஒரே ஒரு அதிகாரியாக திரு தி. இராசநாயகம் விளங்குகின்றார்.

நெருக்கடி மிகுந்த வேளையிலும் உயிரைச் துச்சமென மதித்து தனது சொந்த மாவட்ட மக்களுக்கு சேவை செய்வதற்காக பொறுப்பை ஏற்று பலரும் போற்றத்தக்க வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றினார். அரசினால் இவர் கிளிநொச்சி மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபராக 1996 வைகாசி மாதத்தில் நியமிக்கப்பட்டார். அவர் பின்பு 1997ம் ஆண்டு கிளிநொச்சி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டு 1999 வரை கடமையாற்றினார். அக்காலத்தில் தவறான தகவல் அடிப்படையில் இவர் கொழும்புக்கு இடமாற்றப்பட்டார். 1999 ஆவணியில் திட்டமிடல் அமைச்சின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு கடமையாற்றி பின்பு 20.08.2002 ல் மீண்டும் கிளிநொச்சி அரசாங்க அதிபராக மீண்டும் அரசினால் நியமிக்கப்பட்டு கடமையாற்றி வந்தார்.

இலங்கை நிருவாக சேவைக்குரிய உயர் பதவியான அரசாங்க அதிபர் பதவியில் அமர்த்தப்பட்ட இலங்கைத்திட்டமிடல் சேவையாளன்

இலங்கையில் நிருவாக சேவைக்குரிய பதவியாகக் குறிப்பிடப் படும் உயர் பதவியான அரசாங்க பதவிக்கு நியமிக்கப்பட்ட இலங்கை திட்டமிடல் சேவையின் அதிகாரியாக விளங்குகிறார். இதனால் இலங்கை திட்டமிடல் சேவைக்கு பெருமை சேர்த்தார்.

அரச அதிகாரியாக கடமையாற்றிய வேளையில் பல பதவிகளை வகித்துள்ளார். மன்னாரில் கடமையாற்றிய போதும் உலக வங்கியின் புனர்வாழ்வுத் திட்டத்தின் திட்டப் பணிப்பாளராகவும் கடமையாற்றியதுடன் பிராந்திய அபிவிருத்தி அமைச்சிலும் இந்து கலாசார அமைச்சிலும் உதவிப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார். கிளிநொச்சியில் கடமை யாற்றியபோது புனர்வாழ்வு திட்டப்பணிப்பாளராகவும் மேலதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அதிபராகவும் கடமையாற்றினார்

அரசாங்க அதிபராக இருந்த இவருக்கு 1999 ஆவணியில் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டு திட்டமிடல் அமைச்சில் பிராந்திய அபிவிருத்திப் பிரிவில் ஒன்றிணைக்கப்பட்ட திட்டத்தின் (IRDP ) தேசியப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டு சிறப்பான பணியை 22.08.2002 வரை மேற்கொண்டார். இவரது சேவையை மதித்து தவறை உணர்ந்து அரசு இவரை மீண்டும் கிளிநொச்சி அரச அதிபராக 23.08.2002 நியமித்து 30.04.2007 வரை செவ்வனே கடமையாற்றினார்.

மாகாண சபையில் கடமை

அரச அதிபராக கடமையாற்றிய பின்பு 27.11.2007ல் இருந்து 31.12.2007 வரை வடக்கு மாகாணசபையின் பொது நிருவாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார் 01.08.2008 லிருந்து 31.10.2009 வரை தனியாகப் பிரிக்கப்பட்ட மாகாண உள்ளூராட்சி கூட்டுறவு கைத்தொழில், சிறுவர் பராமரிப்புச் சேவைகள் சமூக சேவை புனர்வாழ்வு அமைச்சின் முதலாவது செயலாளராக நியமிக்கப்பட்டு எம்மண்ணிற்கே பெருமை சேர்த்தார்.

01.11.2009 லிருந்து 31.12.2011 வரை பொது நிருவாக அமைச்சின் பிரதிப்பிரதம செயலாளராகவும் ஆளுனரின் கிளிநொச்சி, முல்லைத்தீவு யாழ்ப்பாண மாவட்டங்களின் ஆணையாளராகவும் கடமையாற்றினார். இக் காலத்தில் மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டது. பேருந்துகளில் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவந்து இறக்கிவிடப்பட்டபோது மக்களுக்கு எதுவித அடிப்படை வசதிகளும் இருக்கவில்லை. அப்போதைய பிரதம செயலாளர் திரு. சி. இரங்கராசா அவர்களுடன் இணைந்து மீள்குடியமர்ந்த மக்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதில் அர்ப்பணிப்புடன் உழைத்தார். அப்போது போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை. மக்கள் அவலப்பட்ட நிலையில் கைவிடப்பட்ட ஒரு லட்சம் பைசிக்கிள்களை முள்ளிவாய்க்காலில் இருந்து எடுத்துவந்து கூட்டுறவுச் சங்கம் மூலம் திருத்தியும் மக்களுக்கு அளித்தார். பைசிக்கிள் திருத்துனர், தேநீர்க் கடைக்காரர்களுக்கு திரு. இரங்கராசாவினதும் ஆளுனரதும் உதவியுடன் நிதி வழங்கி அவற்றை இயங்கச் செய்தார். அத்துடன் கோவில் மண்டபங்களைத் திருத்தி வீடில்லாத மக்கள் தங்க ஏற்பாடு செய்தார். இடம்பெயர்ந்த மக்களது வீட்டுத் தோட்டத்துக்கு உதவினார். இதன்பொருட்டு மல்லாவி, வெள்ளாங்குளம், முழங்காவிலில் ஒரு மாதம் தங்கியிருந்து மருத்துவர்களான திரு. கார்த்திகேயன், திரு. திலீபன் மற்றும் உதவி அரச அதிபர் திரு. சி. சத்தியசீலன் ஆகியோரின் துணையுடன் மீள் குடியேறிய மக்கள் அடிப்படை வசதிகள் பெற்று வாழ ஏற்பாடு செய்ததுடன் மாகாண சபையின் 8 பேருந்துகள் மூலம் அரச ஊழியர்கள் பின்தங்கிய பிரதேசத்துக்கு வந்து போக பேருந்து அதிகாலை 4:00 மணியிலிருந்து ஏற்பாடு செய்தார். இராணுவ நெருக்கடியால் அரச சாரதிகள் எவரும் சேவையாற்ற முன்வராத நிலையில் கூட்டுறவுச் சங்கம் மூலம் சாரதிகளைப் பெற்று சேவைகளைத் திறம்பட நடத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச அதிபராக இருந்தபோதான சாதனையும் அவர் தம் விசேட பணிகளும்

உணவுத் தொடரணி வண்டிகள்

இவர் மேலதிக அரச அதிபராக இருந்த காலத்தில் உணவு வண்டிகள் 1996 மே மாதத்தில் இருந்து ஆவணி வரை மூன்று மாதங்கள் வவுனியாவிலிருந்து வரவில்லை. உணவு வண்டிகளைக் கொண்டு சென்று உணவு கொண்டு வர எந்த தொடரணி அரச உத்தியோகத்தர்களும் மரண பயத்தினால் முன்வரவில்லை. அந்த நேரத்தில் அரச அதிபரும் வவுனியாவில் நின்று கொண்டு வர மறுத்தார். மேலதிக அரச அதிபராக இருந்த திரு. தி. இராசநாயகம் அவர்கள் 25 லொறிகளை கிளிநொச்சியிலிருந்து கொண்டு ஓமந்தை ஊடாக வவுனியா சென்று உணவுப் பொருட்களைக் கொண்டுவர தன்னந்தனியாக முயற்சித்தபோது ஒரு லொறியில் பற்றி வைக்கப்பட்டு தொடரணியை நிறுத்த முயற்சித்த போதும் துணிந்து வாதாடி ஒரு லொறியை விடுத்து ஏனைய 24லொறிகளுடன் விடியற்காலை கச்சேரியை வந்தடைந்த சம்பவம் தற்போதும் மக்களால் நினைவு கூரப்படுகின்றது. தன்னலத்திற்காக பொது நலத்திற்கு முனைந்து வராதவர்கள் மத்தியில் தன்னுயிரே மன்னுயிராக எண்ணி இத்தகு சேவையை மேற்கொண்டமை மகத்தான பேறாக போற்றத் தகுந்ததாகும். வந்தாரை வரவேற்கும் பண்பாடாம் வன்னி மாநகரத்தின் கொள்கையதனை திறம்படச் செய்த வகையிலும் இவரது பணி மேலோங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5லட்சம் மக்களை வரவேற்று உபசரித்து மீள்குடியேற்றியமை

அதேநேரத்தில் சத்ய இராணுவ நடவடிக்கையின்போது 5 லட்சம் மக்கள் யாழிலிருந்து கிளிநொச்சி ஊடாகவே வந்தனர். கிளாலிக்கு அனைவரும் வந்தபோது 20 பேக்கரிகள் 200 ற்கு மேற்பட்ட சமையலாளர்களைக் கொண்ட சமைத்த உணவு வழங்கும் நிலையங்களை ஏற்பாடு செய்து இரவு பகலாகச் செயல்பட்டு 5 லட்சம் மக்களுக்கு உணவு நீர்வழங்கி அவர்களை உரிய இடங்கட்கு அனுப்பிய செயல்பாடு மக்களால் இன்றும் மறக்க முடியாதது. நெருக்கடி மிகுந்த ஒரு காலகட்டத்தில் இவர் செயற்பட்டவிதம், துணிச்சலான நடவடிக்கைகள் இன்றும் பாராட்டப்படுகின்றன.

இவரது புனர்வாழ்வு நிவாரண சேவையை அமெரிக்க அகதிகள் பேரவை பாராட்டியமை

அரச அதிபராக இருந்த காலத்தில் இவர் புரிந்த பணி மதிக்கப்படுகின்றது. 1997ம் ஆண்டு அமெரிக்க அகதிகள் பேரவை பிரதிநிதிகள் இப்பகுதியின் நிவாரணம் புனர்வாழ்வு பற்றி ஆய்வு செய்வதற்காக கிளிநொச்சிக்கு வந்தனர். இவர்கள் தடைமுகாம் பரிசீலனையால் வரத் தாமதமாகியதுடன் அவர்கள் வந்த வாகனமும் பழுதுபட்டு இரவு 1:00 மணிக்குத் தான் கிளிநொச்சிக்கு வந்தனர். தங்குவதற்கு அவர்கள் ஏற்பாடு செய்த விடுதி தெரியாது அவர் வேலை செய்த கிளிநொச்சி கச்சேரியில் பெற்றோமாக்ஸ் எரிந்த படியால் அது தான் விடுதி என வந்தனர். வந்தவர்கள் பிரமித்து விட்டனர். ஒரு அரச அலுவலகம் இரவு 1:00 மணிக்கு மேலும் வேலை செய்ததை தாங்கள் எங்குமே காணவில்லை எனப் பாராட்டினர். இவர்கட்கு தங்குமிட வசதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு என்பன அவரால் ஏற்பாடு செய்யப்பட்டு அவர்கள் இரு நாட்கள் தங்கி சகல இடங்களையும் பார்வையிட்டு தங்களது நிறுவனத்திற்கு அறிக்கை அனுப்பும் போது இவரது நிவாரண புனர்வாழ்வு சேவையானது அரிசி, பருப்பு, சீனி மட்டும் வழங்குவதோடு நின்று விடாது பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பாதுகாக்க மகாதேவா ஆச்சிரமச் சைவச் சிறுவர் இல்லம், பாதிக்கப்பட்ட முதியோரைக்காக்க யோகர்சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம், மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு தர வெற்றிமனை, கண்காது கேளாதவர்களைப் பராமரிக்க இனிய வாழ்வு இல்லம், மாற்று வலுவுள்ளோரைப் பாதுகாத்துப் பணிபுரிய கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம், பாதிக்கப்பட்டு பட்டினியை எதிர்நோக்கிய மாணவர்களுக்கு பசி தீர்க்க பாடசாலை தோறும் இலைக்கஞ்சித்திட்டம், வறியோர் வாழ உணவுக்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வலுவூட்டியமை இவர்களால் பாராட்டப்பட்டது. தனியாக உணவு விநியோகத்துடன் நிற்காது இடப்பெயர்வால் நலிவுற்ற எல்லாத் தொகுதியினருக்கும் திட்டம் தீட்டி நிவாரணம் பெற ஏற்பாடு செய்தமை உலகத்திலே மாதிரியாகப் பயன்படுத்தக் கூடியது என விதந்துரைத்தனர். இவர்களது அறிக்கையை இவரது திடீர் இடமாற்றத்தின் போது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரால் எடுத்தாளப்பட்டு இப்படியான திறமையான அதிகாரியை ஏன் இடமாற்றுகின்றீர்கள் என்று கேள்வி எழுப்பினார். இது பாராளுமன்ற கன்சாட்டில் 06.09.2007 திகதி வந்துள்ளது. அவர்களது அறிக்கையும் உள்ளது.

மேலும் இது மட்டுமன்றி இவரால் ஆரம்பிக்கப்பட்ட இலைக்கஞ்சி மாதிரியே உலக உணவுத்திட்டம் (WFP) பாடசாலைகட்கு உணவு வழங்கும் திட்டத்தை அமுலாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியது. இது தொடர்பில் இவரது சேவை உலக உணவுத்திட்ட உயர் அதிகாரியாலும் கியூடெக் வன்னியாலும் பாராட்டப்பட்டது.

அறிவியல் நகரத் தோற்றமும் கிளிநொச்சி நகரத்திட்டமிடலும்

மேலும் கிளி அரச அதிபராக இருந்த காலத்தில் கிளிநொச்சி நகரத்திட்டத்தினை அறிமுகப்படுத்தி அறிவியல் நகரில் சுனாமித் திட்டத்தின் கீழ் வந்த நிதியில் புதிதாக பாதைகள் அமைத்து திறந்து அங்கு சகல உயர்கல்வி நிலையங்களை நகர்த்த முயற்சி எடுத்த பெருமைக்குரியவர். அதுமட்டுமன்றி கிளிநொச்சி நகர் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க கொக்காவிலில் இருந்து கனகபுரம் வரை மாற்றுப்போக்குவரத்துப் பாதை திறந்து புகையிரதப் பாதையும் அமைக்க நில ஏற்பாட்டினைச் செய்து கிருஷ்ணபுரம் வரை அகலமாக்கப்பட்டது. இப்பாதை பூநகரி A36 ல் உருத்திரபுரம் ஊடாக இணைக்கப் பிரேரித்ததுடன் பரந்தன் சந்தியிலிருந்து பூங்காவனச் சந்தி, கோவிந்தன் கடைச் சந்தியூடாக இரணைமடு வீதி வந்து A9ல் ஏறும் மாற்றுப் பாதையும் பிரேரித்தவர். வருங்காலத்தில் இவரது பிரேரிப்பு அமுலாக்கப்படல் வேண்டும். கனகபுரம் வீதியை அகலமாக்கிய போது பலர் எதிர்த்தனர். இப்போது இந்த இடம் பெரு நகராக வளர்ச்சி பெற்றுள்ளதுடன் காணிகளது பெறுமதியும் அதிகரித்துள்ளது.

அதேபோல சாலை வீதியை அகலமாக்கி அங்கு சந்தைகளையும் கடைகளையும் நகர்த்தினார். இன்று இந்த இடம் பிரபலமாவதற்கு இவரே அடித்தளமிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில் யாழ் பல்கலைக்கழக விவசாயபீடம், பொறியியல்பீடம் அமைக்க பங்களிப்பு.

அறிவியல் நகரில் விவசாய பீடம் அமைக்க 400 ஏக்கர் காணியை பாரிய முயற்சியின் பின்னால் ஒதுக்கி இன்று யாழ் பல்கலைக் கழகத்தின் விவசாயபீடம், பொறியியல்பீடம் அமைய அடித்தளமிட்டவர். தமிழ் பல்கலைக் கழக காணி 168 ஏக்கரையும் யாழ் பல்கலைக்கழகத்திற்கு கொடுக்க மாகாணசபையின் ஊடாக முன் நடவடிக்கைகள் எடுத்தவர். மாகாணசபைக்கு பாரமெடுக்க அமைச்சரவைத் தீர்மானம் எடுக்காவிட்டால் இது வேறு நிறுவனங்களிடமே போய்ச்சேர்ந்திருக்கும். இந்தவகையில் இவரது இச்சேவையானது பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் மறக்கமுடியாதொன்றாக வேரூன்றியுள்ளது.

பேராசிரியர் துரைராஜா ஐயா காலத்திலிருந்து கிளிநொச்சியில் பொறியியலாளர் பீடம் அமைக்க பாடுபட்டவர். இன்றும் உடனடியாக பொறியியல் பீடம் அமைக்க காணி கட்டடங்கள் இன்றி தத்தளித்த வேளையில் தான் தலைமை தாங்கும் மகாதேவா ஆச்சிரமச் சைவச் சிறுவர் இல்லத்தின் புதுமுறிப்பில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்தில் 11 கட்டடத்தினை 11000 சதுர அடிக்கு மேல் வழங்க முன்வந்து எமது வன்னி மண்ணில் பொறியியல் பீடம் அமைக்கும் திட்டத்திற்கு பேராதரவு வழங்கினார்.

தொழில்நுட்பக்கல்லூரி அமைய முயற்சிகள் எடுக்கப்பட்டது

அழகியல் கலாமன்றத்தினைத் தோற்றுவித்தமையும் வளர்த்தமையும்

பாரம்பரிய மருத்துவத் துறைக்கான ஆதரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் குடியேற்றத் திட்டங்களுக்கான தோற்றமும் கிராமங்களது தோற்றமும் வளர்ச்சியும்

முட்கொம்பன் இளைஞர் விவசாயத்திட்டமும் புதிய கிராமத்தின் தோற்றமும்

விவசாயத்திட்டங்களும் கைத்தொழில் திட்டங்களும்

முதுமாணிப்பட்டப்படிப்பு

அரசினது புலமைப்பரிசில் பெற்று பல நாடுகளுக்கு மேற்படிப்புக்காகச் சென்றுள்ளார். பிரித்தானியாவிலுள்ள மஞ்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் புலமைப்பரிசில் பெற்றுச் சென்று முதுமாணிப்பட்டப் படிப்பினை மேற்கொண்டு முதுமாணிப்பட்டம் Msc பெற்றுள்ளதுடன் யப்பான், ஜேர்மனி, சிங்கப்பூர், நெதர்லாந்து போன்ற நாடுகளுக்கு புலமைப்பரிசில் பெற்றுச்சென்று பல ஆய்வுகளைச் செய்துள்ளார். முதுமாணிப் பட்டத்துக்காக இலங்கையின் கூட்டுறவு வரலாற்றினை ஆய்வு செய்து "இலங்கை கூட்டுறவு வரலாற்றின் கடந்த கால அனுபவங்களும் எதிர்கால போக்கும்" என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்து பலரதும் பாராட்டைப் பெற்றுள்ளார். கூட்டுறவுச் சஞ்சிகைகளில் இவரது ஆய்வின் சிலபகுதிகள் பிரசுரமாகியுள்ளது.

வடக்கு மாகாண சபையால் பாராட்டும் செயற்பாடுகள்

வடக்கு மாகாணசபையின் பொது நிருவாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக 2007 ல் பதவியேற்ற போது 4600க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்ட ஊழியர்களது ஓய்வூதியம் நட்டஈடு உட்பட வழங்கப்பட வேண்டிய நன்மைகள் வழங்கப்படாது நிலுவையாக இருந்தது. இதனால் ஊழியர் பாதிக்கப்பட்டிருந்தனர். இது தொடர்பில் துரிதநடவடிக்கை எடுத்து சகல கோவைகளும் சீர்செய்யப்பட்டு சகலருக்கும் ஓய்வூதியம் நட்டஈடு பெற்றுக்கொடுக்கப்பட்டது. இதனை அன்றைய வடக்கு மாகாண பதில் ஆளுனர் பாராட்டிக் கடிதம் வழங்கினார்.

மேலும் வடக்கு மாகாண சபையின் அலுவலர்கள் அலுவலக நிமித்தம் கொழும்புக்குச் சென்றால் இங்கு தங்குவது என்பது பாரிய பிரச்சினை நடுநிசியில் சென்று உறவினர்களிடம் போகமுடியாது. இதனைப் போக்க ஆரம்பத்தில் வாடகை வீடு பெறப்பட்டது. இது போதிய வசதியுடன் இல்லை. பெருமளவு அலுவலர்கள் தங்க முடியாத அவல நிலை வாகனங்கள் தரிக்க முடியாத துயரநிலை இதனைப் போக்கும் வகையில் இவர் ஆளுனரது செயலாளர் திரு.சி.இரங்கராசா அவர்களது உதவியுடன் 40 பேர்ச் கொண்ட விசாலமான காணியை இருமாடிக் கட்டடங்களுடன் வடக்கு மாகாண சபைக்குச் சொந்தமாக இரத்மலானை இந்துக்கல்லூரிக்கு முன் வாங்கி திருத்தி இன்று வடமாகாண சபை அலுவலர் மட்டுமன்றி வடமாகாண சபையின் அனைத்து ஊழியர்களும் தங்கித் தங்களது அலுவலக வேலைகளை எந்தவித இடருமின்றி முடித்து நிம்மதியாகத் திரும்ப வழிசமைத்துள்ளார். இந்த திட்டம் சகல அரச ஊழியர்களாலும் இன்றும் நினைவு கூர்ந்து பாராட்டப்படுகின்றது.

பல நூற்றுக்கணக்கான சிற்றூழியர்கள் பல ஆண்டு காலமாக நிரந்தரமாக்கப்படாது வாழ்வு கேள்விக்குறியானபோது இவர் தலையிட்டு தீர்மானமெடுத்து அவர்களை நிரந்தரமாக்கினார். முதல் முதலாக 400ற்கு மேற்பட்ட பட்டதாரிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணசபைக்குத் தெரிவு செய்து நிரந்தர பதவி கொடுத்து இணைத்தார். பட்டதாரிகள் நியமனம் மத்திய அரசுக்குரியதாக இருந்தபோதும் மத்திய அரசுக்கு விளக்கி ஒப்புதல் பெற்று மாகாண சபையே தெரிவு செய்து இணைக்க உதவினார்.

## இவரது சமூகப்பணி

அ. கூட்டுறவுத் துறையினூடான சமூகப்பணி

**01.** பூநகரி. ப.நோ.கூ.சங்கத்தின் எழுச்சிக்கு வித்திட்டமை

**02.** மன்னார் மாவட்ட பனம்பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களது தோற்றத்திற்கு நெருக்கடியில் உதவியமை

**03.** மன்னார் பாற்பண்ணை உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் எழுச்சிக்கு உதவியமை.

**04.** பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையை ஏற்றமை

**05.** பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கான ஆதரவு

**06.** வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினை எழுச்சி பெறச் செய்தமை

## சமூக நிறுவனங்களூடான சமூகப்பணி

01. பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகத்தினைத் தோற்றுவித்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடியான நிலையில் மக்களது உடனடி நிவாரணம் புனர்வாழ்வுக்காக பூநகரி மக்களின் நலன் கருதி 1988ம் ஆண்டில் பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தினை நிறுவி 13 ஆண்டுகள் தலைமை தாங்கி வெளிநாட்டு உதவிகள் பெற்று பூநகரி மக்களுக்கு உதவினார். இவரது செயற்பாட்டுக்கு சர்வதேச ஒக்ஸ்பாம் நிறுவனம் பெரிதும் உதவியது. நெருக்கடியின்போது பூநகரி மக்களுக்கு உணவு வண்டிகள் வருவது தடைப்பட்டது. இவர் ஓக்ஸ்பாம் (OXFAM) மூலம் பல உணவு வண்டிகளை பூநகரிக்கு அனுப்பி வைத்தார். ஒரு தொடரணி வண்டி வரும்போது செல்தாக்குதலுக்குட்பட்டு தொடரணி உத்தியோகத்தர் படுகாயமடைந்தபோதும் உணவு வண்டிகள் தொடர்ச்சியாகக் கொண்டுவர ஏற்பாடு செய்து பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகம் மூலம் மக்களைக் காப்பாற்றினார்.

பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகத்திற்கு தலைமை தாங்கிய இவர் பல குடிநீர்க்கிணறுகள் தற்காலிக வீடுகள் பல வாழ்வாதாரத்திட்டங்களையும் அறிமுகப்படுத்தினார். இக்கழகத்தின் குடிநீர்விநியோகச் சேவை, புனர்வாழ்வு நிவாரணச்சேவை பூநகரி மக்களால் பெரிதும் போற்றிப் பாராட்டும் பெற்றது. பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம் என்ற அரசசார்பற்ற நிறுவனத்தினை தோற்றுவித்து அதன்மூலம் மக்களுக்கு பன்முகப் பணியாற்றும் பெரிய நிறுவனமாக பல வெளிநாட்டு நிறுவனங்களது உதவி பெற்று வளர்ச்சியடைச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தினூடான சமூகப் பணி

இந்த இல்லத்தினை யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற சிறார்களைப் பராமரிப்பதற்காக மகாதேவா ஆச்சிரம முதல்வர் தவத்திரு கணேசானந்த மகாதேவா சுவாமிகளுடன் இணைந்து நெருக்கடியான காலத்தில் தோற்றுவித்தார். 6 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த இல்லம் இன்று 426 க்கு மேற்பட்ட ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரித்துக் கல்வி வழங்கும் பெரிய நிறுவனமாக உயர்ந்து நிற்கிறது. இங்கு இணைக்கப்பட்ட குழந்தைகளது கல்வியை மேம்படுத்த 29 ஆசிரியர்களை நியமித்து இழந்த கல்வியை மீளப்பெற நடவடிக்கை எடுத்து வருவது பலராலும் பாராட்டப்பட்டுள்ளதுடன், பரதநாட்டியம், சங்கீதம், கிராமியக் கலைகள், அனைத்தும் பயிற்றுவிக்கப்பட்டு இக்குழந்தைகள் முன்னிலையில் திகழ்கிறார்கள். இக்குழந்தைகளது காத்தவராயன் சிந்து நடைக்கூத்து 19 தடவைகள் பல கோயில்கள் உட்பட மேடையேறிப் பாராட்டைப் பெற்றுள்ளது. கராத்தே கலை பயிற்றுவிக்கப்பட்டு பெண் குழந்தைகள் உட்படப் பலர் பங்கு பற்றி மாவட்ட, மாகாண மட்டத்தில் பல பதக்கங்களைப் பெற்றுள்ளனர். இந்த ஆண்டு மாகாணக் கராத்தே போட்டியில் பங்கு பற்றி எமது குழந்தைகள் 60 பதக்கங்கள் பெற்று பாராட்டைப் பெற்றுள்ளனர்.

இந்த இல்லக் காணிகளை பலத்த முயற்சியின் பின் இராணுவத்தினரிடமிருந்து மீளப் பெற்று 63 மில்லியனுக்கு மேல் செலவு செய்து திருத்தி குழந்தைகள் சிறந்த முறையில் வாழ உதவினார். இவ்வளவு பெருந்தொகை நிதியை பெற்று இல்லத்திலிருந்து இதனைத் திருத்த இவரைத் தவிர எவராலுமே முடியாது எனப் பலர் புகழ்ந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரிலும் தங்கியிராது தூர நோக்குடன் எதிர்காலத்து இல்லத்தின் பேண்தகு நிலையை உறுதிப்படுத்தும் வகையில் கொடைவள்ளல்கள் அன்பர்களிடம் பல வயல் தென்னந் தோட்ட நிலங்களை அன்பளிப்பாகப் பெற்றும் விலைக்கு வாங்கியும் அபிவிருத்தி செய்து நிரந்தர வருவாயை பெறும் வழியை ஏற்படுத்தியுள்ளார்.

இந்த வகையில் பூநகரி தியாகத்தில் 198 ஏக்கருக்கு மேல் அன்பளித்த திரு க.பரமலிங்கம் அவர்களது காணியைத் திருத்தி நெல் பயிரிட ஏற்பாடு செய்ததுடன் கிராஞ்சியிலும், புதுமுறிப்பிலும் தென்னை பயிரிட நடவடிக்கை எடுத்தார். இதன் மூலம் இல்லத்தின் தேங்காய், அரிசியில் இன்று தன்னிறைவு காணும் நிலை ஏற்பட்டுள்ளது. எதிர் காலத்தில் இவரால் பெறப்பட்ட 250க்கு மேற்பட்ட ஏக்கர் கொண்ட தென்னந்தோட்டங்களும், 250 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்களும் இந்த இல்லத்தின் வளர்ச்சிக்கும் நின்று நிலைத்து சமூக, சமயப் பணியாற்றவும் அடித்தளமாக இருக்கும். வருங்காலத்தில் இல்லம் செழித்தோங்க இவை உறுதுணையாய் அமையும்.

இந்த இல்லத்திலிருந்து கல்வி கற்றவர்களில் ஏற்கனவே பொறியியலாளர் மற்றும் பட்டதாரிகளாகி வெளிநாட்டில் இருக்கிறார்கள். மேலும் பல விஞ்ஞான, பொறியியல், கணக்கியல் பட்டதாரிகள் உருவாக இவரால் ஆழமான அடித்தள மிடப்பட்டுள்ளதை பலரும் வியந்து பாராட்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம் ஊடான சமூகப்பணி

இவர் அரச அதிபராக இருந்த காலத்தில் முதியோர்கள் பட்ட அவலத்தினைக் கண்ணுற்று இவர்களுக்கான இல்லம் அமைக்கப் பலரிடமும் கோரிக்கைகள் விட்டார். எனினும் 1996ம் ஆண்டு ஏற்பட்ட யாழ் இடப்பெயர்வு இத்தேவையை இட்டு பாரிய அழுத்தம் சமூகம் மீது ஏற்படுத்தியது. யாழ் இடப்பெயர்வின் போது கிளிநொச்சிக்கு வந்த வங்கியின் உயர் அதிகாரியாகவுமிருந்து ஓய்வு பெற்றவர் ஒருவர் ஆதரிக்க எவருமின்றி தெருவிலே இறக்க நேர்ந்தது. பல முதியவர்கள் தெருவே சீவியமாக இருந்த காட்சியால் உடனடியாக பல வளங்களையும் திரட்டி யோகர் சுவாமி திருவடி நிலைய நிர்வாகிகளுக்கு கொடுத்து வன்னேரிக்குளத்தில் 165ற்கு மேற்பட்ட முதியோரைப் பராமரிக்க உதவியமை பெருமதிப்புடன் நினைவு கூரப்படுகின்றது. இதற்கான பாரிய கட்டடங்களை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனம் மூலம் நிதி பெற்று முதியோர் வசதியாக வாழ வழிசமைத்தார்.

இடப்பெயர்வின்போது சகலரையும் பத்திரமாக வவுனியா நகர்த்தியதுடன் மீண்டும் இந்த இல்லத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று இராணுவத்திடமிருந்து இந்த இல்லத்தின் காணிகளை அண்மையில் பாரமேற்று அதனை இயக்க கட்டடங்களைத் திருத்த நடவடிக்கை எடுத்து தற்போது முதியோர் இல்லம் இயங்கத் தொடங்கியுள்ளது. இந்தச் செயற்பாடு பாரிய வரவேற்பைப் பெற்றுள்ளது.

யோகர்சுவாமி திருவடி நிலைய கோவிலைத் திருத்தி தற்போது பூசைகள் இடம்பெற வழிவகுத்துள்ளார். எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணின் உயர்வுக்காக ஆன்மீக ரீதியில் பாடுபட்ட யோகர்சுவாமிகள் நினைவு கூரப்படுகின்றது பாராட்டுக்குரியது. அதேவேளை A9 வீதியிலுள்ள யோகர்சுவாமி திருவடி நிலைய தியான மண்டபக் காணியை இராணுவத்திடமிருந்து மீளப்பெற்றுக்கொள்ள துணிந்து நடவடிக்கை எடுத்து வருவது போற்றப்படுகிறது.

## இனிய வாழ்வு இல்லத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

செவிப்புலனற்ற விழிப்புலனற்ற குழந்தைகளைப் பராமரிக்க எதுவித ஏற்பாடும் இவர் அரச அதிபராக கிளிநொச்சிக்கு வந்தபோது இருக்கவில்லை. இதனை அமைக்க பலரைத் தூண்டியும் சாத்தியமாகவில்லை. அப்போது இருந்த அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று வட்டக்கச்சியில் அமைக்க முயன்றது. இம்மாவட்டத்திலே 10க்கு மேற்பட்ட இல்லங்கள் இருப்பதால் இதனை முல்லைத்தீவுக்கு நகர்த்தி அம்மக்களும் அதில் பங்கேற்க ஆவன செய்யுமாறு கோரினார். அவர்கள் தங்களுக்கு வளம் இல்லை என்று கூறித் தட்டிக்கழிக்க பார்த்த போது வள்ளிபுனத்தில் இவ் இல்லத்தினை அமைக்க உரிய கொட்டில்கள் மூன்று அமைக்கவும் உதவியதுடன் 6 மாதங்களுக்குரிய பராமரிப்புச் செலவையும் இவர் வழங்கியுதவி ஆரம்பிக்க ஏற்பாடு செய்ததுடன் மனிதநேயம் மூலம் பராமரிப்பு உதவி உட்பட கட்புல சாதனங்களைப் பெற்றுக் கொடுத்து இன்று விழிப்புலனற்ற குழந்தைகள் 10 பேருக்கு மேல் பல்கலைக்கழகம் சென்று கல்வி கற்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றுக்கொடுத்த நிலை நன்றியுடன் நினைவு கூரப்படுகின்றது. யுத்தத்தின் பின்னும் இதனை ஆரம்பிக்க மனிதநேயம் மூலம் உதவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெற்றிமனையின் உதயமும் முன்னேற்றமும்**

மனநலம் பாதிக்கப்பட்டவர்களை பராமரிக்க யுத்த காலத்தில் எதுவித நிறுவனமும் இல்லாத நிலை இருந்தது. ஸ்கந்தபுரத்தில் இருந்தபோது மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவர் ஒவ்வொரு நாளும் காவோலைகளை இழுத்தபடி காலை இவர் இருந்த விடுதி வழியாகப் போவது இவரை வாட்டியது. இதனை நண்பர்கள் உறவினர்களிடமும் மருத்துவ உத்தி யோகத்தர்களிடமும் எடுத்துக்கூறி ஸ்கந்தபுரத்தில் திரு கொத்தலாவலையுட்பட்ட பல தென்பகுதிக் கொடை வள்ளல்களிடம் உதவி பெற்றும் அரச உதவியுடனும் "வெற்றிமனை" என்ற பெயரில் மனநலம் பாதிக்கப் பட்டவர்களுக்காக இந்த இல்லத்தினை ஆரம்பித்து நல்ல முறையில் பொதுமக்கள் உதவியுடன் நடாத்தி மனநலம் பாதிக்கப்பட்ட பலரைப் பராமரித்து குடும்பத்துடன் இணைந்து வாழ்வளிக்க வழிசமைத்தார். பிற்காலத்தில் இந்த நிலையம் கைமாறிப்போனாலும் மனநலம் பாதிக்கப்பட்டவர்க்கான காப்பகம் ஆரம்பிக்கப்பட உந்து சக்தியாக இருந்தமை பாராட்டப்படு கின்றது.

## இவரது சமயப்பணி

### 01. அறநெறிப்பாடசாலை அபிவிருத்திக்கு உத்வேகம் அளித்தல்

கிளிநொச்சி மாவட்டத்தில் இவர் அரசாங்க அதிபராக வந்தபோது 3 அறநெறிப்பாடசாலைகளே இருந்தன. 55க்கு மேற்பட்ட அறநெறிப்பாடசாலை அமைக்க கோவில்களை ஊக்குவித்ததுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மாமன்றம் இந்து கலாசார அமைச்சுடன் இணைந்து பல பயிற்சி நெறிகளையும் பாடப்புத்தகத்தினையும் பெற்று ஊக்கமூட்டியுள்ளார்.

தான் தலைமை தாங்கும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் உருத்திரபுரீசுவரர் ஆலயம் மூலம் அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பித்து நடாத்துவதுடன் ஏனைய அறநெறிப் பாடசாலைகளையும் ஊக்குவிக்கும் செயல்பாடும் அவர்களுக்கு பயிற்சியளித்தல், தலயாத்திரைக்கு அழைத்துச் செல்லல் ஆகிய செயற்பாடுகள் உயர்வாக மதிக்கப்படுவதுடன் போற்றப் படுகின்றது.

## உருத்திரபுரீசுவரர் ஆலயத்தின் குடமுழுக்கு

இலங்கையில் வரலாற்றுப் பெருமை கொண்ட ஆலயங்களில் உருத்திரபுரீசுவரர் சிவாலயமும் ஒன்று நாற் சதுர வடிவுடைய ஆவுடையார் கொண்ட பழைய லிங்க வடிவில் உருத்திரபுரீசுவரர் ஒரு ஓலைக் கொட்டிலில் அருளாட்சி செய்து வந்தார். இவரது முயற்சியால் நெருக்கடியான காலத்திலும் பொது மக்கள் உதவியுடன் 26 லட்சம் ரூபா செலவில் கோவில் அமைத்து குடமுழுக்கு 1988 ல் செய்யப்பட்டது. இதே போல பூநகரி பொன்னாவெளி அண்ணாமலை சிவாலயம் பாரம்பரிய வரலாறு கொண்ட ஈழவூரில் அமைந்துள்ளது. அங்கு குடியிருந்த நூற்றுக்கணக்கான மக்கள் வெளியேறி சிவாலயம் அழியும் நிலையிலிருந்ததுடன் பூசைகள் 20 ஆண்டுகளாக நடை பெறாதிருந்தது. இதனைப் பொதுமக்கள் உதவியுடன் புனரமைக்க நடவடிக்கை எடுத்து பூசைகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டதுடன் திருப்பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சோழர் காலத்து அழிந்து போயுள்ள வரலாற்றுப் பெருமை மிக்க மண்ணித்தலை சிவாலயத்திற்கு அருகில் புதிதாகக்கோவில் கட்ட மக்கள் துணையுடன் ஏற்பாடுகள் செய்துள்ளார். அழிந்து போயுள்ள சிவ வழிபாடு கிளிநொச்சியில் மீள எழுச்சி பெற பலரது துணையுடன் செயற்பாடுகள் இவரால் முடுக்கி விடப்பட்டுள்ளது. இவற்றுக்கு பாரிய நிதி தேவைப்படும் நிலை அவருக்கு மனதை உருக்கியது தற்போது நிதி பலராலும் வழங்கப்பட்டு வருகின்றது.

## 01. மகாதேவா ஆச்சிரமத்துக்கான பங்களிப்பு

மகாதேவா ஆச்சிரம பிரதம சுவாமிகள் கணேசானந்த மகாதேவா சுவாமிகளுடன் இணைந்து பல சமயப்பணிகளைக் கிளிநொச்சியில் முன்னெடுத்ததுடன் யுத்தத்தினால் அழிவுற்ற நிலையிலிருந்த ஆச்சிரமத்தினை நிதி பெற்று நல்லமுறையில் திருத்தி உதவியதுடன் ஆச்சிரமச் சுவாமிகளுக்கு ஓட்டோ வாகன வசதி செய்து சமயப்பணியை விரிவுபடுத்த உதவியதனால் இப்பகுதியில் மகாதேவா ஆச்சிரமத்தால் நல்ல பணிகளைத் தொடர்ந்தும் செய்ய முடிந்துள்ளது.

## மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் புதுமுறிப்பு சிவாலயத்தின் வளர்ச்சி

மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தின் குழந்தைகளது வழிபாட்டிற்காக கட்டப்பட்ட சிவன்கோவிலை அப்பகுதி மக்களுக்கு கையளித்து பொதுமக்கள் மயப்படுத்தி சகல ஊர்மக்களது வழிபாட்டிற்கும் திறந்து விட்டார். அதுமட்டுமன்றி இல்லத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலை பொதுமக்களதும் வழிபடுவோரதும் சொத்தாக்கி சிறப்புறத் திருப்பணி செய்யப்பட்டு பூசைகள் நடைபெறுகிறது. ஊர்மக்களால் இச்செயற்பாடு வியந்து போற்றப்படுகின்றது.

குருகுல வளாகத்தில் இருந்த சர்வசக்தி அம்மன் ஆலயம் அழிவுற்ற நிலையில் இருந்தது. அம்மன் சிலையை முள்ளிவாய்க்காலில் இருந்து எடுத்து வந்து மகாதேவா ஆச்சிரமத்தில் பாதுகாப்பிற்கு வைத்த போது அதனை நிர்வாகம் திரும்பத்தர மறுத்த நிலையில் புதிய சிலையை வார்த்து பல லட்சம் செலவு செய்து குடமுழுக்குச் செய்து நித்திய பூசை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## சமய நிறுவனங்களில் பங்கேற்றுப் பணியாற்றி பதவி வகித்தல்

கடந்த 20 ஆண்டுகட்கு மேலாக திருக்கேதீஸ்வரம் திருப்பணிச்சபையின் நிருவாகத்தின் உபதலைவரில் ஒருவராகவும் சமூக சேவைக்குழுவின் உறுப்பினராகவும் பங்காற்றி பல சேவைகட்கு உறுதுணையாக இருந்தார்.

உருத்திரபுரீசுவரர் ஆலய அறங்காவல் சபைத் தலைவராகக் கடமையாற்றி இக்கோவிலுக்கு 130 ஏக்கருக்கு மேல் காணிகளைப் பெற்றுக்கொடுத்ததுடன் பல அபிவிருத்தி வேலைகளைச் செய்தமை.

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் நிர்வாகக் குழுவிலிருந்து செயலாற்றுவதுடன் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பிரதிநிதியாகச் செயல்படுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர் பெற்ற விருதுகள்

இவரது மகத்தான நிருவாக மற்றும் பொதுப்பணிகளைப் பாராட்டி அகில இலங்கை கம்பன் கழகத்தினால் ஆளுமைமிக்க சமூகத்தொண்டுக்கான கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்.

யாழ்ப்பாணக் கல்லூரியிப் பழைய மாணவர் சங்கத்தினால் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று சமூகத்திற்கு சமூக சமய கலை இலக்கியப் பணியிலும், சிவில் சேவையிலும் உயரிய தொண்டாற்றியதற்காக இவருக்கு 2008ம் வருடம் மார்ச் மாதம் 30ம் திகதி மகத்தான சேவையாளருக்கான விருது வழங்கப்பட்டது.

கரைச்சி பிரதேச செயலக கலை பண்பாட்டுப் பேரவையால் கிளிநொச்சி மாவட்டத்தில் சமய சமூக மற்றும் பொதுப்பணியைப் பாராட்டி "கரை எழில்" விருது 2012 ஐப்பசியில் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது "யாழ் விருது" யாழ் மாநகர சபையால் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நவாலி கேமலதா நிறுவனம் சமூகச்சுடர் என்னும் விருது வழங்கி மதிப்பளித்துள்ளதுடன் லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட சர்வதேச இந்து மன்றம் இவரது மகத்தான சமய ஆன்மீக சமூக சேவையினை மதிக்கும் வகையில் விருது வழங்கிப் பாராட்டியுள்ளது.

இவ்வாறாக மானிடம் போற்றும் மா பெரும் பணிகளை நிர்க்கதியாக்கப்பட்ட எம்மக்களுக்கு செய்த நினைவழியாப் பெருமனிதன். இவரது பெருமை என்றும் அழியாப்புகழ் பெற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப உறவுகளின் உள்ளங்களிலிருந்து

## *மகளின் உள்ளத்திலிருந்து!*

பேனா எடுத்தவுடன் பந்தி பந்தியாக எழுதவரும் எனக்கு, அப்பா உங்களுக்காக என்னால் எதுவும் எழுத முடியவில்லை. நான் மூன்று பெண் குழந்தைகளுக்கு தாயாக இருக்கின்றேன். என் ஆத்மா, என் வெற்றி, என் துணிவு, என் பெருமை, என் நேர்மை, என் நேசிப்பு எல்லாம் என் அப்பாதான் என்பது உங்களுக்கு தெரியும். அப்பா இல்லாமல் நான் என் வாழ்க்கையில் உடைந்து போவேன் என்பது தெரிந்தும் பலமுறை மரணத்துடன் போராடி மீண்டு வந்த உங்களுக்கு இம்முறை இயலாமல் போனது......? கவனம் அப்பா கவனம் அப்பா என்று எத்தனை முறை சொல்லிருப்பேன் எனக்கு நீங்கள் வேண்டும் என்பதற்காக!

அழுத்தி பதிக்கும் முத்தம் என் வாழ்க்கையில் இனி இல்லை இதற்கான என் ஏக்கம் அழுகையோடு தான் கரைந்து போகின்றது.

அதி உன்னதமான ஒரு தந்தைக்கும் ஒரு மகளுக்கும் இடையிலான பாசப்பிணைப்பை எப்படி அப்பா எழுதுவது, எனக்கு இந்த உலகத்தில் இனி எது கிடைத்தாலும் அது நீங்கள் இல்லாது எப்போதும் வெறுமையே....

எல்லோருக்கும் எல்லாம் செய்த உங்களால் எங்களுக்கு நீங்கள் தான், நீங்கள் மட்டும்தான் வேண்டும் என்று தெரிந்தும் உங்களால் ஏன் அதை தர முடியாது போனது.....? கண்ணீரோடு கரைந்து கொண்டிருக்கும் அம்மாவிற்கு யார் ஆறுதல் அப்பா உங்களைத் தவிர ....

கண்ணீருடன் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

**மகள்**

**சசிந்தா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா !

ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பு !
அமரர் தம் கனவை நனவாக்குவதே எம் பிழைப்பு!

தூங்காத் துயருடன்
சசிகரன் (மகன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Appappa

Appappa We were shocked when we heard the sad news through our selvi athai. I really couldn't believe that you are no more. We think still you are in Jaffna and will talk to us on the phone. I still remember your smiling face. My mom told me "I am the first grand son" in our family. I am really proud that I am the boy whom you carried in your hands as first grand son. My mom brought back her memory "thamby thumby uthirar". Do you remember appappa?

Thees are your words. When I come to know this, my eyes fill with tears. We couldn't attend the funeral because of the delay of the passport renewal... we felt very sorry that we couldn't give the last respect and salute by holding "neipantham"

My mom was explaining us about your



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

designation. I am really proud of you appappa. I went through Mahadeva ashram web site and knew all about the details and the big social service that you have done after the retirement. You are really great appappa. Hats off.

I remember when you were talking on the phone with my dad, you told me to work hard on my studies and you wanted me to be a big person like you, I promiss you appappa, I will do my best to follow your path to be a good citizen. Some people say the people who went near the almighty, will be the stars in the heaven. If it is true, will you be watching my sister Deshu and me? we need your blessings appappa. I will find you among the stars appappa and show you to Deshu too. very pity of her. She was sadly saying she has never seen you. I said Deshu not to worry, appappa can watch and see you from the heaven, now he has that much of power she agreed.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*At least we make a big salute to you appappa on behalf of our family.*

*"GOOD BYE APPAPPA"*

***- Your grand children***
***Javin and Deshu***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகள் பேரப்பிள்ளைகளின் உள்ளத்திலிருந்து

மாமா!

நீங்கள் எனக்கு மாமனார் அல்ல இன்னொரு அப்பா.

நீங்கள் என்மேல் செலுத்திய பாசத்திற்கும் நம்பிக்கைக்கும் அளவே இல்லை. உங்கள் நம்பிக்கையை காப்பாற்றுவேன். நீங்கள் என்றும் என் மனதில் ஒரு கடவுளாக வாழ்வீர்கள்
உங்கள் சாய்.

*Appappa I miss you so much. I always pray to your before school and I'm very sad that you are no layer with us.*

**- Layah**

*Dear appappa I hope that you are peaceful in heaven we all dearly miss you. I will never forget that you taught me always to persevere and I will try to for fill you ambition.*

**- much love Jayden vel (selvavel)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு தாத்தா !

பெரும் பேறாய் எனக்கு
கிடைத்த தாத்தாவே ?
கரம் பிடித்து கதை பல
சொன்ன தாத்தாவே
உங்கள் எந்தப் பேரக் குழந்தைகள்
யாரும் செய்யாத் தவம்
நாம் செய்து பிறந்தோம்
உங்கள் கைபிடித்து கூட
வளர்வதற்கு
சிறு துரும்பும் உறுத்தாது
கண்ணுக்குள் மணியாய்
காத்தீர்கள்!
கேட்டதெல்லாம் கணப்பொழுதில்
கையில் தந்தீர்களே!
கூழாக குழைத்து
ஊட்டும் இடியப்பத்தின் - சுவை
நாக்கில் இன்னும் ஊறுகிறது தாத்தா !
உங்கள் கருணையை அரவணைப்பை
நாம் கதை கதையாய் கூறமுடியும்.
தாத்தா நீங்களும் நாங்களும் செய்த
குறும்புகள் யாருக்கு தெரியும்?
படி படி என்ற அம்மாவின்
தொல்லையில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு பொழுது
எமைக் காத்து
பத்திரிகை படிப்பது போல் பாசாங்கு
செய்து
முதுகுக்கு பின்னால்
அடைக்கலம் தந்து
Phone உம் தந்து Game ம் தந்து
எமை மகிழ்வித்த தாத்தா !
தலை தடவி தயவு சொல்லி
தரணியில் வாழும் வாழ்க்கை
சொன்ன தாத்தா
எம் குழந்தை பருவத்தை வாசமாக்கிய
எம் தாத்தா !
தாத்தா எங்கே என்றால்
அம்மா,
"தாத்தா வருவார் நாளைக்கு"
நாமும் தாத்தா வருவார் நாளைக்கு
என காத்திருக்கின்றோம்
ஆருயிர் தாத்தாவிற்காய்..... ?

**பேரப்பிள்ளைகள்**
**ஜனுமேனன், சாஹித்யா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகளின் உள்ளத்தில் இருந்து

பூநகரி பூமலர்ந்த
புனிதவனே எங்கள் மாமா
புரிதவனத்தின் பலன்
அவளாய் கமலாதேவி
மனைவியானார்"
பூர்த்தவுங்கள் புரிதல்
மக்கள் நால்வரவர்
உம் நல்வழியில்!
நன்மக்கள் போற்றினிக்கும்
நாயகனே எங்கள் மாமா.
பூநகரி ஆ த க பள்ளி
சென்றாய் ஆரம்ப
கல்வியிர்க்காய்!
ஐந்தாண்டில் ஆகிவிட்டாய்
அறிவிதனில் சிறந்தவனாய்.
அழைத்ததுனை
பூநகிரி மகாவித்தியாலம்
அறிவுபெற ஆகும்வரை
பேராதனை மாணவனாய்
அறிவு பெற்றாய்
யாழ் இந்துதனில்!
சிறப்படைந்தாய்
சித்திபெற்றாய்
சிரித்துமீண்டாய் பூநகரி
மண்ணிற்கே
நம்மக்கள் நன்மைபல
பெற்றிடவே நாளும் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை செய்தாய்,
நளிரந்த மக்கள் சிலிர்த்து
நின்றார்
நின்சிறப்பு சேவைதனில்!
பூநகரி கூட்டுறவு பூத்ததுவே
உந்தன்வழி புதுமையுடன்!
மாநகரின் மக்கள் மனம்
மகிழ்ந்திடவே மாற்றுவழி
திட்டமிடல்,
பாரவூர்தி திட்டமதை
பகர்ந்தவுந்தன்
பணிபெரிது!
பாதைதனை சீரமைத்த
பன்முகத்து அற்றலது
பரவியது யடிாழினிர்க்கும்!
ஏற்றம் பெற்றாய்
எம்மினத்தின் சேவகனாய்
அரசாங்க அதிபரென்
எடுத்த பணி சிறப்புடனே
ஐந்தாண்டு காத்துநின்றாய்!
அதிலிருந்து ஓய்வுபெற்றாயள்
அகமகிழ ஆச்சிரமத்தின்!
மகாதேவா ஆச்சிரமத்தில்
மகத்தான பணியதனை
முழுநேரம் தாங்கி நின்றாய்!
மாசற்று நீர் செய்த
சேவைதனை மனமென்னி
மகிழுதய்யா! மக்களுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடுகிறார் மழலையெலாம்
வாடுகிறார் மறைந்தவுங்கள்
உடலதனால். மறையாது
உம் நினைவு

மறக்காது பூநகரி மண்ணென்றும்
உமைஐயா! மனமாறவேண்டுகிறோம்
உம் மனைவி மக்கள்தனை!
இறையருளின் ஆசியினால்

இவராத்மா சாந்திபெற
இயைன்றவரை வேண்டுகின்றோம்

**- உங்கள் மருமகன் கவீர்**
**மற்றும் உறவுகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாத்தா!

தாத்தா. தாத்தா என அன்போடு அழைத்திடும் எம்மைத் தங்க மனதோடு தாவி அணைப்பீர்கள். நல்ல மனதோடு அறிவுரைகள் கூறுவீர்கள். பண்டிகைகள் பல வந்தாலும் அதிகாலையில் தொலைபேசியில் முதலாமவராக அன்போடு வாழ்த்துவீர்கள். உமது ஆசீர்வாதத்தால் ஆண்டு முழுவதும் எமக்கு நல்லதே நடக்கும் தாத்தா. பரீட்சைக்குத் தோற்றும் போதெல்லாம் வாழ்த்தியனுப்புவீர்கள்.

நாம் படிப்பை முடித்து ஒரு நல்ல நிலையை அடைவதற்கு முன்னே நீங்கள் எம்மை விட்டு ஏன் விரைவில் பிரிந்தீர்கள் தாத்தா? இதை எண்ணும் போதெல்லாம் எம் மனம் குமுறுகிறது. உங்கள் வண்ண முகம். வடிவுச் சிரிப்பு. அழகு நடை. அன்புப் பேச்சை இனி நாம் எங்கு காண்போம். உங்களது பிரிவைத் தொலைபேசியில் கேட்டு நாம் செய்வதறியாது பேரதிர்ச்சியில் துடித்தோம். இனி எவராலும் உங்களது இடத்தை ஈடுசெய்யவே முடியாது. உங்களது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**- பேரன்**
**காண்டீபரன் ரிஷோபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையின் உறைவிடம் உறங்கியது

நேர்மைக்குள் இல்லறத்தையும் சேவைக்குள் துறவறத்தையும் அன்புக்குள் ஆன்மீகத்தையும் ஆட்சிசெய்து மக்களின் மனதில் என்றும் மறவாத இடம் பிடித்தவர் எங்கள் அன்புக்கும் பாசத்திற்கும் எங்கள் நெஞ்சில் நிரந்தர இடம் கொண்டவருமாகிய ஐயா இராசநாயகம் அவர்கள்.

அரசியல் பணியில் தொடங்கியவர் ஆன்மீக ஈடுபாட்டால் கவரப்பட்டு காலத்தின் கோலத்தால் வந்த அழிவுகளை கண்ணுற்று, கவலையடைந்தவர் சமூகப் பணியை தன்தலையாய கடமையாக ஏற்று அதில் சேவை, நேர்மை, உண்மை, தர்மம், அன்பு, பாசம் போன்ற அத்தனை நற்குணங்களையும் சுயநலமற்ற தன்வாழ்வின் இலக்கணமாக்கினார்.

ஆரம்ப வயதிலேயே மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை நன்கு உணர்ந்தவர் பல வருடங்களுக்கு முன்பு இங்கிலாந்தில் மேல் படிப்புக்காக வந்திருந்தபொழுது என்போன்ற பல நண்பர்கள் அவரை திரும்பிப்போக வேண்டாம். போர்க்காலம் குடும்பத்தையும் இங்கிலாந்துக்கு அழைத்து இங்கு நிம்மதியாக வாழலாமே என்று கூறியபோது நான் நாட்டிற்கு சேவை செய்வதற்காக பிறந்தவன் என் சேவையை மதித்து தான் என்னை இங்கே அரசாங்கம் மேல் படிப்புக்காக அனுப்பியுள்ளது. என் நாட்டையும் மக்களையும் நேசிப்பவன் நான் என்று கூறி இலங்கை திரும்பிய நாட்டுப் பற்றாளன். சுயநலவாதியாக இருந்திருந்தால் இங்கிலாந்திலேயே பெரிய பதவியுடன் குடும்ப சமேதரராக ராஜயோக வாழ்க்கை வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவரது கனவெல்லாம் சேவை, நேர்மை, உண்மை, உழைப்பு, என்பதுவே.

அன்றைய சூழ்நிலையில் இது சாத்தியப்படுமா என்று சிறிது கூட சிந்திக்காமல் துணிவும், நேர்மையும், தியாகமும், உண்மையும், கடின உழைப்பும், சேவை மனப்பான்மையும் எதையும் சாத்தியமாக்கும் என்று திடமாக நம்பி தன் கடமையில் தவறாமலும் உன்னத உழைப்பின் மூலம் அரச அதிபர் பதவியைப் பெற்றதுமல்லாமல், பல பெரிய அரச அதிகாரிகளையும் தன் உண்மையாலும் சேவையாலும் கவர்ந்தவர். அந்த உண்மையான நடத்தையில் மூலம் பல காரியங்களை இலகுவாக சாதித்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தியாகத்தின் திரு உருவம். பிறர் பிள்ளை தலை தடவ தன்பிள்ளை தானே வளரும் என்பது பழமொழி. அந்தப் பழமொழியின் இலக்கணமாக திகழ்ந்த மாமனிதர் இவர். இருபது ஆண்டுகளுக்கு மேலாக மகாதேவா ஆச்சிரம சைவச்சிறுவர் இல்லத்தை அமைத்து எத்தனையோ ஆயிரம் குழந்தைகளுக்கு தாயும். தந்தையுமாய் இருந்து கடைசிவரை அவர்கள் நலனே தன் நலமென தனது உடல் நலத்தில் கூட கவனம் செலுத்தாமல் இறுதி வரை ஆச்சிரம சிறுவர்களுக்காக போராடியபடி தன் வாழ்வைத் துறந்தவர்.

அவருடைய சேவையை இங்கு கூறுவதனால் அது ஒரு புத்தகமாகிவிடும். அவரை அறிந்த நல்ல உள்ளங்கள் அத்தனை பேருக்கும் அவைகள் நன்றாக புரியும். ஆதரவற்ற சிறுவர்கள். இல்லங்கள். முதியோர் இல்லங்கள், வாழ்விழந்த பெண்கள் இல்லங்கள். ஊனமுற்றோர் இல்லங்கள்என பல சமூகசேவை இல்லங்களை நிறுவுவதற்கும் அவைகளுக்கு பொருள் ஈட்டிக் கொடுக்க உலகளாவிய ரீதியில் தனக்கிருந்த தொடர்புகளையெல்லாம் தன் உண்மையான சேவையால் அரவணைத்து பொருள் ஈட்டி அவைகளுக்கு தலைமை தாங்கியும் வழிநடத்தியும் சேவை செய்த பெருந்தகை.

காலத்தின் கோலத்தில் பல இழப்புகளையும் அழிவுகளையும் சந்தித்த இவர் தன் அகவையில் சிறிதளவும் மனம் தளரவில்லை. சிவன்மேல் அதீத பக்தி கொண்ட இவர் யாவும் அவன் செயல். நிச்சயம் வெற்றிபெறுவோம் என்று அயராது போராடி தன் முயற்சியில் வெற்றியும் கண்டவர்.

இன்று வடமாகாணத்திலும் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்திலும் இவரின் உண்மையான சேவையை அறியாதவர்கள் இருக்க முடியாது. சுயநலம் முன்னின்று கூத்தாடுகின்ற இந்தக் காலத்திலே தன் தர்ம சிந்தனையையும். தன்னலமற்ற உண்மையான சேவையையும். நேர்மையையும் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான உள்ளங்களில் இடம் பிடித்தவர் நம் இராசநாயகம் ஐயா.

பல விதமாக புலர்பெயர் உறவுகளும் உள்ளூர் மக்களும் அந்தந்த காலத்திற்கு ஏற்ப செய்த உதவிகளை நினைந்து தன்சேவையை தலை நிமிர வைத்தன என்பதை பலமுறை நன்றியுடனும். பெருமையுடனும் என்னிடம் சொல்லியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான பெருந்தகை இன்று நம்மிடையே இல்லை. அவர் பூத உடல் மறைந்தாலும் புகழ் உடல் மறையாது. அவர் ஆக்கிவைத்த சிறுவர் இல்லங்கள். மற்றும் மேலே கூறப்பட்ட சகல சேவை இல்லங்களும் சீரும் சிறப்புடனும் அவர் காட்டிய பாதையில் வழிநடாத்தப்பட்டு இல்லக் குழந்தைகளினதும். மற்ற மக்களினதும் சிரிப்பில் இறைவனைக் காண்போம். இவர்களின் முகமலர்ந்த சிரிப்பு இவர்கள் வாழ்வில் முன்னேற்றத்தில் தான் உள்ளது அது உதிர்ந்து விடாமல் எங்கள் உதவிக்கரங்களை நீட்டுவோம்.

இவர் ஓர் உண்மையின் உறைவிடம். நேர்மையின் இருப்பிடம் இன்று மீளாத்துயில் கொண்டு விட்டார். அவரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன். அவர் நமக்கு காட்டிய நல்வழியில் நடந்து நம் உயிர் உள்ளவரை அவர் நினைவுடன் நேர்மையான தன்னலமற்ற சேவையில் ஈடுபடுவோம் என்று சங்கல்பம் எடுத்து வாழ்வோமாக!

இத்தகைய அரிய பெரிய அறிஞனை இழந்து மீளாத்துயரில் அல்லலுறும் அவரது குடும்பத்தார் அனைவருக்கும் ஆண்டன் ஆறுதல் அளிக்க பிரார்த்திப்போமாக!

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !**

**கு.வி. பஞ்சலிங்கதுரை**
**முதன்மை ஆலோசகர்**
**லண்டன் பிரதிநிதி மகாதேவாசிறுவர் இல்லம்**
**அருமை நண்பர் லண்டன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர் - வட மாகாணம்
විනිසුරු සී.වී. විග්නේශ්වරන්
ප්‍රධාන අමාත්‍ය - උතුරු පළාත
Justice C.V.Wigneswaran
Chief Minister – Northern Province

Ministry of Finance and Planning, Law and Order, Lands, Electricity, Housing and Construction, Tourism,Local Government, Provincial Administration, Rural Development, Road Development,Motor Traffic and Transport

எனது இல / My No: NP/CM/Greetings/21/11/2017

திகதி / Date: 21.11.2017

# உழைப்பால் உயர்ந்தவர்......

இந்தப் பூமியிலே வாழ்கின்ற போது உண்மையாகவும் நேர்மையாகவும் மற்றவர்களுக்குச் சேவை செய்யும் ஒரு வாழ்க்கையை வாழ்கின்றவர்கள் நிறைவான வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் ஆவார்கள். அத்தகைய தன்மை மிக்க ஒரு நிறைவு வாழ்க்கையை வாழ்ந்து இறைவனடி சேர்ந்திருக்கும் மதிப்பிற்குரிய முன்னைநாள் அரச அதிபர் திரு. தி. இராசநாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாறு ஏனைய மக்களுக்கு ஒரு முன்னுதாரணமாகும்.

வளமான பூநகரி பகுதியில் உதித்த இவர் தனது கடுமையான உழைப்பின் மூலம் உயர்நிலையை அடைந்தது மட்டுமன்றி தமது பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளை கல்வி அறிவில் மேம்படச் செய்ததுடன் அவர்களை அரசசேவைகளில் இணைத்துக் கொள்வதற்கு அரும்பாடுபட்டவர். தனது பிறந்த ஊரின் முகவரிக்கு பெருமை சேர்த்தது மட்டுமல்லாமல் கிளிநொச்சி மண்ணுக்கே பெருமை சேர்த்த ஒரு ஒப்பற்ற சேவையாளராக இனம் காணப்பட்டார்.

ஓய்வின்றி உழைத்த இப் பெருமகனார் அரச சேவையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து ஓய்வு பெற்ற பின்னரும் பல நோய்கள் உடலை வாட்டிய போதும் சற்றும் தளர்வடையாது இறைபணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதுடன் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் வளருகின்ற 200க்கு மேற்பட்ட மழலைகளின் தந்தையாகவும் செயற்பட்டு அவர்களின் துயர்துடைத்து வந்தார்.

நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து தம் வாழ்க்கையின்போது பல ஒப்பற்ற விருதுகளைப் பெற்று இளமையின் சிகரமாய் விளங்கிய திரு. இராசநாயகம் அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாதது.

அன்னாரின் குடும்ப உறவுகள் இம்மறைவுத் துயரில் இருந்து மீளவும் அவரின் ஆத்மா சாந்தி அடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**அன்பே சிவம்!**

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனந்தி சசிதரன்
අනන්ති සසිදරන්
**Ananthy Sasitharan**
மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூகசேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழில்துறையும் தொழில் முயற்சியாளர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சர் அலுவலகம் - வட மாகாணம்
කාන්තා කටයුතු, පුනරුත්ථාපන, සමාජ සේවා, සමුපකාර, ආහාර සැපයුම් හා බෙදා හැරීම, කර්මාන්ත හා ව්‍යවසාය ප්‍රවර්ධන සහ වෙළඳ හා වාණිජ්‍ය අමාත්‍ය කාර්යාලය - උතුරු පළාත
**Office of the Minister of Women's Affairs, Rehabilitation, Social Services, Cooperatives, Food Supply & Distribution, Industries & Enterprises Promotion and Trade & Commerce - Northern Province**

எனது இல / මගේ අංකය / My No:
உமது இல / ඔබේ අංකය / Your No:
திகதி / දිනය / Date: 2017-11-22

இராசநாயகம் ஐயாவின் வகிபாகம் என்றென்றும் இட்டு நிரப்ப முடியாத பேரிழப்பாகும்! வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் ஆனந்தி சசிதரன்!

கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும், மகாதேவா சுவாமிகள் இல்லத்தின் (குருகுலம்) தலைவருமான தி. இராசநாயகம் ஐய்யாவின் வகிபாகம் என்றென்றும் இட்டு நிரப்ப முடியாத பேரிழப்பாகும் என்பதை அறுதியிட்டு கூறுமளவிற்கு அவரின் பல்துறை சார் செயற்பாடுகள் அமைந்துள்ளது.

இலங்கை திட்டமிடல் சேவை தகுதிநிலையில் இருந்து அரசாங்க அதிபர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட முதல் தமிழர் என்ற பெருமை, இராசநாயகம் ஐய்யாவின் தகுதிக்கும் திறமைக்கும் சூட்டப்பட்ட மணி மகுடமாகும்.

இராசநாயகம் ஐய்யா கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய காலப்பகுதியில் அவரது நிர்வாகத்தின் கீழ் பணியாற்றியதையிட்டு பெருமை கொள்கிறேன். அவரது பல்துறை சார் ஆற்றல்களை அருகே இருந்து பார்த்தவள் என்ற அடிப்படையில் அவருக்கு நிகராக அவரால் மட்டுமே இருக்க முடியும் என்பதே நிதர்சனமான உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தின் அரசாங்க அதிபர் என்ற தன்முனைப்பை எந்தவொரு இடத்திலும் வெளிப்படுத்தியதில்லை. அவரது நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டு வந்தவர்களிடத்தே வேற்றுமை பாராட்டியதுமில்லை. குறிப்பாக பெண் பணியாளர்களிடத்தே தனித்தான அக்கறையுடன் நடந்துகொள்வார். பணிசார் எல்லைக்கு அப்பால் அவர் எம்மீது காட்டிய அன்பு கலந்த அக்கறையால் எங்கள் எல்லோருக்கும் தந்தையாகவே விளங்கினார் என்றால் மிகையில்லை.

தன் குஞ்சுகளை பேணிப்பாதுகாக்கும் தாய்ப் பறவையாக திகழ்ந்த இராசநாயகம் ஐய்யாவின் நிர்வாகத்தின் கீழ் பணியாற்றியவர்களது சொந்த வாழ்க்கையில் ஏற்படும் துன்ப துயரங்களையும், இடர்பாடுகளையும், குடும்ப பிரிவுகளையும் நேரடியாக தலையிட்டு சீர்செய்த பெருமகனார் இன்று இல்லாது போய்விட்டார் என்று நினைக்கும் போது சொல்ல முடியாத துயர் ஏற்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து கொண்டு அரசாங்க அதிபராக வெற்றிகரமாகச் செயற்பட முடிந்ததென்றால் அது இராசநாயகம் ஐய்யாவின் மக்கள் நலன் சார் மதிநுட்பமான செயற்பாட்டினாலேயே சாத்தியமாகியது என்பது வரலாறு கூறிநிற்கும் உண்மையாகும்.

அவர் அரசாங்க அதிபராக இருந்த காலகட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு தேவையான மண்ணெண்ணை வழங்கல் குறித்த வேண்டுகையை இலங்கை அரசிடம் முன் வைத்திருந்தார். யுத்தம் நடைபெற்ற காலமென்பதால் விடுதலைப்புலிகளின் பயன்பாட்டிற்கு சென்றுவிடும் என்ற காரணத்தை முன்னிறுத்தி கோரப்படும் அளவில் சொற்ப அளவு பொருட்களையே வழங்கி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மறைமுக பொருளாதார நெருக்கடியை இலங்கை அரசாங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிட்டு ஏற்படுத்தியிருந்தது. அவ்வாறே இராசநாயகம் ஐய்யாவின் வேண்டுகையும் குறைப்பு செய்யப்பட்டே அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த நெருக்கடியை தனது மக்கள் நலன்சார் மதிநுட்பத்தால் வென்று காட்டியிருந்தார். இராசநாயகம் ஐய்யா, தற்போது பரீட்சை காலம் என்பதால் நாங்கள் கோரிய அளவு மண்ணெண்ணை அவசியம் தேவைப்படுகிறது. நீங்கள் அனுப்பிய அளவு தேவையை நிறைவு செய்ய போதுமானதில்லை. இந்நிலை தொடருமாயின் பரீட்சைக்கு மாணவர்கள் சரியான முறையில் தயாராக முடியாத நெருக்கடி ஏற்படும். இதன் காரணமாக ஏற்படும் விரக்தி நிலையில் அவர்கள் புலிகள் இயக்கத்தில் சேர்ந்துவிடும் சூழல் ஏற்படும் என்பதனை தெரிவித்துக் கொள்வதாக இலங்கை அரசதரப்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல் அனுப்பியிருந்தார். உடனடியாக கேட்டதற்கும் மேலான அளவு மண்ணெண்ணையை இலங்கை அரசாங்கம் கிளிநொச்சிக்கு அனுப்பி வைத்திருந்தது.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக இராசநாயகம் ஐய்யா கடமையாற்றிய காலம் பூநகரி பகுதியின் பொற்காலம் என்று சொல்லுமளவிற்கு அவரது செயற்பாடுகள் அமைந்திருந்தது. படித்த மகளிர் விவசாயகத்திட்டம் முழங்காவில் பகுதியில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டமைக்கு இவரது கடின உழைப்பே முழுக்க முழுக்க காரணமாக அமைந்திருந்தது என்பதை குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

பூநகரியில் ஆரம்பித்த பயணம் கிளிநொச்சியில் விசுவரூபம் எடுத்தது என்பதை நிரூபிக்கும் வகையில் கிளிநொச்சியின் மண்ணின் மைந்தர் என்ற கௌரவம் அவரை ஆரத்தழுவிக் கொண்டது. கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றியிருந்தாலும் கிளிநொச்சி மாவட்ட எல்லை கடந்து அவரது புகழ்வீச்சு வியாபித்து நிற்கின்றமையே அவரது செயற்பாட்டின் மகத்துவத்தினை எடுத்தியம்புகின்றது.

இவ்வாறு மக்கள் நலன்சார்ந்து மதிநுட்பமாக செயற்பட்ட இராசநாயகம் ஐய்யா சிறந்த சமூக சேவராகவும் தன்னை மக்களுக்காக அர்ப்பணித்திருந்தார். அதன் சாட்சியமாகவே மகாதேவா சுவாமிகள் இல்லம் (குருகுலம்) இருந்து வருகின்றது குறிப்பிடத்தக்கது.

இராசநாயகம் ஐய்யாவின் தலைமையின் கீழ் மகாதேவா சுவாமிகள் இல்லத்தினை நிர்வகிப்பதற்கும் முன்னின்று செயற்படுவதற்கும் ஆரம்பகாலத்தில் யாரும் முன்வந்திருக்க வில்லை என்பதே உண்மை. அவ்வாறான இக்கட்டான சூழ்நிலையில் மனம்தளராது தனது அலுவலர்கள் சிலரைக் கொண்டே மகாதேவ சுவாமிகள் இல்லத்தினை செயற்படுத்தி வந்திருந்தார் இராசநாயகம் ஐய்யா.

அப்படிப்பட்ட இராசநாயகம் ஐய்யாவின் பூதவுடல் நல்லடக்கத்திற்கு எடுத்துச் செல்வதற்கு முன்னரே மகாதேவா சுவாமிகள் இல்லத்தின் நிர்வாகத்தினை குறுக்குவழியில் கைப்பற்றுவதற்கு சிலர் முற்பட்டுள்ளமை வேதனையை ஏற்படுத்தியுள்ளது. இது அவரது அப்பழுக்கற்ற தியாகத்தை அவமதிக்கும் செயற்பாடாகவே அமைந்துள்ளது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொண்டு மகாதேவ சுவாமிகள் இல்லம் தொடர்ந்தும் இராசநாயகம் ஐய்யாவின் தூய எண்ணங்களின் வெளிப்பாடாக செயற்படுவதற்கு வழியேற் படுத்தி கொடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed, B.A, PGDE(Me), Sp.Tr(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
882, ஆறுமுக வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
021 3207684, 021 2280024
021 2221595, 021 2280024
077 6913244
shritharanmp@gmail.com
www.shritharan.com


පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT


SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed, B.A, PGDE(Me), Sp.Tr(Ag)
Jaffna Electoral District
882, Arumugam Road,
Veddakachchi, Kilinochchi, Sri Lanka.
021 3207584, 021 2280024
021 2221595, 021 2280024
077 6993244
shritharanmp@gmail.com
www.shritharan.com


# சாணக்கிய தலைமைத்துவத்தின் அடையாளம்

பூர்வீக வரலாற்று மண்ணாகிய பூநகரியில் கிளிநொச்சி மண்ணின் பல்துறை ஆளுமையின் அடையாளமாக திகழ்ந்த உயர்திரு திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள் சிவ பதப்பேறு பெற்றமை அறிந்து ஆழ்ந்த துயருற்றோம்.

ஐயாவின் வாழ்வு முழுமையும் கிளிநொச்சி மாவட்ட வளர்ச்சியோடு வரலாற்றோடு பிணைந்து இருந்தது. வயற்புலப்பண்பாண்டின் அடித்தளத்திலிருந்து கட்டமைக்கப்பட்ட கிளிநொச்சியின் பல்துறைசார் வளர்ச்சியில் இராசநாயகம் ஐயாவின் பங்கும் பணியும் அளப்பரியது.

"அர்ப்பணித்தல்" என்னும் உயரிய தத்துவத்தை தனது வாழ்வியல் முழுவதும் வெளிப்படுத்தி வாழ்ந்த உத்தமர் அவர். அவரது வளர்ச்சிப்பாதையின் ஒவ்வொரு தடங்களிலும், அவர் எதிர் கொண்ட சவால்களை சாதனைகளாக்கிய செயல்வீரனாக திகழ்ந்தார். தன்னைச் சூழ்ந்திருந்த வறுமை எனும் நச்சுவட்டத்தை அறிவு, உழைப்பு என்னும் தேடல்களினால் உடைத்து உயர்ந்த உன்னதமானவர்.

திட்டமிடல் சேவையின் முன்னோடியாக விளங்கிய அவர் கிளிநொச்சி நகரை திட்டமிட்டு வடிவமைக்க வேண்டும் என கண்ட கனவுகளும் அதற்காக உழைத்த திடமும் வரலாற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவாகும்.

அறிவியல்நகர் உருவாக்கம் அவர் ஆற்றிய அத்தகைய பணிக்கு சாட்சியமாகத் திகழ்கிறது. கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் மற்றும் இராணுவத்தால் இடித்தழிக்கப்பட்ட கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம் என்பவை இராசநாயகம் ஐயா அவர்களின் சிந்தனையில் உருப்பெற்றவை.

தீவிரமான போர்முனைகள் சூழ்ந்திருந்த அக்காலத்தில் உணவுத் தடையை அரசு விதித்திருந்தது. பல்வேறு சவால்கள், அழுத்தங்கள், தன்முன்னே இருந்தபோது இரண்டு தடவைகள் அரசாங்க அதிபராக பொறுப்பேற்கத் துணிந்தமை அவரது அபராமான தன்னம்பிக்கையின் வெளிப்பாடாகும். குறிப்பாக, புலிகளுக்கு உணவைக் கொண்டு போய்க்கொடுக்கிறாயா? என பாதுகாப்பு உயர்பீடம் அச்சுறுத்திய போது 'தாய்க்கு கொடுக்கும் நிவாரணத்தில் அந்த தாய் தனது புலிப்பிள்ளைக்கு உணவளித்தால் நான் என்ன செய்ய முடியும். அதற்காக முழு மக்களையும் பட்டினி போட்டு கொல்ல வேண்டாம்' என வாதாடிய மக்கள் நல அதிகாரியாக எங்கள் மனங்களில் இருக்கிறார்.

யுத்தத்தினாலும் பொருளாதாரத் தடையினாலும் மக்கள் பட்டினிச் சாவின் விளிம்பில் இருந்தபோது பாடசாலைகளில் இலைக்கஞ்சி திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் கல்வித் துறைக்கு அவர் ஆற்றிய பணி அற்புதமானது.

பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்கள் தமது உயர்கல்வியைத் தொடர்வதற்கு சவால்களை எதிர்கொண்ட போது கிளிநொச்சி மாவட்ட கல்வி நிதியத்தை உருவாக்கி உதவியர் இராசநாயகம் ஐயா.

பல முகாமைத்துவ உதவியாளர்களை பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களங்களிலும் அரச சேவையாளர்களாக உள் வாங்குவதற்கு அவர் ஆற்றிய காலப்பணி என்றும் நன்றியுடன் நினைவு கூறத்தக்கதாகும்.

பூநகரி மண்மீது கொண்டிருந்த தீராக்காதல் அவரது மகத்துவமான மண்பற்றின் வெளிப்பாடாக இருந்தது. திறந்த மனத்தினனாக கலந்துரையாடுவதும் இன்மொழி பேசி இதயங்களைக் கவர்வதும் இவரது ஆளுமைக்கு வலுச்சேர்த்தவை என்பேன்.

மாவட்டக் கல்வி நிதியம், தொழில் நுட்பக்கல்வி நிறுவனம், யோகர் சுவாமிகள் முதியோர் இல்லம், காந்தி சேவா சங்கம், என்பவை இவரது கல்வி அறப்பணிகளின் நிலைக்களங்களாக இன்று கிளிநொச்சியில் மிளிர்கின்றன.

சைவத்தின் மீதும் தமிழின் மீதும் அளவற்ற பற்றுடைய இராசநாயகம் ஐயா உருத்திரபுரீச்சர சிவாலயத்தின் தலைவராக இருந்தபோது வரலாற்றின் அபகரிப்பு ஒன்றிலிருந்து அவ்வாலயத்தையும் அம்மண்ணையும் பாதுகாத்தவர் என்பது பதிவு செய்யப்பட வேண்டியது.

எல்லாவற்றுக்கும் மேலாக 2009 ஆம் ஆண்டு பிற்பாடு பேரவலமும் பெருவலியும் சுமந்து நிராதரவாய் நின்ற எம் தேசக்குழந்தைகளை மகாதேவா சைவச் சிறுவர் இல்லத்தில் அரவணைத்து ஆயிரம்ஆயிரம் பிள்ளைகளின் வாழ்வில் ஒளியூட்டிய தந்தையாக ஐயா இருந்தார். தந்திரோபாய முகாமைத்துவத்தின் தலை சிறந்த அதிகாரியாக அன்பும் அறனும் தன்னிதயத்தில் சுமந்த் அதியுயர் தலைவனாக விளங்கியதன் மூலம் கிளிநொச்சி மாவட்ட மக்களின் மனங்களில் நிலை பெற்ற ஒருவராக இராசநாயகம் ஐயா பரிணமிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, நிர்வாகம், சமூகசேவைகள், அறப்பணிகள் என எல்லாவற்றிலும் தன்னை அர்ப்பணித்த உயர்திரு. இராசநாயகம் ஐயா ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அரும்பெரும் மனிதனாக எங்களுக்கெல்லாம் வழிகாட்டி தன்வாழ்நாளை நிறைவு செய்திருக்கின்றார்.

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரின் துயரால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், மகாதேவா சைவச்சிறுவர் இல்லக்குழந்தைகள் அவர் மீது அன்பும் அபிமானமுடைய அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**- சிவஞானம் சிறிதரன்**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்**
**இணைத்தலைவர்- கிளிநொச்சி மாவட்டம் ஒருங்கிணைப்புக்குழு**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும்போதே புகழுடன் வாழ்ந்தவர் அமரர் இராசநாயகம்

கிளிநொச்சி மாவட்ட முன்னைநாள் அரசாங்க அதிபரும் வடக்கு மாகாணசபையின் செயலாளர்களில் ஒருவராகவும் இருந்து பின்னர், கிளிநொச்சி மகாதேவா ஆசிரமத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று, அதனைத் திறம்பட நடாத்திவந்த பெரியவர் இராசநாயகம் அவர்கள் கடந்த மாதம் காலமாகியது எல்லோரையும் கவலையில் ஆழ்த்திய ஒரு செய்தியாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக யுத்தம் நடந்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் மக்கள் பசியாலும் பட்டினியாலும், மருத்துவ வசதி இன்மையாலும் பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில் அரசாங்கம் வடக்கு மாகாணத்திற்கான பொருளாதாரத் தடையை விதித்து மக்களை பெரும் இன்னலுக்குள்ளாக்கி பஞ்சத்தில் வாடவைத்துக் கொண்டிருந்த பொழுது தனது இடைவிடாத முயற்சியாலும், தொடர் நடவடிக்கைகளாலும் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கான பொருட்களை கொழும்பிலிருந்து வருவித்து அந்த மக்களைக் காப்பாற்றிய பெருமை அமரர் திரு. இராசநாயகத்திற்குரியது.

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் மாணவர்களின் உடல் நலனில் அக்கறை கொண்டு அவர்களுடைய போசாக்கில் அக்கறை கொண்டு அன்றைய யுத்தகாலத்தில் சகல பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு இலைக்கஞ்சியை அளித்து அந்த மாணவர்களின் ஆரோக்கியத்திற்கும் அதனூடான கல்விச் செயற்பாட்டிற்கும் உறுதுணையாக விளங்கியவர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசமான பூநகரியில் விவசாயக் குடும்பத்தில் உதித்து பல்கலைக்கழகம் சென்று படிப்படியாக வளர்ந்து அந்த மாவட்டத்தின் அரச அதிபராக உயர்ந்து வடமாகாணத்தின் நிர்வாகத்தில் பங்குகொண்டு வளர்ந்தமை என்பது அவரின் விடா முயற்சிக்கும் தன்னம்பிக்கைக்கும் கிடைத்த அங்கீகாரமாகும்.

அமரர் இராசநாயகத்தைப் பற்றி பல விடயங்களை நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிக்கொண்டே போகலாம். கிளிநொச்சியின் அரச அதிபராக இருந்த காலத்திலிருந்து எனக்கும் அவருக்குமான உறவு மலர்ந்தது. கிளிநொச்சி மாவட்டத்தின் வளர்ச்சியில் நானும் அவரும் பல கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டிருந்தோம். மிகவும் பழமைவாய்ந்த உருத்திரபுரம் உருத்திரேஸ்வரர் ஆலயத்தை புனருத்தாரணம் செய்து அதனை மீண்டும் புகழ்பெற்றுத் திகழ்வதற்கு நானும் எனது பங்களிப்புகளை அவரினூடாகச் செய்திருந்தேன். அவர் அரச அதிபராக இருந்த காலத்தில் பாடசாலைகள், பொதுச்சந்தைகள், கிராம வீதிகள் இவற்றை புனருத்தாரணம் செய்வதிலும் என்னால் இயன்றவரை அவருக்கு நான் உறுதுணையுடன் செயற்பட்டுள்ளேன். அந்த வகையில், அவருக்கும் எனக்கும் இடையிலான நட்பை நான் பெருமைக்குரியதாகவே கருதுகின்றேன்.

முன்னர் குருகுலமாக இருந்து, பின்னர் மகாதேவா ஆசிரமமாக மலர்ந்து இன்று 400க்கும் மேற்பட்ட பிள்ளைகளைப் பராமரித்து அவர்களது கல்வி மற்றும் எதிர்காலத்தைத் திட்டமிட்டு அந்த ஆசிரமத்தை மிகவும் திறம்பட நடாத்திவந்த பெருமை அமரர் இராசநாயகத்திற்குரியது. மகாதேவா ஆசிரமமானது தனது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக பல இடங்களில் வயல்களையும், தென்னந்தோட்டங்களையும் பலரும் நன்கொடையாக வழங்கியமை இவரது அயராத முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும்.

அவரால் அவரது பணிகள் சிறப்பிக்கப்பட்டன. வாழும்போதே புகழுடன் வாழ்ந்தார். எப்படி வாழவேண்டும் என்பதற்கு வழிகாட்டியாக இருந்தார். கிளிநொச்சி மாவட்ட மக்களின் மனத்தில் அவரது நாமம் என்றும் வாழும். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

**சுரேக்ஷ். க.பிரேமச்சந்திரன்.**
**தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'

# அமரர் திரு. இராசநாயகம் நினைவுகள்

'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்பது நம் முன்னோர் வாக்கு. அந்த வாழ்க்கை எவ்வாறானது என்பதே நாம் கவனிக்க வேண்டியதாகும். வாழும் முறைகள் பலவுண்டு. எல்லா வாழ்க்கையும் எல்லோருடைய வாழ்க்கையும் மாண்புடையதாக அமைவதில்லை. மிகச் சிலருடைய வாழ்க்கையே மாண்புடையதாக, மற்றவர்களின் மனதில் பதியக் கூடியதாக, வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக வரலாற்றின் நினைவுகளில் பதியப்படுவதாக அமையும். எமது அன்புக்கும் மதிப்பிற்குமுரிய திரு. தி. இராசநாயகம் அவர்களுடைய வாழ்க்கை மற்றவர்களின் மனதில் பதியப்பெற்றதோர் சிறந்த வாழ்க்கையாகும். தன்னுடைய பணிகளின் மூலமாக அவர் இந்தச் சிறப்பை உருவாக்கினார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரிப் பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த இராசநாயகம் அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்திலேயே உயர் பதவி வகித்தார். கிளிநொச்சி மாவட்டச் செயலாளரக (அரசாங்க அதிபராக) பணியாற்றினார். அவர் பணியாற்றிய காலமும் சூழலும் மிக நெருக்கடிக்குரியது. இரண்டு பக்கமும் கூருள்ள கத்தியைக் கையாள்வது எவ்வளவு கடினமோ அதே மாதிரியான ஒரு நிலையில் அவருடைய பணியும் பணிக்காலமும் இருந்தது. அது யுத்தம் தீவிரமான நடைபெற்றுக் கொண்டிருந்த காலமாகும். ஒரு பக்கம் மக்கள். இன்னொரு பக்கம் அரசாங்கம். மற்றப் பக்கம் விடுதலைப்புலிகள். இதற்குள் மாவட்டத்தின் நிர்வாகத்தை தலைமை நிலையில் நின்று மேற்கொள்வது என்பது சாதாரணமான ஒன்றல்ல. இவ்வளவு தரப்புக்களுக்குமிடையில் சமநிலை கண்டு, சிறப்பான முறையில் பணியாற்றினார் திரு. இராசநாயகம் அவர்கள்.

திரு. இராசநாயகம் அவர்கள் இந்தப் பணியை பெற்றுக் கிளிநொச்சியில் பணி செய்வதற்கு ஒரு வகையில் என்னுடைய பங்களிப்பும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் அன்று வன்னேரிக்குளம் - ஜெயபுரம் வீதி அமைப்பதற்கான பங்களிப்பைச் செய்வதில் அவர் எம்முடன் இணைந்து பங்களிப்புச் செய்திருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது. இப்படி அன்றைய காலத்திலிருந்து சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேலாக எனக்கும் திரு. இராசநாயகம் அவர்களுக்குமிடையிலான உறவும் நட்பும் நீடித்தது.

கிளிநொச்சி மாவட்டத்தை முன்னிலைப்படுத்தி அபிவிருத்தி செய்வதில் திரு. இராசநாயகம் அவர்களுடைய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. அறிவியல் நகரின் உருவாக்கம் தொடக்கம் கண்ணகி நகர் வரை இதைப் பட்டியலிடலாம். அவர் திட்டமிடல் சேவையில் பணியாற்றிய அனுபவத்தின் அடிப்படையில் இவற்றைச் செய்திருந்தார்.

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு தொண்டுப் பணியாற்றும் ஆர்வத்தோடு ஆதரவற்ற பிள்ளைகளின் நல் வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டார். இப்படித் தன் வாழ்டவின் இறுதிக் கணம் வரைக்கும் என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற நல்வாக்குக்கு அமையப் பணியாற்றிய பெருந்தகையாகி வாழ்ந்து விடைபெற்றார்.

இதுவே மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற அடையாளத்துக்கு இலக்கணமாகியது.

திரு. இராசநாயகம் அவர்களுடைய புகழ் ஓங்கிப் பரவும். அவருடைய நினைவுகள் நம்முடைய வாழும். அவருக்கு என் நன்றியறிதல்களும் அஞ்சலிகளும்.

**முருகேசு சந்திரகுமார்**

**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவர்**

**அமைப்பாளர், சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு**

**கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் உயர். திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள்

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக இருந்து அமரத்துவம் அடைந்த உயர்திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களது நினைவுப் பேரேட்டிற்கு எனது சிறுகுறிப்பை வழங்க கிடைத்த சந்தர்ப்பத்தை எனது வாழ்நாளில் பெரும் பேறாக கருதுகின்றேன்.

1966ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (பேராதனை) கிளிநொச்சி மாவட்டத்தைப் பிறப்பிடமாக கொண்ட மாணவர்களாக உள்நுழைந்தோம். கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரியை தனது பிறப்பிடமாக உடையவர் அமரர். முகமாலைக் கிராமத்தை பிறப்பிடமாக உடையவன் யான். 1969ம் ஆண்டில் பட்டதாரிகளாக இருவரும் வெளியேறினோம். திட்டமிடல் சேவையில் ஒரு பணியாளராக அமரரும், கூட்டுறவுத்துறையில் ஒரு பணியாளராக யானும் சேவையில் இணைந்து கொண்டோம். 51 வருடங்கள் நெருக்கமான நண்பர்களாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல பணிகளை ஆற்றினோம். நவம்பர் மாதம் 2 ம் திகதி உயர் திரு. இராசநாயகம் அமரத்துவம் அடைந்த செய்தி என்னை அதிர்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. பிறப்பவர் யாவரும் ஓர் நாள் இறப்பது நியதி என்னும் அமரர் இவ்வளவு விரைவாக எம்மைவிட்டுப் பிரிவார் என எவரும் எதிர்பார்க்கவில்லை.

பட்டப்படிப்பை பூர்த்தி செய்தபின் திட்டமிடல் சேவையில் இணைந்த அமரர் தனது பதவியில் புலமைப்பரிசில் பெற்று பிரித்தானியா சென்று நகர ஆக்கல் துறையில் முதுமாணிப்பட்டத்தைப் பெற்று நாடு திரும்பினார். அதனால் அவரால் கிளிநொச்சி மாவட்டத்தில் ஓர் அறிவியல் நகரை திட்டமிட முடிந்தது. அதன் வெளிப்பாடே கிளிநொச்சி பல்கலைக்கழக வளாகங்களும், மத்திய வங்கியின் கிளைகள், ஆடைத் தொழிற்சாலைகளும் என்றால் யாரும் மறுக்கமாட்டார்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் அமரருக்கிருந்த மற்றும் அபிவிருத்தி நோக்கிய பார்வையையும் சகல துறைகளிலும் இன்று காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுத் துறையில் ஒரு பொற்காலம் அமரரது காலமாகும். நிதிப்பற்றாக்குறையாக இன்று செயற்பட முடியாத சங்கங்களை நிதி வழங்கி செயற்பட வைத்தவர். சகலரும் போற்றும் வண்ணம் பூநகரி ப.நோ.கூ சங்கத்தை வழிநடத்தியவர். அதன் தலைவராக இருந்து நடத்திக் காட்டியவர். அமரர் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக பதவி வகித்த காலத்தில் ஆற்றிய சேவைகள் எவராலும் மறக்க முடியாது. திட்டங்களை தீட்டுவதிலும் அதற்காக அரசுடன் பேரம் பேசி நிதியைப் பெற்றுக்கொள்வதிலும் அவருக்கு நிகர் அவரேயாவார்.

கல்வித்துறையிலே அவரது பங்களிப்பை கல்வி உலகம் என்றும் மறக்கமாட்டாது. பாடசாலைக்கு காலையில் வரும் மாணவர்களில் கணிசமான மாணவர்கள் உணவின்றி வருவதை அவதானித்த அவர் ப.நோ.கூ. சங்கங்களின் நிதிப் பங்களிப்புடன் உருவாக்கிய இலைக்கஞ்சித் திட்டம்தான் இன்றைய அரசு மதிய உணவுத் திட்டத்தை உருவாக்க காரணமாகும். அத்துடன் கிராமப்புற பாடசாலைகளில் அபிவிருத்திக்கு அமரர் பெற்றுத் தந்த அரச நிதி உதவிகளின் பட்டியலை கூறுவதற்கு இது நேரமல்ல.

சமூக வளர்ச்சியிலே அமரர் கொண்டிருந்த கரிசனைக்கு இரு உதாரணங்களை கூறலாம். பெற்றோரின் கவனத்தைப் பெற முடியாது, போதிய உணவின்றி வாடிய குழந்தைகளை ஒன்று சேர்த்ததை வாழ்நாளின் முழுக் கவனத்தையும் பெற்றிருந்த மகாதேவா சைவர் சிறுவர் இல்லம் அதன் வளர்ச்சிப் பாதையை யாராலும் நலிவடையச் செய்ய முடியாதளவிற்கு திட்டமிட்டு நெறிப்படுத்தி நடத்திக் காட்டியவர் அமரர். இவ்வாறே முதுமை என்பது யாருக்கும் ஏற்படுவது. அக்காலத்தில் முதியவர்கள் யாரதும் தயவில் வாழ்வதை விரும்பாத அமரர் வன்னேரிக்குளத்தில் உருவாக்கிய முதியோர் இல்லம் அவரது இன்னோர் சமூகப் பணியாகும்.

சிறுவர் இல்லமும் முதியோர் இல்லமும் எக்காலத்திலும் நலிவடையாதிருக்க நிரந்தர வருமானத்தைப் பெற்றுக் கொண்டிருக்க, அவரால் சொத்துக்களாக அதிகளவு காணிகளும், வயல் நிலங்களும் கொள்வனவு செய்யப்பட்டன. பல உபகாரிகளின் அன்பளிப்பாகவும் பெறப்பட்டன. பலநாடுகளின் உதவியாளர்களை அவர் தேடிக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்டத்தில் தொழிற்துறையை மேம்படுத்த அமரரால் உருவாக்கப்பட்டதே கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி. வன்னேரிக் குளத்தில் உருவாக்கம் பெற்ற இக்கல்லூரி இன்று நகரில் மத்தியில் பல பயிற்சிகளையும் ஆங்கில மொழிக் கல்வியையம் வழங்கிக் கொண்டிருக்கிறது.

அமரரின் திட்டங்களையும் சேவைகளையும் அவர் உருவாக்கிய அரச அதிகாரிகளையும் ஒரு விடயத்தை எப்படித் திட்டமிடுவது எப்படி செயற்படுத்துவது என்பது தொடர்பான அவரது சிந்தனைகளையும் கூற பல வருடங்கள் தேவைப்படலாம். கல்விக்கான நிதி இல்லாத போது அவர் உருவாக்கிய தண்ணீர்ப் பங்கு மூலதன உதவி பற்றி இன்றும் பாடசாலை அதிபர்கள் அடிக்கடி கூறுவார்கள்.

சுருங்கக் கூறின் கிளிநொச்சி மாவட்டத்தின் வளர்ச்சியில் தன்னை இணைத்துக் கொண்ட ஒரு அரும் பெரும் நிர்வாகியை நாம் இழந்துள்ளோம். இது மாவட்டத்திற்கு ஏற்பட்ட இழப்புப்போல் தமது குடும்பத்திற்கு ஏற்பட்ட பாரிய இழப்பாக மனைவி. பிள்ளைகள். மருமக்கள். உறவினர்கள். பூநகரி வாழ் மக்கள் உணர்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து நாமும் ஒன்றாகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!

**– ப. அரியரத்தினம்**
**முன்னாள் மேலதிக மாகாணம்**
**கல்விப் பணிப்பாளர், வடக்கு**
**மாகாண சபை உறுப்பினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயம் மிக்க செயல்வீரன்

அமரர் திரு இராசநாயகம் மனிதநேயமிக்க உயர்ந்த மனிதர். கிளிநொச்சி மண்ணின் மைந்தனாக பூநகரியில் சித்த மருத்துவத் துறையில் புகழ்பூத்த குமாரசுவாமி திருநாவுக்கரசு அவர்களுக்கு புதல்வராக அவதரித்தவர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபராக விளங்கிய பெருமையாளர். ஓய்வுபெற்ற பின்னரும் மகாதேவ சைவச் சிறுவர் ஆச்சிரமத்தின் தலைவராக செயற்பட்டு செயற்கரிய சேவைபுரிந்த பெருந்தகை ஆவார். அன்னார் 02-11-2017 இறைபதம் எய்தியமை தமிழ் சமூகத்திற்கு குறிப்பாக கிளிநொச்சி மண்ணுக்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தி யிருக்கின்றது.

தமிழ் மக்களுக்கு குறிப்பாக சிறுவர்களின் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு அரும் பணிகள் ஆற்றியவேளை அவரது மறைவு அவர்களின் பலமான எதிர்காலத்திற்கு சிறு இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது என்றே குறிப்பிட வேண்டும்.

அறிவியில் நகரின் தோற்றத்திற்கும், கிளிநொச்சி நகரத் திட்டமிடலுக்கும், மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, நிவாரண சேவைகள் ஆகிய பணிகளை முன்னிறுத்தி உழைத்த பெருமையாளர். மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழ்ந்துகாட்டிய பெருந்தகையாளர் எனலாம். தனது பணிகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்து சிறந்த கௌரவ விருதுகளை தனதாக்கிய பெருமையாளர். "தோன்றின் புகழோடு தோன்றுக அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்னும் வள்ளுவரின் திருவாக்கிற்கு இலக்கணமாய் வாழ்ந்த பெருமையாளர். அன்னாரது வெற்றிடம் பூரணப்படுத்தமுடியாத ஒன்றாகும். அன்னாரது பிரிவால் ஏங்கித்தவிக்கம் உற்றார் உறவினர்கள் யாவரும், கிளிநொச்சி மண்ணும் ஆறுதல் அடைய அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைபரம் பொருளை வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

**நா.வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர்,**
**யாழ் மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்
දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
Govt.Agent / District Secretary

தொலைபேசி
දුරකථන
Telephone } 021 - 228 3965

தொலைநகல்
ෆැක්ස්
Fax } 021 228 3966

மின்னஞ்சல்
විද්‍යුත් තැපෑල
E-mail } gakili@sltnet.lk

பொதுத்தொலைபேசி
පොදු දුරකථන
General Telephone } 021 - 228 3945

மேலதிக மாவட்டச் செயலாளர்
අතිරේක දිස්ත්‍රික් ලේකම්
Addl.District Secretary } 021 - 228 5456

மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, කිලිනොච්චි
District Secretariat, Kilinochchi

எனது இல
මගේ අංකය
My No

உமது இல
ඔබේ අංකය
Your No

திகதி
දිනය
Date

பன்முக ஆளுமையுடைய நல்ல மனிதன்

கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபராகவும், வடக்கு மாகாணசபையின் உள்ளூராட்சி பொதுநிர்வாக அமைச்சின் செயலாளராகவும், பிரதி பிரதம செயலாளராகவும் பல்வேறு பணிநிலைகளை அலங்கரித்து இறைபதமடைந்த அமரர் திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களின் அமரத்துவம் ஈடுசெய்ய முடியாததொன்று என்பதுடன் இம் மாவட்டத்திற்கு பேரிழப்பாகும் என்றே நான் கருதுகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட அன்னார் அம்மாவட்டத்தின் முதல் மனிதராக தன்னை மாற்றிக்கொண்டு பல்வேறு நிர்வாக சமய சமூகபணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டதுடன் நிர்வாக நிலையில் மிகவும் நெருக்கடி மிகுந்த ஒரு காலகட்டத்தில் தனது அரச அதிபர் பணியில் திறம்பட செயற்பட்டு சிறந்த நிர்வாகி என்ற பெயரையும் தனதாக்கிக் கொண்டமை யாரும் எளிதில் மறக்க முடியாத ஒன்றாகும்.

"அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார் என்பு தோல் போத்த உடம்பு" எனும் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப இவ்வுலகில் மனிதப் பிறவியாக பிறப்பெடுத்து வாழ்க்கை என்ற ஒன்றினை வெறுமனே வாழ்ந்து காட்டாது ஆதரவற்ற சிறார்கள் மற்றும் தாய் தந்தையரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த சிறார்கள், உளவளம் பாதிக்கப்பட்ட சிறார்கள் என பலதரப்பட்ட நூற்றுக்கணக்கான பிள்ளைகள் தங்கிப் படிக்கின்ற மகாதேவா சைவ சிறுவர் இல்லத்தினை ஆரம்பித்து நடாத்தி வந்த அமரர் திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களின் முயற்சி போற்றுதலுக் குரியதாகும்.

இப் பூமியில் மானிடப்பிறவியாக பிறந்த நாம் எமது பிறப்பு முதலாக வாழும் காலம் வரையிலும் எவ்வாறு வாழ்ந்தோம் என்பதை விட நாம் இவ்வுலகிற்கு செய்த நற்செயல்கள் எத்தகையது என்பதே இன்றியமையாதது என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து இறை பதமடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

**– சுந்தரம் அருமைநாயகம்**
**மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்**
**கிளிநொச்சி மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியின் முதன்மை மனிதர்

கிளிநொச்சி மாவட்டத்தின் ஓய்வுநிலை அரச அதிபரும் மகாதேவா சைவசிறுவர் இல்லம் எனும் குழந்தைகள் காப்பகத்தை இறுதி நாள்வரை தலைமை தாங்கி வழிநடாத்தியவருமான திரு.திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களின் திடீர் மறைவு குறித்த செய்தியறிந்து அதிர்ச்சிக்குள்ளானோம்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய ஒரு கிராமமாகிய பூநகரியிலிருந்து பல்கலைக்கழக மாணவனாக தெரிவுசெய்யப்பட்டபோது அவரே இம்மாவட்டத்தின் முதல் மாணவனாக பல்கலைக்கழகம் சென்று பெருமை சேர்த்தார். தொடர்ந்து நாடளாவிய சேவையில் இலங்கை திட்டமிடல் சேவைக்கு சித்தியடைந்தபோதும் அவரே அந்த முதல் மாணவன் என்ற பெருமையோடு நிர்வாகப்புலத்திற்குள் புகுந்தார். தொடர்ந்து நெருக்கடி மிகுந்த சூழலில் இப்பிரதேசத்திற்குள் இறுதிவரை நின்று பணியாற்றிய அரசஅதிபராகும் வாய்ப்பையும் பெற்றுசிறப்புடன் பணியாற்றினார்.அதிலும்கூட அவரே இம்மாவட்டத்தின் முதலாவது அரசஅதிபர் எனும் பெருமைக்குரியவராக தம்மைப் பதிவுசெய்தார். இம்மாவட்டத்தின் பல்வேறு வளர்ச்சிக்கட்டங்களிலும் தன்னை இணைத்துக்கொண்டு பாடுபட்ட இவரது பல ஆலோசனைகள் நான் இம்மாவட்டத்தின் அரசஅதிபராக வந்து சேவையாற்றியபோது எனக்கு வழிகாட்டியாக இருந்தது. எனது சொந்த மாவட்டமாகிய இம்மாவட்டத்தில் என்னால் முன்கொண்டு செல்லப்பட்ட பலகட்டமைப்பு மாற்றங்களில் அவரது ஆலோசனைகளும் வழிகாட்டலும் என்றும் மறக்க முடியாது. ஒரு சிறந்த ஆளுமைப்புலமையுடையவராக நல்ல சமூகப்பணியாளராக இறுதிவரை இம்மாவட்டத்துக்கு அவர் ஆற்றிய பணிகள் அவரது பிள்ளைகளை இன்று நல்ல சமூகமவிரும்பும் மனிதர்களாக உருவாக்கிவிட்டிருக்கின்றது.

அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கும் மகாதேவா சிறுவர் இல்லகுழந்தைகளுக்கும் எனது ஆறுதல்களை தெரிவித்து இதய பூர்வமான அஞ்சலிகளை எமது மாவட்ட முதல் மனிதருக்கு சமர்ப்பித்து நிறைவு செய்கின்றேன்.

திருமதி.றூபவதி கேதீஸ்வரன்,

மாவட்ட செயலாளர்,

முல்லைத்தீவுமாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலதிக அரசாங்க அதிபர் உள்ளத்திலிருந்து

முன்னைநாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக இருந்து ஓய்வு பெற்ற திரு.தி.இராசநாயகம் ஐயா அவர்களின் மரணம் இன்னும் நம்ப முடியாத ஒன்றாகவே இருக்கின்றது. அடிக்கடி தொலைபேசியில் மாவட்டத்தின் அபிவிருத்தி பற்றியும், நிலைமை தொடர்பாகவும் கதைத்து கொள்வார். எனது குடும்பத்தாரின் சுகநலன்களை விசாரித்தறிவார். பண்டிகை நாட்களில் வாழ்த்துக்கள் கூறுவார். அவரின் நினைவலைகளை மீட்டுப்பார்க்கின்றேன்.

2004 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையின் புதுமுக பயிற்சியை முடித்ததும் கிளிநொச்சி மாவட்டத்திலேயே எனக்கு நியமனம் கிடைத்தபோது திரு.தி.இராசநாயகம் ஐயா அவர்கள் அரச அதிபராக இருந்தார். மிகுந்த கண்டிப்பும் வேலையில் தீவிரமாகவும் இருப்பதனை எனது முதல் சந்திப்பிலேயே தெரிந்து கொண்டேன்.

யுத்தகாலமாக இருந்த காரணத்தினால் போக்குவரத்து தடை, அத்தியவசிய, மற்றும் ஏனைய பொருட்களுக்கு தட்டுப்பாடுகள் என்பன மிகவும் தீவிரமாக இருந்தது. இவ்வாறான நிலையில் பொதுமக்களுக்கு எவ்வாறு வினைத்திறனான சேவைகளை வழங்குவது என்பன தொடர்பில் அவரிடம் நிறைய கற்றுக் கொண்டேன். போர்க்காலத்திலும் அபிவிருத்தி மற்றும் கட்டுமானப் பணிகள் நடைபெற்றது.

பேப்பாரபிட்டி, சுண்டிக்குளம் பகுதிகளில் சுனாமி பாதிப்புக்குள்ளான எமது பிரதேசத்தை சேர்ந்த 100 மேற்பட்ட குடும்பங்களை அங்கிருந்து மீட்டெடுத்து உதவித்திட்டங்களை வழங்கி அவர்களை தற்காலிக வீடுகளில் குடியமரவைத்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்வதற்கு ஏற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகளை அரச அதிபர் அவர்கள் செய்து தந்தார். அத்தோடு நிற்காமல் அம்மக்களுக்கு "கல்லாறு" எனும் கிராமத்தினை காடுவெட்டி நிலஅளவை செய்து காணிகச்சேரிகள் வைத்து மக்களுக்கு பகிர்ந்தளித்து கொடுப்பதற்கு வழிகாட்டினார். பின்னர் 100 குடும்பங்களுக்கு புதிய கல்வீடு அமைத்து கொடுப்பதற்கும் ஏற்ற ஒழுங்கினை செய்து தந்தார். உண்மையில் புதிதாக அரச சேவைக்கு சேர்ந்த எனக்கு 6 மாதத்தில் இவ்வாறான அனுபவத்தை பெற்றுக் கொள்வதற்கு இராசநாயகம் ஐயா அவர்கள் ஏற்ற உதவிகளையும் ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் தந்தார். வீட்டுத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது ஒவ்வொரு வியாழக்கிழமையும் முன்னேற்ற கூட்டம் கல்லாறில் நடைபெறும். அப்போது அவர் AGA நீங்கள் "திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது நெருக்கமான கண்காணிப்பு (Close monitoring) நடவடிக்கையை மேற்கொண்டால் தான் திட்டத்தினை வெற்றிகரமாக முடிக்கலாம்" என்று. உண்மையில் அதன் தாற்பரியத்தை நான் பின்னாளில் உணர்ந்து கொண்டேன். ஐயா அவர்கள் திட்டமிடல் சேவையை சேர்ந்தவர் என்பதால் திட்டங்கள் தொடர்பாக பழுத்த அனுபவத்தை கொண்டிருந்ததை என்னால் உணர முடிந்தது. அதே போல் தட்டுவன்கொட்டியிலிருந்து இடம்பெயர்ந்து கண்ணகிநகர் கிராமத்தில் வசித்த 250 குடும்பங்களுக்கு Swiss Red Cross மூலமாக வீட்டுத் திட்டத்தினை ஏற்பாடு செய்து தந்தார். கல்லாறில் நான் பெற்றுக்கொண்ட அனுபவம் இத்திட்டத்தினை வெற்றிகரமாக முடிப்பதற்கு வழிசெய்தது.

அதேபோல் கல்மடுநகரில் காடு வெட்டி 100 ஏக்கர் அளவில் மூலிகைத் தோட்டம் உருவாக்குவதற்கு ஏற்ற ஆலோசனை மற்றும் உதவிகளை செய்து தந்தார். WFP இன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உணவுக்கான வேலை" எனும் திட்டத்தின் மூலம் அப்பிரதேச மக்களுக்கு உணவினை வழங்கி இவ்வேலைத்திட்டத்தை செய்யக்கூடியதாக இருந்தது. இப்போது வடக்கு மாகாண சபை அதனை பொறுப்பேற்று செயற்படுத்திக் கொண்டிருக்கிறது.

இராசநாயகம் ஐயாவைப் பற்றி நிறைய சொல்ல முடியும். அவரின் ஆளுமை, நிர்வாக திறமை, திட்டமிடல், வழிநடத்தல் என்பன அவருடன் வேலை செய்த காலத்தில் எனக்கும் படிக்க கூடியதாக இருந்தது. வேலையில் கண்டிப்பாக இருந்தாலும் தனிப்பட்ட ரீதியில் இரக்க குணமுடையவர். அலுவலர்களின் சுகதுக்கங்களில் தவறாது கலந்து கொள்வார். எவ்வளவு வேலைப்பளு இருந்தாலும் சமய நிகழ்வுகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்கு கொள்வார். சிறுவர்கள் தொடர்பாக அதிக அக்கறையுடன் செயற்படுவார். வன்னியில் இயங்கிய சிறுவர் இல்லங்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள், உடுப்புகள் போன்றவற்றை கொழும்பு சென்று வரும் போது தனக்கு தெரிந்த உறவினர்கள், நண்பர்கள், மற்றும் நிறுவனங்களில் இருந்து பெற்று தனது வாகனத்திலேயே கொண்டு வந்து கொடுப்பார்.

அவருக்கு பல நோய்கள் இருந்தாலும் அதை வெளிக்காட்டாமல் வேலை செய்வார். தனது உடல் நலம் தொடர்பில் கவனம் எடுக்காமல் மாவட்டம் தொடர்பாகவே சிந்தித்து கொண்டிருப்பார் அவரது அனுபவம் மற்றும் ஆற்றல் என்பவற்றை அவரது ஓய்வுக்கு பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணசபையும் பின்னர் வடக்கு மாகாண சபையும் பயன்படுத்திக் கொண்டது. அவர் தற்போது எம்மை விட்டு பிரிந்து சென்றாலும் அவர் காட்டிய வழியில் எமது பணி தொடருவதற்கு அவரின் நினைவுடனேயே எமது பணியை முன்னெடுத்து செல்வதோடு அவரது ஆத்மசாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**சி.சத்தியசீலன்**
**மேலதிக அரசாங்க அதிபர்**
**கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமயம் சரிந்தது

**" வையத்து வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்கிற்கு அமைய இவ்வுலகில் வாழ்ந்து இறையடி சேர்ந்த எமது கிளிநொச்சி மண்ணின் மைந்தன் தெய்வத்திருமகன் அமரர் திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களது மறைவு தமிழ் கூறும் நல்லுலகில் வாழும் அனைவருக்கும் பேரிழப்பாகும். இவர் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராகவும் திட்டமிடல் பணிப்பாளராகவும் வடமாகாண பொதுநிர்வாக அமைச்சின் பிரதிப் பிரதம செயலாளராகவும் கடமையாற்றி இம் மண்ணிற்கும் மக்களிற்கும் அளப்பரிய சேவைகளினை ஆற்றிய உன்னத சேவையாளர் ஆவார்.

தாம் மட்டும் வளர்ச்சி அடைந்தால் போதாது தாம் வாழும் சமூகம் உயர்வடைய வேண்டும் என்ற உயரிய சிந்தனையோடு பல முயற்சிகளை மேற்கொண்டு பலருக்கு வழிகாட்டியாக திகழ்ந்து பலரை சமூகத்தின் உயர்நிலைக்கு கொண்டு வந்து மகிழ்ந்தவர் அமரர் இராசநாயகம் அவர்கள்.

எமது மக்களின் துன்ப துயரங்களையும், அவலங்களையும் எதிர்கொண்ட மிக நெருக்கடியான கால கட்டங்களில் தளராது துணிவோடு மக்களிற்கு சிறப்பாக சேவையாற்றிய பெருந்தகையாவார்.

கிளிநொச்சி மாவட்ட சமூக பொருளாதார அபிவிருத்தியில் முன் மாதிரியாக திகழ வேண்டும் என்பதற்காக அறிவியல் நகர் தோற்றம், கிளிநொச்சி நகரத்திட்டமிடல், விவசாய பொறியியல் பீடங்கள், தொழில்நுட்பக் கல்லூரி என்பவற்றைஅமைக்க அடித்தளம் இடப்பட்ட பெருமை இவரையே சாரும். அத்துடன் முடங்கி கிடந்த கூட்டுறவு துறை எழுச்சிப் பெற்றது இவரது காலத்திலேயாகும். பூநகரி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் இரண்டு தசாப்த காலங்களாக தலைவராக கடமையாற்றி பெரும் பங்காற்றியவரும் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995ம் ஆண்டில் இடம்பெற்ற யாழ்ப்பாண இடப்பெயர்வின் போது கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்த மக்களுக்குரிய தேவைகளினை நிறைவேற்றுவதற்கு முன்னின்று உழைத்தவர் ஆவார்.

சமூக நிறுவனங்களூடாக சமூகப்பணி மற்றும் சமயப்பணி என்பவற்றை ஆற்றி கரை எழில் விருது, யாழ் விருது போன்ற பல விருதுகளினை பெற்ற பல்துறை ஆளுமையானவர் ஆவார்.

எல்லா விடயங்களிலும் சிகரம் வைத்தார்போல் தமது ஓய்வுக்காலத்திலும் போரினால் பாதிக்கப்பட்ட ஏழைச்சிறார்களுக்கு கிளிநொச்சி நகரில் அமைந்த மகாதேவா சிறுவர் இல்லத்தினூடாக பல நூற்றுக்கணக்கான சிறார்களை பராமரித்து அவர்களுடைய திறமைகளினை பல்வேறு துறைகளில் வெளிக்கொணர்ந்து பெரும் பங்காற்றிய உன்னதமான ஒரு தலைவர்.

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வரம்பொருளினை பாதார விந்தங்களினை தொழுவோம்.**

**– கோபாலபிள்ளை நாகேஸ்வரன்**
**பிரதேச செயலாளர்**
**கண்டாவளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருநாவுக்கரசு இராசநாயகம்

பூநகரி பெற்றிட்ட அரிய பொக்கிஷம்
தன்னிகரில்லா தலைவனாய் தடம்பதித்து
தன்னினத்திற்கு பெருமை சேர்த்து
அன்பினால் பலரை அரவணைத்த
அழியா சிற்பம் நீங்கள்
போர்ச் சூழலிலும் போராடி வென்றீர்கள்
நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும்
தன்னம்பிக்கையும் தளரா துணிவும்
தன்னகத்தே கொண்ட சேவையாளன்
எத்தனை எத்தனை அறிவுரைகள்
அத்தனையும் கல்லில் பொறித்திட்ட எழுத்துக்கள்
அழியாதையா உங்கள் பெருமையும் புகழும்
என்றும் மறையாதையா உம் நினைவுகள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி..... சாந்தி..... சாந்தி

**- பிரதேச செயலாளர்**
**உத்தியோகத்தர்கள்**
**பச்சிலைப்பள்ளி, பிரதேசம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவையால் உயர்ந்த செம்மல்.....

கிளிநொச்சி மாவட்டத்தின் பிதாமகனாக விளங்கிய அமரர்.திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களின் மறைவு எம்மையெல்லாம் ஆழ்ந்த துன்பத்தில் ஆழ்த்தி நிற்கிறது. எமது மாவட்டத்தின் திட்டமிடல் பணிப்பாளராக, அரசாங்க அதிபராக மற்றும் வடமாகாணத்தின் பொதுநிர்வாக, கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக, பிரதிப்பிரதம செயலாளராக, என அரச பதவிகளின் மிக உயரங்களையெல்லாம் தொட்டுவிட்ட அமரர்.தி.இராசநாயகம் அவர்கள் ஒரு வியத்தகு விந்தை மனிதரே!...

அவர் வகிக்காத பதவிகளில்லை, செய்யாத சேவைகளில்லை, சுமக்காத பொறுப்புக்களில்லை, எதிர்கொள்ளாத நெருக்கடிகளில்லை, வெற்றிகொள்ளாத சவால்களில்லை எல்லாவற்றையும் தானே தனித்து எதிர்கொண்டு மீண்டெழுந்த பெருவிருட்சமாக நான் அவரைப்பார்க்கிறேன்.

எமது மாவட்டம் யுத்தத்தின் நெருக்கடியில் சிக்கித்தவித்த போது எம்மக்களின் இன்னல் களைவதற்காக அரசாங்க அதிபர் என்னும் பெரும் பொறுப்பை ஏற்று மக்களுக்காக அயராது இரவு பகலாக உழைத்ததை அக்காலத்தில் பிரதேச செயலாளராக கடமையாற்றிய நான் நன்கு அறிவேன். ஒரு பொழுதும் ஓய்ந்திராது அவரது அரச பணியும், சமூகப்பணியும் ஓடிக் கொண்டிருந்த விந்தை எம்மெல்லோருக்கும் பெரும் வியப்பை தந்திருக்கிறது. அரச உயர்பணி என்பதோடு மட்டுமல்லாமல் அநாதரவாக நின்ற சிறார்களையும், முதியோர்களையும் மகாதேவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சிறுவர் இல்லத்தினூடாகவும், யோகர் சுவாமிகள் திருவடிநிலையத்தினூடாகவும் பராமரித்துப்பேணி அவர்தம் குறைகளை நிறைகளாக்கிய பெருமை அவரது சமூக சேவையின் உச்சத்தை உலகறியச்செய்தது.

தான் உண்டு, தன் குடும்பம் உண்டு என வாழ்ந்து முடித்துவிடும் உலகத்தோர் மத்தியில் எம்மையும், எம் இனத்தையும், எம் மண்ணையும், நேசித்து வாழ்ந்த மனிதருள் மாணிக்கம் அமரர்.தி.இராசநாயகம் அவர்கள் எம்மண்ணுக்காற்றிய அளப்பெரும் பணிகளால் எம் எல்லோர் மனதிலும் நீங்கா இடம் கொண்டு சேவையில் உயர்ந்த செம்மலாய் திகழ்கிறார். அவர் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவரது பிரிவால் வாடும் இல்லக்குழந்தைகளும், அவர் தம் குடும்பத்தினரும் ஆறுதல் பெற இறையருள் நாடி பணிகிறேன்.

**திரு.த.முகுந்தன்**
**பிரதேச செயலாளர்**
**கரைச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர். திருநாவுக்கரசு இராசநாயகம்

பாசத்தைப் பயிராக்கி நேசத்தை உறவாக்கி
நேர்மையுடன் எங்கள் மாவட்டத்தை வளர்த்த
இராசநாயகம் ஐயாவே.....!
காலத்தை வீணாக்காது கம்பீர நடையுடன் உமது
வாழ்நாளைப் போக்கி வந்தீரே!
எல்லோருடனும் இனிமையாய் பழகி
ஒற்றுமையை வலுப்படுத்தி
உமக்கென உறவுகளையும் உருவாக்கி வந்தீரே!
இவற்றையெல்லாம் செய்துவிட்டு எங்களுடன்
இருக்காமல் இறைவனின் அரவணைப்பை
எளிதில் நாடிச் சென்றதேனோ?

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் இல்ல நிர்வாகம், குழந்தைகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

– ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**– பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும்**
**பிரதேச செயலகம், கரைச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற குறளுக்கமைய அமரர் திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள் நிச்சயமாக தெய்வத்துள் தெய்வமாகி இருப்பார் என்பதில் சந்தேகமே இருக்காது ஏனெனில் அவர் உயிருடன் இருந்த காலத்தில் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

இப்பொழுதும் எப்பொழுதும் அவர் யாவர் மனங்களிலும் வாழ்பவராகத்தான் இருக்கின்றார் என்றால் மிகையாகாது. தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தி தன்னால் முடிந்த அனைத்து சேவைகளையும் மக்களுக்கு பெற்றுகொடுக்க வேண்டும் என்ற உயர் சிந்தனை கொண்ட அன்னார் அதனை செயலிலும் காட்டி இன்றைய தலைவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்துள்ளார். ஐயா அவர்களின் இழப்பினை தாங்காது கதறி அழுத மகாதேவா ஆச்சிரம சிறார்களின் கண்ணீர் கடல் ஒன்றே அவரது சேவையின் மகத்துவத்தை எடுத்துரைக்கும் தக்க சான்றாகும்.

நான் இவரை கிளிநொச்சியில் நடைபெற்ற முதியோர் கௌரவிப்பு நிகழ்வில் இறுதியாக சந்தித்திருந்தேன் அவ்வேளையில் கூட மிகவும் கலகலப்பாகவும் நகைச்சுவையாகவும் உரையாடிக்கொண்டிருந்தார். அப்போது நான் எதிர்பார்க்கவில்லை இதுதான் நான் அவரை சந்திக்கப்போகும் இறுதிச் சந்திப்பு என்று. என்றும் எதிர்பாராது வருவது தான் இறப்பு எனும் உண்மை யாவரும் அறிந்ததே.

எது எப்படியோ

ஐயா அவர்கள் வாழும் காலத்திற்கு ஏகப்பட்ட மக்கள் சேவையினை செய்த மகானாகவும் வரலாற்று நாயகனாகவும் போற்றப்படுவார்

இவரின் இறப்பால் துயருறும் உறவுகளுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்

**ப.ஜெயராணி,**
**பிரதேச செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சவால்களை சாதனையாக்கி சாதனையாளர் சரிந்து விட்டாரா?

ஓய்வு என்பதே தெரியாத எமது சவால்களின் சரித்திரநாயகன் சரிந்து விட்டார் என்ற செய்தி எனது செவிகளில் நுழைந்த போது என்னால் நம்பமுடியவில்லை ஒரு கணம் என்னை நிலைப்படுத்தி கொண்டு விரைந்தேன் வைத்திய சாலை நோக்கி அவர் நிம்மதியாக நிரந்தரமாய் ஓய்வு எடுத்து விட்டார் என்பதை உணர்ந்தேன். எனது சிறு வயதில் திருக்கேதீஸ்வரத்தில் முதல் முதலாய் கண்ட கம்பீரமான வீறு நடை கொண்ட அன்புள்ளம் கொண்ட சேவையாளனை இழந்தேன். எனது வாழ்வில் எல்லாவற்றிலும் முதலாவதாக இருந்த பெருந்தகையாளரை இழந்து விட்டேன். அவர் கூறியது எதனையும் செய்யாது இருந்தமைக்கு காரணம் கூற முடியாது. செய்வதற்கான காரணங்களை கண்டறி என்பது அவரிடம் நான் கற்றுக் கொண்டதில் ஒன்று. அவருடன் கடமை செய்த காலத்தில் பொதுமக்களிற்கான பணி என்பது கடிதம் எழுதி கல்யாணம் பண்ணாதே நேரில் வீட்டுக்குச் சென்று சேவை செய் அவர்கள் எதனையும் அறியாதவர்கள் என்று தான் சொல்வார். எங்களுக்கு கடமைகளை பணிக்கின்றபோது மிக மிக அவசியம் என்பார். இன்றே முடிக்க வேண்டும் என்பார். இதற்கு அவர் கூறுவது மயிலே இறகு போடு போடு என்றால் போடாது பிடுங்கி எடு என்பார். எனது அரச சேவை பதுமனை புகுவிழா சமூகசேவை போன்ற எல்லாவற்றுக்கும் அடி கோலிய முதல் பெருந்தகை என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் தனது நினைவு மலருக்கும் முதல் முதலாக கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்க இடம் தந்துவிட்டாரோ என எண்ணத் தோன்றுகின்றது.

இம்மாமனிதனை பற்றி எழுத என்னால் முடியாது. அவரது அன்பும் பாசம் நேரிய சிந்தனையும் விடாமுயற்சியும் எம்மை என்றும் வழிநடத்திச் செல்லும் என்பதே உண்மை.

அவரின் இழப்பால் துயரும் அன்பின் அம்மா. அன்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரர்கள், பேரப்பிள்ளை மற்றும் இல்லக்குழந்தைகள், பணியாளர்கள் ஆகியோரது துயரத்தில் எனது குடும்பமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கௌரியம்மாள்சமேத திருக்கேதீஸ்வர நாதனை அருள்புரிய வேண்டும் என பிரார்த்தித்து நிற்கின்றேன்.

என்றும் அவர் தம் பாதைதனில் பயணிப்போமாக.

சாந்தி! சாந்தி!

**– சி. பத்மசிறி**
**உதவி ஆணையாளர்**
**காணி உரித்து நிருணயத் திணைக்களம்**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியின் பன்முக ஆளுமை

கிளிநொச்சி மாவட்டத்தின் சமகால வரலாற்றில் தடம் பதித்த ஒரு முழு மனிதன் இன்று எம்மிடமில்லை என்ற பெரும் மனக்குறையோடு அவரது நினைவை பகிர்ந்து கொள்கின்றேன். இராசநாயகம் என்ற பெயரை எங்காவது நாம் உச்சரித்தால் அவர் கிளிநொச்சி என்றும் பூநகரி என்றும் சொல்கின்ற பலரை நான் பலதடவை கண்டிருக்கின்றேன். இவர் இம் மாவட்டத்தினதும் பூநகரி பிரதேசத்தினதும் ஒரு இடுகுறியாக வாழ்ந்திருக்கின்றார். எமது மாவட்டத்தின் கல்வி வரலாற்றில் முதலாவது பேராதனை பல்கலைக்கழக மாணவனாக இவர் தெரிவாகி பல்கலை பாரம்பரியத்தை தொடக்கினார். நாட்டுக்கு வெளியே சென்று இங்கிலாந்தில் விஞ்ஞான மாணிப் பட்டத்தைப் பெற்று முதலாவது வெளிநாட்டு புலமையாளராகவும் தடம் பதித்தார். 1971ம் ஆண்டில் பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவராகி 19 வருடங்கள் தொடர்ந்து தலைவராக செயற்பட்டார். மாவட்ட கூட்டுறவுச் சபை செயற்படாது இருந்தபோது நியமனத் தல்லவராகி பின் தொடர்ந்து 6 வருடங்கள் அச்சபையை திறம்பட வழிநடாத்தினார். அவருடன் இணைந்து கூட்டுறவு சேவைக்கு பங்கு கொண்ட நான் இன்று வரை கூட்டுறவுச் சபையினை நிர்வகிக்க வேண்டும் என வலியுறுத்தி என்னையும் கூட்டுறவுத்துறையில் வழிப்படுத்தினார். இவ்வாண்டு அதிசிறந்த கூட்டுறவாளருக்கான விருதை வென்று அடுத்த ஆண்டிலிருந்து இராசநாயகம் ஞாபகார்த்த அதிசிறந்த கூட்டுறவாளர் விருது என நாம் வழங்க தீர்மானித்திருக்கின்றோம். இதனை நான் அவருக்கும் தெரியப்படுத்தி இருந்தேன்.

நிர்வாக நிலையில் ஒரு அரச அதிபராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடலில் ஒரு சிறப்பு வகுப்பு திட்டமிடலாளராகவும், பிரதிப் பிரதம செயலர் நிர்வாகமாகவும் ஆளுனரின் இணைப்பாளராகவும் பல பதவிகளை அவர் அலங்கரித்தார். மறு நிலையில் உருத்திரபுரத்தில் அமைந்திருந்த சோழர் கால ஆலயமான உருத்திரபுரீச்சரத்தை இலங்கையில் உள்ள ஐந்து ஈஸ்வரங்களில் இருந்து ஆறாவதாக இணைப்புச் செய்து அதனை நாடறியச் செய்தார். சிவபக்தனான இவர் சமயப்பணிகள் பலவற்றில் தன்னை இணைத்திருந்தார். சமூகப்பணி என்ற வகையில் போர்க்காலத்தில் அமைப்பு நடாத்திக் கொண்டிருக்கும் போது தனியாக புதுமுறிப்பை மையப்படுத்தி மகாதேவா ஆச்சிரமம் என்ற பெயரில் தனியான ஒரு சிறுவர் இல்லத்தை உருவாக்கி அனைத்து வளங்களையும் வசதிகளையும் ஏற்படுத்தினார். இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்த போது சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையின் தலைவரான திரு நல்லதம்பி அவர்கள் தலைமையில் உருவாகி திரு கதிரவேலு அப்பு அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட குருகுலத்தை இராணுவப்பிடியில் செல்லவிடாது தடுப்பதற்காக அதனை மகாதேவ ஆச்சிரம சிறுவர் இல்ல நிர்வாகத்தினுள் உள்ளீர்த்து தனது செல்வாக்கை பயன்படுத்தி இராணுவத்திடமிருந்து மீட்டெடுத்தார். அதனது வளங்களையும் இணைப்பு செய்து புதிதாக சர்வதேச மட்ட உறவுகளையும் தொடர்புகளையும் இணைப்பு செய்து மகாதேவா சுவாமிகள் சைவ சிறுவர் இல்லம் என்ற பெயரில் ஒரே நிர்வாகமாக்கி 387 வரையான ஆதரவற்ற பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் தந்தையாக செயல்பட்டதுடன் பரமலிங்கம் என்ற கொடையாளரிடமிருந்து பெற்ற 150 ஏக்கர் அளவிலான நெல்காணியான தியாகவெளி கமத்தினை சீராகப் பராமரித்து உணவு தன்னிறைவை நிலைநாட்டிக் காட்டினார். தன தந்தையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. திருநாவுக்கரசு பெயரில் அவரது குடும்பத்தினரது 10ஏக்கர் நிலத்தை அன்பளிப்பாக வழங்கி பல்லவராயக்காட்டில் மற்றொரு உணவு உற்பத்தி திட்டத்தை ஆரம்பித்தார். இவ்வகையில் சிறந்த கல்வியாளனாக, நல்ல நிர்வாகியாக சிறந்த கூட்டுறவாளனாக நிறைவான சமயப் பணியாளனாக நல்ல தலைசிறந்த சமூக சேவையாளனாக எனப் பல்துறை ஆளுமை கொண்ட எமது மாவட்டத்தின் முதன்மை மனிதன் திடீரென எம்மை விட்டு பிரிந்தாலும் அவரின் வழித்தடத்தில் பயணித்த பலர் அவரது பணிகளை தொடர அவர் தயார் படுத்தி விட்டே சென்றார் என்ற நல்ல திட்டமிடலை அவரது பன்முக ஆளுமையின் உச்சமென குறிப்பிட்டு அன்னாரது ஆத்மா சாந்தி அடைந்து நிறைமாந்தராக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அமரசிங்கம் கேதீஸ்வரன்,**
**தலைவர் மாவட்ட கூட்டுறவுச் சபை, கிளிநொச்சி,**
**உதவித் திட்டமிடல் பணிப்பாளர்,மாவட்டச் செயலகம், கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியின் தெய்வத்திருமகன்

# திருநாவுக்கரசு இராசநாயகம்

பரந்த இப் பூவுலகில் கோடிக்கணக்கான மக்கள் பிறக்கின்றனர். பிறந்தோர் அனைவரும் எல்லோரது மனங்களிலும் நிலைத்து நிற்பதில்லை வாழும் காலத்திலேயும் வாழ்வின் பின்னரும் எல்லோரது மனங்களிலும் அழியாத இடத்தைப் பெற்றுக்கொண்டு வாழ்ந்தவர்தான் எமது குருவாகிய முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரும், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளரும் இடைவிடாது பொதுப்பணி புரிந்து வந்தவருமாகிய எங்கள் உயர் திரு நாவுக்கரசு இராசநாயகம் ஐயா அவர்கள் ஆவார்.

நான் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய போது (இடம் பெயர்ந்து ஸ்கந்தபுரத்தில் இருந்த காலத்தில்) கிளிநொச்சி மாவட்டத்தின் அரச அதிபராக ஐயாவே இருந்தார். பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய மாணவர்களை அழைத்து "நீங்கள் பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியம் ஒன்றினை உருவாக்கி மக்களுக்கும் மாணவர்களுக்கும் பல்வேறு சேவைகளை செய்யுமாறு தெரிவித்தார்" மேலும் எமக்கு ஒரு கட்டிடத்தினை அமைத்து தந்தது மாத்திரமன்றி தேவையான தளபாடங்கள் புத்தகங்கள் என்பவற்றையும் தந்தார். மேலும் எங்களைப் பல்வேறு சிரமதானங்கள், பொதுப்பணிகள் என்பவற்றில் பங்கேற்க பணித்தது மாத்திரமன்றி நாம் அவ்வாறான வேலைகளில் ஈடுபடும்போது உத்துருளியில் வந்து பார்வையிட்டு பாராட்டுவதுடன் பல புத்திமதிகள் எல்லாம் சொல்லிச் செல்வார். "பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களாகிய நீங்கள் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கும் மாவட்டத்திற்கும் சிறந்த வேவையாற்றக்கூடிய நல்ல பண்பும் பக்குவமும் பொது நோக்கும் கொண்ட பிரஜகளாக வரவேண்டும்'' அதற்காகவே நான் உங்கள் அனைவரையும் இப்பொழுதே தயார்ப்படுத்துகின்றேன் என சொல்வார்.

தற்பெழுது காசுக்காக வேலை (cash for work) உணவுக்காக வேலை (food for work) எனப் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் பெயரினையோ திட்டத்தினையோ நாம் அறிவதற்கு முன்னரே இத்திட்டத்தினை எங்கள் ஐயா கிளிநொச்சி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தினார். குறிப்பாகச் சொல்லப்போனால் பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து ஸ்கந்தபுரம், அக்கராயன், வன்னேரிக்குளம், முக்கொம்பன் போன்ற பகுதிகளில் இருந்த போது வீதிகள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் இல்லாது ஒற்றைவழி பாதைகளாக இருந்தது. இப்பாதைகள் உடனடியாக திருத்தப்பட வேண்டியேற்பட்டது ஆனால் போதிய நிதி ஏற்பாடுகள் இல்லாத நிலை அப்பொழுது அரச அதிபராக இருந்த ஐயா பணிப்புரை ஒன்றினை விடுத்தார். ''நிவாரணம் பெறுபவர்கள் சிரமதானப்பணியில் ஈடுபட வேண்டும் அவ்வாறு ஈடுபடுபவர்களுக்கே நிவாரணம் வழங்கப்படும்'' என அவ்வாறு பணித்ததின் பெயரில் பல்வேறு பகுதிகளில் சிரமதானங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது முக்கொம்பன் ஸ்கந்தபுரம் வீதி அவ்வாறே திருத்தம் செய்யப்பட்டது. இதைத்தான் நாம் உணவுக்கான வேலை (food for work) என இப்பொழுது புதிதாகக் கூறுகின்றோம்.

ஐயாவின் கீழ் பணிபுரியக் கிடைத்தது நாம் செய்த பாக்கியமாகும். ஐயாவின் ஒவ்வொரு முடிவுகளும் தூர நோக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட உறுதியானவையாகவும் நடைமுறைச் சாத்தியமானதுமாவே இருக்கும். அவரின் காலத்தில் எமது செயலகம் மூடும் நேரம் தெரியாது. அதாவது 24 மணி நேரமும் திறந்திருக்குமாப் போலிருக்கும். சில வேளைகளில் மூன்று நேர உணவுகளையும் அவர் அலுவலகத்திற்கு எடுப்பித்து உண்ட நாட்களும் உண்டு. ஐயா கடமை நிமிர்த்தமாகக் கொழும்பு செல்லப் போகின்றார் எனில் முதல் இரண்டு நாட்களும் எமது செயலக சகல கிளைகளும் அரசாங்க அச்சகம் போல் இரவு பகல் பாராது சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கும். அவ்வாறு இயங்கி சகல ஆவணங்களும் தயார்ப்படுத்தப்பட்டு கொழும்பிற்கு எடுத்துச்செல்லப்படும். அவ்வாறு உத்தியோகத்தர்களை இரவு பகலாக வேலை செய்வித்து எடுத்துச் சென்ற கடிதங்கள், ஆவணங்கள் என்பவற்றிற்கான விளைவுகள் அவர் மீள வந்தவுடன் தெரியும். அவர் என்ன என்ன விடயங்கள் அங்கு போய் செய்ய வேண்டும், எவ்வளவு ஒதுக்கீடுகள் பெற வேண்டும், என்னென்ன திட்டங்களுக்கு அனுமதி பெற வேண்டும் என எடுத்துச் சென்றாரோ அனைத்தையும் செய்து முடித்தே வருவார். வந்தவுடன் அதற்குரிய கடிதங்கள் ஒவ்வொன்றாகக் காட்டி "பார்த்தீங்களா எல்லாம் செய்து முடித்து கொண்டு தான் வந்திருக்கின்றேன்". நீங்களும் இவ்வாறு முடியும் என நினைத்து எல்லா விடயங்களிலும் ஈடுபடவேண்டும் என கூறுவதுடன் என்னிடம் எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள வேண்டும் எனவும் கூறுவார்.

எவ் வேலையாயினும் அதனை 100% வீதம் உள்வாங்கி திறம்பட நிறைவேற்றுவதில் வல்லவர். எனது கடமைப்பட்டியலுக்கு மேலதிகமாக என்னை மகாதேவ சிறுவர் இல்ல வேலைகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிக்குமாறு பணித்திருந்தார். அப்பொழுது சில நாட்களில் இரவு எட்டு ஒன்பது மணிவரை அலுவலகத்திலிருந்து வேலை செய்துவிட்டு அதன் பின்னர் என்னையும் அழைத்துக்கொண்டு சிறுவர் இல்லம் சென்று ஒவ்வொரு பிள்ளைகளுடனும் கதைத்துப் பின்னர் தென்னங்கன்று முதல் மரக்கறித்தோட்டம், சமையற்கூடம் மற்றும் மலசல கூடம் வரை அனைத்தையும் பார்வையிட்டு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரைகள்,பணிப்புரைகளை வாழங்கி வீடு செல்ல நல்லிரவாகி விடும். இவ்வாறு ஒவ்வொரு விடயங்களிலும் அவர் காட்டிய அக்கறையினாலேயே அந்த இல்லமானது இலங்கையில் இருக்கும் இல்லங்களில் முதல்தர சிறுவர் இல்லமாக திகழ்கின்றது என்றால் மிகையாகாது.

மேலும் ஐயா கொழும்பு செல்லும் நாள் காலை திரு.குமரன் என முகவரியிட்டு நான் மேற்கொள்ள வேண்டிய பல வேலைகளை இலக்கமிட்டு பட்டியலிட்டுக் கொடுத்தனுப்பியிருப்பார். அதனைப் பர்த்து வேலையை மேற்கொள்ள தயாராவதற்கிடையில் வவுனியா உப அலுவலகத்திலிருந்து fax வந்தது என கொண்டு வருவார்கள். வாங்கிப் பார்த்தால் வவுனியா வரை வாகனத்தில் பயணிக்கும் போது மேலும் பல வேலைகளை எழுதி வவுனியாவில் உள்ள எமது உப அலுவலகத்தில் fax பண்ணச் சொல்லி கொடுத்து சென்றது தான், அது. இவ்வாறு மேலும் பல உத்தியோகத்தர்களுக்கும் fax வரும். அதாவது வேலைகள் தொடர்பில் இடைவிடாத சிந்தனையின் வெளிப்பாடே இவ்வாறான செயற்பாடாகும்.

ஐயா அலுவலர்களுக்கு கூறும் ஒரு சில வார்த்தைகளை இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"வேலை தான் உங்களுக்கு முதல் மனைவி"

*"AR,FR எல்லாம் கள்ளன்களுக்கு தான் நேர்மையாக வேலை செய்பவர்களுக்கில்லை"

*"வேலை செய்யாமல் இருக்கிறதற்கு காரணம் சொல்லக் கூடாது வேலை செய்வதற்கான காரணத்தை கண்டு பிடிக்க வேண்டும்"

*"தளர்நார் இல்லாமல் பனை ஏறவந்திட்டார்" ( கோவையோ அல்லது குறிப்புப் புத்தகமோ இன்றி அரசாங்க அதிபரின் அறைக்குள் நுழைந்தால்)

. சகல அலுவலர்களும் பல்வேறு பயிற்சிப் பட்டறைகளில் பங்கு பற்ற வேண்டும் என்றும் ஒவ்வொரு பயிற்சியும் ஏதோ ஒரு வகையில் உத்தியோகத்தர்களின் வினைத்திறனை அதிகரிக்ககும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். யுத்த காலத்தில் கூட GTZ போன்ற நிறுவனங்களிடம் கோரிக்கைகளை முன்வைத்து எம்மை பல்வேறு பயிற்சிகளில் பங்கு கொள்ள வைத்தது மாத்திரமன்றி அவரும் பங்குகொன்டதுமுன்டு ஒருநாள் அரச அதிபர்கள் மாநாட்டிற்கு செல்லும்போது தம்புள்ளையில் நாம் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை எம்மிடம் வருகை தந்து எம்முடன் சேர்ந்து ஒரு சில மணித்தியாலங்கள் பயிற்சியில் பங்கெடுத்து உற்சாகத்தை ஏற்படுத்தி சென்றமை என் கண்களில் இப்பொழுதும் நிழலாடுகின்றது.

கிளிநொச்சிக்கு பொருத்தமான சொல் ஒன்று சொல்லச் சொன்னால் "இராசநாயகம் ஐயா" எனக்கூறின் மிகையாகாது ஏனெனில் கிளிநொச்சி பற்றிய எந்த விடயமாகினும் அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் ஆன்மீகம் வரை ஐயாவின் பங்களிப்பு அல்லது ஆலோசனை என்பது பெருமளவில் இருக்கும். கிளிநொச்சியின் வரலாறு பதிவுசெய்யப்படும் போது திருநாவுக்கரசு இராசநாயகம் என்ற பெயர் பெரும்பகுதியை தனதாக்கி கொள்வதுடன் பொன் எழுத்துக்களாலும் பொறிக்கப்படும் என்பதில் துளியளவும் ஐயமில்லை. ஐயாவிற்கு கம்பன் விருது முதல் யாழ்விருது வரை பல்வேறு உயரிய விருதுகள் கிடைக்கப்பெற்றன இவரிற்கு விருது வழங்குவதனூடாக அவ் விருதுகளும் பெருமை யடைந்தன எனின் மிகையாகாது.

கிளிநொச்சியின் சொத்தாகிய எமது ஐயாவின் இழப்பு எனறுமே ஈடுசெய்யமுடியாத ஒன்றாகும். ஐயாவின் சேவைக்கும் வளர்ச்சிக்கும் தூணாக இருந்து உழைத்த அம்மா பிள்ளைகள் மற்றும் உறவுகளிற்கு எமது நன்றிகளை பதிவு செய்வதுடன் ஈடுசெய்யமுடியாத இழப்பினால் துவண்டுள்ள அவர்களின் துயரிலும் நாம் பங்குகெள்கின்றோம். ஐயாவின் பணியினை அவர்களின் பிள்ளைகள் நிச்சயம் தொடர்வார்கள் என்பதுடன் ஐயாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்திக்கின்றோம்..

**சோமசேகரம்பிள்ளை பிரேம்குமார் (குமரன்)**
**அபிருத்தி உதவியாளர்**
**மாவட்டச்செயலகம்**
**கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதாரண புருஷர் அமரர் உயர்திரு திரு. இராசநாயகம அவர்கள்

நானும், அமரர் உயர்திரு தி. இராசநாயகம் அவர்களும் நீண்ட காலமாக நெருக்கமாகப் பழகியுள்ளோம், 'பணிபுரிந்துள்ளோம், அயலவர்களாக இருந்துள்ளோம், ஒரே வீட்டிலும் சீவித்துள்ளோம். அதனால் அவரைப் பற்றிக் கூறுவதற்குப் பல விடயங்கள் உள்ளன. ஒரு சக பணியாளன் என்ற வகையில் பொது நிர்வாகத்தில் அவரது பங்களிப்புப் பற்றி மட்டும் முக்கியமான செய்திகள் சிலவற்றினைப் பதிவு செய்யலாம் என நினைக்கின்றேன். அவர் மன்னார் மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும், மாகாண சபையிலும் நீண்ட காலமாக பணிபுரிந்து குறிப்பிடத்தக்கதான பல பணிகளை செய்து முடித்தார். முன்னுதாரணமான ஒரு பொதுசன ஊழியனாக திகழ்ந்தார்.

இளைஞனாக இருக்கும்போது அவருக்குக் கிடைத்த அடிமட்ட அரசியல் சமூக செயற்பாட்டு அனுபவங்கள் சாதாரண மக்களின் பிரச்சினைகளைப் பற்றியும், உள்ளூர் மற்றும் பிராந்திய அபிவிருத்திப் பிரச்சினைகளைப் பற்றியும் வளமான பரிந்துணர்வையும் பார்வையையும் வழங்கியிருந்தன. அத்துடன், நோக்கமொன்றின் பொருட்டு சமூகத்தை ஒருங்கு திரட்டும் தலைமைத்துவ ஆற்றலையும் கொடுத்திருந்தன. இவை அவர் மேற்கொண்ட சகல பணிகளுக்கும் பேருதவியாக இருந்தன. கூட்டுறவுத் துறை, இடம்பெயர்ந்த மக்களுக்கான நலன்புரி சேவை வசதிகளை வழங்குவது அவர்களை மீளக்குடியமர்த்துவது, வாழ்வாதார முயற்சிகளை ஒழுங்குசெய்வது, சிவில் நிர்வாகத்தை மீள நிறுவுவது போன்ற பல பணிகளை அவர் திறம்படச்செய்ய அத்திவாரமாக அமைந்தன.

அவர் வகித்த சகல அரச பதவிகளிலும் ஒரு உன்னதமான பொதுசன ஊழியனாகவே செயற்பட்டார். சுற்றுநிருபங்களையும், அறிவுறுத்தல்களையும் அவற்றின் நோக்கத்தின் அடிப்படையிலேயே வியாக்கியானம் கொடுத்து அமுலாக்கம் செய்தார். அவற்றின் நோக்கத்தையடையும் பொருட்டு வெளிப்படையாகவே அவற்றிலிருந்து விலகியும் செயற்பட்டார். எப்போதும் பொதுமக்களுக்கு அல்லது பயனாளிக்கு நன்மையளிக்கும் விதத்தில் அவற்றை அமுல் செய்தார். இதன் பொருட்டு எப்போதும் மேலிடங்களுக்குத் துணிவாக அவ்வப்போதே விடயங்களை முன்வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் இராசநாயகம் அவர்கள் துணிவுள்ள சிறந்த அமுலாக்கும் ஆற்றல் கொண்டவராக செயற்பட்டமை அவருக்கு இறைவனால் வழங்கப்பட்ட ஒரு கொடையாகும். கருத்தியல் ரீதியாக இந்த விடயம் இன்னமாதிரியான பெறுபேற்றைத் தரவேண்டும். அதற்குரிய முறையில் இந்த செயல்திட்டத்தை அல்லது நடைமுறையை அமுல் செய்து நடத்துதல் வேண்டும் என்று கூறினால் அந்த மாதிரி அதனைக் குறிப்பிட்ட கால அட்டவணைக்குள் அமுலாக்கி முடிப்பார். இடைநேர் விளைவான பிரச்சினைகள், தேவைகள் ஏதும் ஏற்படின் தற்துணிவுடன் தீர்மானங்களை எடுத்து நிறைவேற்றி முடிப்பார். குறிப்பாக அபிவிருத்தித் திட்டங்களை செய்யும்போது எப்போதும் மக்களின் நீண்டகால நன்மை, தூர நோக்கு என்பவற்றுடன் செயற்படுவார். அவர் ஒரு கருமத்தை முன்னெடுத்தால் பின்வாங்கமாட்டார். தொடர்ந்து ஒவ்வொரு சிக்கல்களையும் வெவ்வேறு மட்டங்களுக்கு எடுத்துச்சென்று இறுதித்தீர்வு வரை பின்தொடர்ந்து நிறைவேற்றிவைப்பார். நேரடியாக களத்திலிறங்கி வேலை செய்வது அவரது வெற்றிகளின் மற்றுமொரு இரகசியமாகும்.

அவரது நினைவாக பல்வேறு திட்டங்களும் செயற்பாடுகளும் அங்காங்கே நினைவுச் சின்னங்களாக காட்சி தருவதைக் காணலாம். அவர் பொதுசன ஊழியர்களுக்கு விட்டுச் சென்ற பல செய்திகள் உள்ளன. இந்த நினைவு மலரில் அவரைப் பற்றி பல அன்பர்களும் ஏனைய பக்கங்களில் குறிப்பிடுவார்கள் என்பதனால் அவற்றினை தவிர்த்துள்ளேன்.
இயற்கை நியதிக்கு ஏற்ப அவர் இறைபதம் அடைந்துள்ளார். அவரின் பிரிவினால் துயருறும், குறிப்பாக, அவரது உறவினர்களுடனும், இல்லச்சிறார்களுடனும் நானும் இணைந்து கொள்கின்றேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாகுக.

**சி.இரங்கராசா,**
**முன்னைநாள் பிரதம செயலாளர், ஆளுநர் செயலாளர், மற்றும் ஆலோசகர்.**
**வடக்கு-கிழக்கு மாகாணம், வடமாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களால் நேசிக்கப்பட்ட அமரர் தி. இராசநாயகம்

அமரர் திரு. இராஜநாயகம் அவர்களின் மறைவு கிளிநொச்சி மாவட்டத்திற்கு பெரிழப்பாகும். என்றுமே செயல்வீரனாக மக்டகள் பணியே மகேசன் பணி என்ற கொள்கையைக் கொண்டு செயற்பட்ட இவர் சிறந்த அரசசேவை அதிகாரியாகவம் மனிதநேயராகவும் சமூக சமய சேவையாளராகவும் விளங்கினார். நெருக்கடி மிக்க போர்க் காலத்தில் கிளிநொச்சியில் திட்டமிடல் பணிப்பாளராகவும் பின்னர் அரசாங்க அதிகாரியாகவம் வெகு சிறப்பாக அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்து செயற்பட்டு மக்களுக்குத் தேவையான அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றினார்.

சாதாரண குடிமக்களும் சந்திக்கக் கூடிய ஒரு மனம் கவர்ந்த அதிகாரியாக இவர் பணியாற்றியமையை நாம் கண்கூடாகப் பார்த்தோம். கிளிநொச்சி மாவட்டத்தின் மூலை முடுக்குகளெல்லாம் சென்று மக்களின் குறைகளை கண்டறிந்ணுது அதற்கான உதவிகளை மனிதநேயம் நம்பிக்கை நிதியத்தின் ஊடாக பெற்று நிறைவேற்றினார்.

மனித நேய நம்பிக்கை நிதியமான கொழும்பு, அமெரிக்கா, இலண்டன், அவுஸ்திரேலியா அமைப்புக்கள் அனைத்துக்கும் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் இவரது பிரிவு ஒரு பேரிழப்பாகும். எந்த ஒரு உதவியையும் ஏதாவது ஒரு வகையில் வதாடிப் பெறுவதில் இவர் வல்லவர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் நெடிருக்கடியான காலகட்டத்தில் சிறுவர்இல்லம்முதியோல் இல்லம் கோயில்கள் எனப் பல தொண்டு நிறுவனங்களையும்அ மைத்து அரும்பாடு பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவற்ற சிறுவர்களையும் கைவிடப்பட்ட முதியவர்களையும் பராமரிப்பதில் அரும்பாடுபட்டார்.

இவ்வாறு திகழ்ந்த இவர் இன்னும் சில காலம் வாழ்ந்து மக்கள் பணிகளை மேற்கொண்டிருக்கலாம். தனது 71 வது வயதில் இறைபதம் அடைந்த இவர் மறைந்தாலும் இவரது பணிகள் என்றும் நினைவு கூறப்படும். இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**- அ. கயிலாசபிள்ளை**
**தலைவர்**
**மனிதநேய நம்பிக்கை நிதியம்**
**கொழும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை இந்துமாமன்றம்

ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)

President:
Kandiah Neelakandan
Phone: 2580807 (Res)
2371100 (Off) - Fax : 2371111
neela@mnlaw.lk

Hony. General Secretary:
Velupillai Kandasamy
Phone: 2586620 (Res)
Mobile: 071-5349150
vkandasamy@gmail.com

Hony. Treasurer:
Abirami Kailasapillai
Phone: 2575566 (Res)
Fax : 2575472
hariomaka@gmail.com

## மறைந்தும் மறையாத மாமனிதர்
## அமரர் திருநாவுக்கரசு இராசநாயகம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற உலகப்பொதுமறையின் கூற்றுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் எமது பேரன்புக்கும் மதிப்பிற்குமுரிய மாமனிதர் திருநாவுக்கரசு இராசநாயகம் ஆவார்.

அன்பு, பண்பு, அடக்கம், ஆளுமை நிறைந்த ஓர் உத்தம மனிதரை நாம் இழந்துவிட்டோம். அமரர் இராசநாயகம் அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி கிராமத்தில் பிறந்து அரசபணியில் தன்னை இணைத்துக் கொண்டதுடன் அதில் தன் விடாமுயற்சியால் பல பதவி உயர்வுகளைப் பெற்று, இறுதி நாட்களில் கிளிநொச்சி மாவட்டஅரசாங்க அதிபராகப் பதவியேற்று பொதுமக்களுக்கு தன்னாலான சேவைகளை தன்னலம் கருதாது வழங்கி வந்தார்.

இவரது சேவைக்காலத்தில் கிளிநொச்சி மாவட்டம் பல துறைகளில் முன்னேற்றம் கண்டது. இதனால் அம்மக்களால் "மண்ணின் மைந்தன்" என்ற கௌரவப் பெயராலும் அழைக்கப்பெற்றார்.

அரசசேவையுடன், கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தின் சிறுவர் இல்லத்தின் தலைவராகவும், கிளிநொச்சி யோகர்சுவாமி முதியோர் இல்லத் தலைவராகவும் பொறுப்புவகித்து சீரிய சமூகப்பணிகளையும் முன்னெடுத்திருந்தார். உருத்திரபுரம் சிவன் ஆலய தர்மகர்த்தாசபைத் தலைவராகவிருந்து சமூகப்பணிகளுடன் சமயப்பணிகளையும் முன்னெடுத்து வந்தார். இதனால் தனது தலைமைப் பொறுப்பிலிருந்த கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்தை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்துவ சங்கமாக இணைத்து அம்மன்றத்தின் வளர்ச்சிக்காக தன் வாழ்நாள் முழுவதும் அரும்பாடுபட்டார். இந்து மாமன்றத்தின் வளர்ச்சி கருதி எமது முகாமைப்பேரவை உறுப்பினராக இணைந்து எம்முடன் சகல வழிகளிலும் தனது ஒத்துழைப்பை நல்கிய அப்பெருமகன் எமது சமய மற்றும் சமூகநலன் நடவடிக்கைகளிலும் தோளோடு தோள் நின்று உதவி வந்தார்.

நோய்வாய்ப்பட்ட நிலையில் எமது நிகழ்வுகளில் நேரில் கலந்து கொள்ள முடியாத நிலையிலும் கடிதம் மற்றும் தொலைபேசி மூலம் எம்முடன் தொடர்புகளை ஏற்படுத்தி தனது சேவையைத் தொடர்ந்ததுடன் மாமன்றத்துடன் நெருக்கமான உறவையும் பேணிவந்தார். தனது வாழ்நாளின் இறுதிக் காலத்திலும் மகாதேவா ஆச்சிரம சிறார்களின் கல்வி மற்றும் வாழ்வாதாரம் தொடர்பாகவே சதா சிந்தித்து செயற்பாடுகளை முன்னெடுத்து வாழ்ந்தார்.

அவரின் இழப்பு அன்னாரின் குடும்பத்தவர்க்கும் இந்து மக்களுக்கும் ஓர் பேரிழப்பாக இருக்கும் அதேவேளை அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கும் ஈடுசெய்யமுடியத ஓர் இழப்பாகவே அமைந்துள்ளது.

அன்னாரின் ஆத்மா பரம்பொருளின் திருவடிநீழலில் சாந்திபெற மாமன்றத்தில் எழுந்தருளி அருள்பாலித்துக்கொண்டிருக்கும் எல்லாம்வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் சேவடிகளை வணங்கி நிற்கின்றோம்.

**"ஆகுவதாகுங்காலத்து அழிவதுஅழிந்து சிந்திப்**
**போகுவதயலே நின்றுபோற்றினும் போதல்திண்ணம்"**

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!**

**இறைபணியில்**
**கந்தையா நீலகண்டன்**
**தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்ந்து முன்னுதாரணமாக திகழ்ந்த பெருமகன்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்"**

என்னும் வள்ளுவர் வாக்குக்கமைய வாழ்ந்து, ஏழை, எளிய சிறுவர்களை அரவணைத்து வாழ்ந்தவர் எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய பெருந்தலைவர் அமரர் உயர்திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் ஐயா அவர்களாவர்.

தனது வாழ்வில் தன்னைபொறுத்து மற்றவரை வாழ வைத்த பெருந்தலைவர், ஏழை எளிய மக்களுக்காக தன் அனைத்து வளங்களையும் பயன்படுத்தி வாழ்ந்த ஒருவராவார். எல்லோரும் இவ்வுலகில் இன்புற்றிருக்க வேண்டும் என்னும் நன்நோக்குடன் செயலாற்றிய பெருந்தகை.

தன் சொந்தப் பிள்ளைகளை விட, இல்லப்பிள்ளைகளையே தன் சொந்தப்பிள்ளைகளாகக் கருதி வாழ்ந்தவர், வளர்த்தவர். இன்றும் அப்பிள்ளைகள் ஐயாவை நினைத்து கண்ணீர் விட்டழும் காட்சி எம்முள்ளமெல்லாம் நெக்குருக வைக்கின்றது. சகல பிள்ளைகளையும் தன் பிள்ளைகளாக தலை தடவி வாழ்த்துபவர். இன்று ஐயாவைத் தேடி அழும் பிள்ளைகள் அனேகர். அவர்களை ஆற்றுவதே பெரும் சிரமம். பகீரத முயற்சியின் பின்பே அமைதியடைந்துள்ளனர்.

ஐயா பிள்ளைகளில் பற்றுள்ளவர், பாசமுள்ளவர். பிள்ளைகளும் அவ்வாறே அவர்மீது. பிள்ளைகளின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அக்கறையுடன் திகழ்ந்தவர். பிள்ளைகளின் மகிழ்ச்சியில் இறைவனைக் கண்டு மகிழ்ந்தவர்.

**பொன். நித்தியானந்தன்**
**தலைவர்**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**காந்தியப் பணியையும் காலமறிந்து செய்தவர் அமரர் திருநாவுக்கரசு இராசநாயகம்.**

## அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் அனுதாபச் செய்தி

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின்முன்னாள் தலைவரும் ஆயுட் கால அங்கத்தவருமான திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களின் மறைவு சங்கத்திற்கும் காந்திய சமூகத்திற்கும் பேரிழப்பாகும்.

01.05.1946 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டம் பூநகரியில் பிறந்த தி. இராசநாயகம் அவர்கள் வடமாகாண பிரதிப் பிரதம செயலாளராகவும் கிளிநொச்சி மாவட்டத்தின் அரச அதிபராகவும் அரச பணி புரிந்து ஓய்வுபெற்றவர். இளமையில் இருந்தே சமூகப் பணிகளில் ஈடுபாடு கொண்ட அவர் தனது ஓய்வுக் காலத்தை பாதிக்கப்பட்ட வறுமை நிலையிலுள்ள சிறுவர்களோடு கழித்து வந்தார். பெருந்தொகையான சிறார்களுக்கு உணவு, உடை, தங்குமிடம், கல்வி கொடுத்து அறப்பணியாற்றிவரும் மகாதேவ சுவாமிகள் சைவச் சிறுவர் இல்லத்தின் தலைவராகவும் பல்வேறு சமய, சமூக நிறுவனங்களின் அங்கத்தவராகவும் தனது இறுதிக்காம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை செயற்பட்டு வந்துள்ளார்.

தனது இளமைக் காலத்தில் ஏற்பட்ட காந்திய சர்வோதய ஈடுபாட்டின் காரணமாக பல்வேறு சர்வோதய வேதத் திட்டங்களில் பங்குபற்றிய வந்துள்ளார். இவ்வாறு வளர்ந்து வந்த காந்திய ஈடுபாட்டினால் எமது சங்கத்தில் இணைந்து பணியாற்றியதுடன் தலைவராகவும் விளங்கினார். நாட்டின் போர்ச் சூழல் காரணமாக அழிவடைந்த நிலையில் இருந்ததும் ஆக்கிரமிப்புக்குட்பட்டிருந்ததுமான உருத்திரபுரம் எட்டாம் வாய்க்காலில் அமைந்துள்ள காந்தி நிலையத்தை (சிறுவர் இல்லம்) மீட்டெடுத்து புனரமைத்ததுடன் ஆதரவற்ற சிறுவர்கள் அங்கு தங்கியிருந்து கல்வி பெறவும் வழிவகை செய்தார்.

ஓயாது இயங்கிக் கொண்டிருந்த அன்னாரின் சமய சமூக பணிகளில் கௌரவித்து கடந்த ஆண்டு யாழ் மாநகர சபை சைவ சமய விவகாரக்குழு "யாழ் விருது" வழங்கிக் கௌரவித்திருந்தமை அவரின் தொண்டுக்குக் கிடைத்த சிறந்த பாராட்டாகும். அன்னாரின் பன்முகப் பணிகளைப் பாராட்டி விருது நாயகன் வாழ்ந்த விழா அமைப்பு (ஜெயந்தி நகர், கிளிநொச்சி) இமயம் என்ற நூலை அண்மையில் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

சேவை ஒன்றின் மூலமே கடவுளை அடைய முடியும் என்ற காந்தியடிகளின் கருத்துக்கு இலக்கணமாக ஒரு சிறந்த காந்திப் பற்றாளராக மனித நேயம் மிக்க பண்பாளராக கல்விப்பணி, அபிவிருத்திப் பணி, கலைப்பணி, சமூகப்பணி, ஆன்மீகப் பணி என அனைத்திலும் தனது பெறுமதியான உழைப்பை நல்கி மானுட வர்க்கத்தின் விடியலுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுபட்டவராக விளங்கிய தி. இராசநாயகம் அவர்களின் இழப்பு என்றுமே ஈடுசெய்ய முடியாதது. அன்னாரின் இழப்பினால் கதிகலங்கி நிற்கின்ற அவர் தம் குடும்பத்தினருக்கும் மகாதேவா சிறுவர் இல்லச் சமூகத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையம் காந்திய அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் காந்தியப் பணிக்காகவும் காந்திய கொள்கைப் பற்றுக்காகவும் அகில இலங்கை காந்தி சேவா சங்கம் என்றும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

மண்ணையும் மக்களையும் நேசித்த மாமனிதர்கள் என்றும் மக்கள் நெஞ்சங்களில் நிறைந்திருப்பார்கள்.

**எம்.ஷாந்தன் சத்தியமூர்த்தி M.A**
**பொதுச்செயலாளர்**
**அகில இலங்கை காந்திசேவா சங்கம்.**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற வாக்கியத்திற்கு அமைவாக வையகத்திலே வாழ்ந்து தெய்வமாகிவிட்ட எனது அன்புக்கும் பாசத்திற்கும் பெருமதிப்புக்கும் உரிய மனிதரல்ல மாமனிதர் அமரர் திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள்.

இந்த மாமனிதருடன் குறுகிய காலம் தான் அதாவது கிட்டத்தட்ட ஐந்து வருடங்கள் தான் நெருங்கிப் பழக எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தக் குறுகிய காலத்தில் யான் இந்த மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு வரும்போதெல்லாம் என்னுடன் கதைப்பதும் ஆலோசனை கூறுவதெல்லாம் இந்த இல்லச் சிறுவர்களின் எதிர்காலம் பற்றியும் இல்லத்தைப் பற்றியும் தான். அத்துடன் இல்லங்களில் என்னென்ன இருக்கின்றன. என்னென்ன தேவைகள் இருக்கின்றன என்பது பற்றியும் கூறுவார். அத்துடன் எல்லா இடங்களுக்கும் என்னைக் கூட்டிச் சென்று காட்டுவார். அப்படிப்பட்ட மாமனிதர் தனக்கென வாழாது தனது வாழ்நாளின் பெரும்பகுதியை இந்த இல்லச் சிறுவர்களின் புனிதமான பணியில் தன்னை இணைத்துக் கொண்டார்.

யான் இந்த இல்லத்திற்கு முதன்முறை வரும்போது இந்த இல்லத்தைப் பார்த்தேன். இது எனக்கு ஒரு சிறுவர் இல்லமாகத் தெரியவில்லை. இது ஓர் அரச அலுவலகமாகத் தோன்றியது. அப்படி இந் நிர்வாகம் அமைந்திருந்தது என்னை வியப்பில் ஆழ்த்தியது. இந்த இல்லம் தற்போது பெரு விருட்சமாக பல பாகங்களிலும் வேரூன்றி இருப்பதற்கு இந்த மாமனிதரின் முகாமைத்துவம் ஆளுமை, தன்னலமற்ற சேவைகள், உறுதியான பற்று என்பனவே மூல காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மாமனிதர் இன்னும் சிலகாலம் அல்ல பல காலம் வாழ்ந்து இருக்கலாம். இருப்பினும் அவர் விட்டுச் சென்ற அவரது அறப்பணி, அன்புப்பணி மென்மேலும் தொடர நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் பாதார விந்தங்களைப் பணிகின்றேன்.

நன்றி

ஓம் சாந்தி!

**சி. மகாதேவன்**
**அன்னை சிவகாமி அறக்கட்டளை**
**நயினாதீவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடு செய்ய முடியாத பேரிழப்பு

மனிதர்கள் மரணிக்கும்போது அது அவர்களின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் ஒரு பெரும் இழப்பாக அமைந்து விடுகிறது. ஆனால் ஒரு சிலரின்இறப்போ அவர்கள் வாழும் சமூகத்துக்கே பேரிழப்பாக அமைந்து விடுகிறது. அவர்கள் பிறரின் நலன்களுக்காகத் தங்களை அர்ப்பணித்து வாழ்ந்த வாழ்வும், இந்த வாழ்வினூடாக அவர்கள் செய்த சேவைகளும் அவர்களை மனித கலத்தின் மறக்கப்பட முடியாத மனிதர்களாக உயர்த்தி விடுகின்றன.

ஒரு அரசாங்க உயர் அதிகாரியாக ஒரு ஆன்மீகவாதியாக மக்கள் சேவையாளனாக திரு. தி. இராசநாயகம் அவர்கள் வாழ்ந்தவாழ்வு அவரை அப்படியொரு உன்னத நிலைக்கு உயர்த்தி விட்டது. அதனால் தான் அவரின் இறப்பு எமது சமூகத்தின் பேரிழப்பா கமாறி விட்டது.

இவர் தன் அரச அதிகாரத்தின் ஒவ்வொரு சிறு அம்சங்களைக் கூட மக்களின் நலன்களுக்காகப் பயன்படுத்தினார். சிதைந்து கிடந்த ஆலயங்களைப் புணரமைத்து மக்களுக்கு மன ஆறுதல் தரும் மையங்களாக மாற்றினார். பல்வேறு முனைகளில் பொதுத் தொண்டில் தன்னை ஈடுபடுத்திய அவர் செய்த சேவைகளில் உன்னதமானது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்.

போரினாலும் சுனாமியினாலும் நிர்க்கதியாக்கப்பட்ட சிறுவர் சிறுமியரை ஆதரித்து கல்வியூட்டி, வளையாட்டுகள் கலைபோன்ற திறமைகளையும் மேம்படுத்தி சமூகத்தில் நிறைவான மனிதர்களாக உருவாக்கும் அற்புதப் பணி மகாதேவா சுவாமிகள் இல்லத்தால் அனைவரும் போற்றும் வகையில் மேற்கொள்ளப்படுகிறது. தரு. இராசநாயகம் கடும் நோயுற்ற நிலையிலும் கூட அதன் மேம்பாட்டையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் சிந்தனை முழுவதும் நிறைத்திருந்தார்கள்.

அந்த இல்லத்தின் அவுஸ்திரேலியக் கிளையைப் பொறுப்பேற்று நடத்தும் வாய்ப்பை எனக்கு வழங்கியதன் மூலம் அப்புனித பணியில் என்னையும் ஒரு பங்காளியாக்கியமை நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

அவர் எங்களை விட்டுப்பிரிந்து விட்டார். ஆனால் அவருடைய இலட்சியங்கள் இன்னமும் உயிர்ப்புடன் ஒளி வீசுகின்றன.

அவரின் பணிகளை மேலும் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதே அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

**- இப்படிக்கு**
**பரா. நவநீதராசா**
**(மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,**
**அவுஸ்திரேலியாக் கிளை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணமெனும் குன்றேறி நின்று வானுறைந்த தெய்வத் திருமகன்

நெடி துயர்ந்த தோற்றம், அஞ்சாடு நெஞ்சம், நேர்மைத் திறன், நேரிய நன்நடை, கனிந்த பார்வை சிறுமை கண்டு பொங்கும் குணம், ஏழ்மை கண்டு இரங்கும் சுபாவம் இவையாவும் என் ஆருயிர் நண்பன் திரு. தி. இராசநாயகம் அவர்களுக்கே உரியவையாகும்.

உயர் பதவிகள் பல புரிந்தும் பெருமை கொள்ளாத இப் பெருந்தகையை என் நண்பர் என்று சொல்வது பொருத்தமானதன்று. இவர் எங்கள் குடும்பத்தில் ஒருவராகி எமக்கு உறுதுணையாகி நின்றவர். 1970ம் ஆண்டில் இருந்து கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களில் இவருடன் பணிபுரிந்தபோது, ஒருமித்து உண்டு, உறங்கி, அதி உன்னதமான உயரதிகாரிகள், கல்விமான்களுடன் தொடர்பு கொண்டு நாமிருவரும் ஒரு தாய் பிள்ளைகள் போலப் பழகிய நாட்கள் என்றும் பசுமை நிறைந்தவை.

இவர் கிளிநொச்சியில் அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் 2002ம் ஆண்டு தொடங்க்கம் 2006 இல் இருந்து இவருடன் இருந்து நான் பணியாற்றினேன். அப்போது அவரின் மண்பற்று, சமயப்பற்று, சமூகப் பற்று, தமிழ்ப் பற்று ஆகியவற்றைக் கண்டு வியந்திருக்கின்றேன். போர்க்கால சூழ்நிலையில் ஏற்பட்ட நெருக்கடிகளையும், மக்களுக்கு ஏற்பட்ட உணவு, மருந்து பற்றாக் குறைகளையும் பொறுமையாக சமயோசிதமாக வெற்றிக்கொண்ட செம்மனச் செல்வன் இன்று இல்லை என்பதை என்னால் நம்ப முடியவில்லை.

கண்டவுடன் நண்பா என்று கட்டியணைக்கும் அவரின் கரங்களையும், கனிந்த பார்வையையும், புத்திசாலித்தனமான பேச்சையும், கடமை, கட்டுப்பாடு, நடுநிலை ஆகிய குணங்களையும் இன்று நாம் தொலைத்து நிற்கின்றோம். கடந்த ஆவணி மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிவாரம் நானும் எனது மனைவியும் அவரின் வீட்டுக்குச் சென்றபோது நெடு நேரமாக ஆழமான, அன்பான அறிவுரைகளுடன் நகைச்சுவையாகவும் பேசினார். இறுதியில் நாம் விடைபெறும்போது அவர் மனதில் என்ன தோன்றியதோ பிரிய மனமின்றி இரண்டு பேரும் என்னுடன் நின்று படம் எடுங்கள் என்றார். என்னைக் கட்டியணைத்த கைகளுடன் அங்கு நின்ற ஒரு பிள்ளையின் மூலம் படம் பிடிப்பித்தார். அது தான் இறுதிச் சந்திப்பு என்று நான் கனவிலும் கருதவில்லை. 2ம் திகதி 11 ஆம் மாதம் இரவு அவரின் மறைவுச் செய்தி இடிபோல் வந்து சேர்ந்தது. அன்று தொட்டு இன்றுவரை நானும் எனது குடும்பமும் அத்துன்பத்தில் இருந்து மீள முடியாமற் தவிக்கின்றோம்.

சகல செல்வங்களுடனும் பேரோடும் புகழோடும் அளப்பரிய தொண்டுகள் ஆற்றி, காலத்திற்கு முந்தி மறைந்த அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அவர் தம் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**க. மு. கைலாயநாதன்**
**முன்னாள் உதவிக்காணி ஆணையாளர்**
**வடகிழக்கு மாகாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன் பிறவாத தம்பி

## அமரர் கௌரவ தி. இராசநாயகம் அவர்களுடன்

நான்கு தசாப்தகால நினைவலைகள்

அமரர் திரு. இராசநாயகம் அவர்கள் ஓய்வு நிலை கிளிநொச்சி அரசாங்க அதிபராகவும், வடமாகாணப் பிரதிப் பிரதம செயலாளராகவும், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கௌரவ தலைவராகவும், இருந்து எடது மக்களின் துன்பங்களிலும் சளைக்காமல். தனி மனிதனாக நின்று சேவையாற்றிய பெருமை அமரர் அவர்களையே சாரும்.

தன்னைத் தன்னைத்தனியே. தவிக்கவிட்டுத்தன், தலைவன், திடீரென அமரராகி விட்டாரே என்று ஏங்கித்தவிக்கும், அன்புச் சகோதரி கமலாதேவி அம்மாவின் மனம் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றேன்.

அமரர் அவர்களுடைய அத்தனை உயர்வுக்கும் உழைப்பிற்கும், கௌரவத்திற்கும் யாழ் விருது நாயகன் எனப் பெயர் பெறவும் அல்லும் பகலும் உற்ற துணையாகவிருந்தவர் அமரர் அவர்களின் துணைவியார் திருமதி. இ. கமலாதேவி அம்மாவேதான்.

அமரர். திரு. திரு. இராசநாயகம் அவர்களுடைய சமூகப்பணியில் ஈடுபட்டவர்களில் நானும் ஒருவன். அவ்வேளை எனது சேவையில் இடமாற்றம் பெற்றுப் பூநகரிக்கு 1980ம் ஆண்டு சென்றிருந்தேன். அவ்வேளை அமரர் அவர்களின் வீட்டில் தங்கி அவர்களுடன் உணவருந்தி விவசாயப் போதனாசிரியர் சேவையைத் திறம்படச் செய்து கொண்டிருந்தேன். எனது சேவைக்கு அமரர் அவர்கள் மிக ஆதரவு தந்து விரிவுபடுத்தினார்கள்.

அக்காலத்தில் திரு. திருமதி இராசநாயகம் கமலாதேவி அம்மா அவர்களுக்கு முதல் மகள்,மூத்தன் மகள், ஆசை தீர்த்த அன்புச் செல்வ மகள் சசிந்தாக்குட்டியும் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் இனிய அன்புச் செல்வங்களாக சசிக்குமார் குட்டியும் சசிதரன் குட்டியும் பிறந்து வளர்ந்து குறும்புகள் பல செய்து கொண்டிருந்தார்கள். பார்க்கும்போது மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியாகவிருக்கும்.

இடைவேளைகளில் செல்வச் சிறார்களுக்கு நான், பாட்டுப்பாடிக் காட்டிப் பாடவைப்பேன். இனிமையாகப் பாடுவார்கள். ஆடுவார்கள். அ, ஆ சொல்லிக் கொடுப்பேன். சொல்லுவார்கள். எழுதுவார்கள். அவர்களுடன் இணைந்து நானும் விளையாடி, மூவரையும் குதூகலமாக வைத்திருந்தேன். சிறார்களாக இருந்தாலும் அன்பு அப்பா, அம்மாம வரவைப் பார்ப்பது போல எனது வரவையும் பார்த்திருந்து பாட்டுப் பாடக் கேட்பார்கள். அவர்களுக்கு இசைவாக நானும் இணைந்து செயல்பட்டேன்.

அமரர் குடும்பத்துடன் நீண்டகாலம் இருந்து சேவை செய்ய எனக்குக் கிடைக்கவில்லை. ஓராண்டு மட்டும்தான் இந்த வாய்ப்புக் கிட்டியது. பின் துணுக்காய் APC க்கு மாற்றப்பட்டேன். சிறார்களான சசிந்தாக்குட்டியையும் சசிக்குட்டியையும் சசிதரன் குட்டியையும் பிரந்து செல்ல மனமில்லாது அன்று பிரிந்து போனதுதான் அடுத்தவாரம் என்வரவைப் பார்த்து, அம்மாவைக் கேட்டிருப்பார்கள். அம்மாவும் ஏதோ காரணம் கூறியிருப்பார். அவ்வளவுதான். அக்காலத்தில் தொலைபேசித் தொடர்புகள் இன்றுபோலில்லை.

அதிகமாக அவரைத்தான் சந்திப்பது அவரிடம் குடும்ப நலத்துடன். சிறார்கள் மூவரையும் விசாரிப்பேன். அம்மாவோடு மகிட்சியாகவிருந்து படிக்கின்றார்கள் என்பார். நாட்டு நிலைமை காரணமாக நீண்டகாலம் அமரருடன் தொடர்புகொள்ள முடியவில்லை. இடம் பெயர்ந்து இடம் பெயர்ந்து இறுதியில் கனடா போய்விட்டோம்.

எனக்கு அண்மையில் யாழ்ப்பாணம் வரும் வாய்ப்புக் கிட்டியது. வந்ததும் எனது தம்பி திரு. தி. இராசநாயகம் குடும்பத்தைப் பார்க்க ஆவல் கொண்டேன்.

விரைந்து தொடர்பு கொண்டு 14.05.2017 அன்று திரு. IS செல்வநாயகம் (பிரதீப் பிரதம செயலாளர் ஆளுநர் அலுவலகம் வடமாகாணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுதவியுடன் சென்றிருந்தேன். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா? கட்டித்தழுவி அன்பாக்க கலந்துரையாடிக் கொண்டிருந்தோம். கமலாதேவி அம்மா குளிர்பானம், வளமைபோல் தந்துவிட்டு உள்ளே சென்று விட்டார். காரணம் கண்போன்ற தன் கணவன் அதிகநேகரம் பேசினால் உடல்நலம் குன்றி விடும் என்பதுதான். " இது வைத்தியரின் அறிவுரை" இருந்தும் 24.09.2017 அன்று என்னைச் சிறுவர் இல்லத்திற்குக் கூட்டிக் கொண்டு போய்க் காண்பித்து அன்றைய தினம் பிள்ளைகளின் பிறந்தநாள் விழாவிலும் பேசவைத்து எனக்கு மதிப்பளித்ததை நான் இன்று என் தம்பியை நினைக்கும்போது, இதயம் வெடிக்கிறது. என்றும் மறவேன்.

அமரர் குடும்பத்துடன் நான் இருந்து ஓராண்டில், திருமதி. கமலாதேவி அம்மா அவர்களின் இல்லற வாழ்வை உற்று நோக்கியிருந்தேன். நீண்ட நாட்களின் பின்னர் சந்தித்த போதும் உற்று நோக்கினேன். கமலாதேவி அம்மா பத்தாவிற்கேற்ற பதிவிரதைதான் என்பதை அறிந்து கொண்டேன். அமரருக்கு ஏற்ற வாழ்க்கைத்ட துணை அவர்.

வாழ்விலென்ன, தாழ்விலென்ன, இன்பதுன்பத்திலென்ன தாம் பெற்றெடுத்த செல்வ மக்களிலென்ன மருமக்களிலென்ன, பேரப்பிள்ளை களிலென்ன, ஏன் என்போன்ற அன்புள்ளங்களுக்கென்ன அனைவருக்குமே அன்பைச்சொரியும் பெருந்தகைதான் கமலாதேவி அம்மா.

கமலா அம்மா, தன் அன்புக் கணவனைக் கைப்பிடித்த அன்று எப்படி அன்பு காட்டினாரோ, அதற்கும் மேலான அன்பை அமரரின் இறுதி மூச்சுவரை வைத்திருந்தார். ஐந்து வயதில் குறும்பு செய்த மகன் சசிகரனையும், சடைக்குட்டி சசிலேகாவையும் எப்படி தன்னுள் வைத்திருந்தாரோ, அதற்கும் மேலாக அமரரை இறுதி மூச்சுவரை கண் இமையாது அல்லும் பகலும் காத்து வந்திருக்கிறார். இவை யாவும் என்னால் அவதானித்தவையே.

அன்றில் பறவை போல், இணைபிரியாத வாழ்க்கைத்துணை அமரருக்குக் கிடைத்தமை பூர்வ புண்ணிய பலனேயாகும். கமலாதேவி அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற வாழ்க்கைத்துணை எல்லோருக்கும் எளிதில் கிட்டாது. புண்ணிய வான்களுக்கே அது கிடைக்கும்.

அமரர் செய்த சேவைக்குக் கிடைத்த காணிக்கைதான் கமலாதேவி அம்மா.

அமரர் பெற்றெடுத்த நான்கு செல்வ மக்கள் அமரர் குடும்ப தத்தெடுத்தது 400க்கு மேல் இச்சிறார்களை இனிப்பொறுப்பெடுப்பது யாரோ!

"வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் முன்மாதிரியாக" அமையட்டும்.

அமரரின் இழப்பினால் கவலையுறும் துணிவியார், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவுகளுடனும் நாமும் இணைந்து அமரர் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

**- S.V.S. பாலசிங்கம்**
**ஓய்வு நிலை விவசாயப் போதனாசிரியர்**
**பாடவிதான உத்தியோகத்தர் (S.M.O)**
**முல்லைத்தீவு**

**சமூகத்தொண்டன்**
**நெடுந்தீவு**
**(கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பெருமதிப்பார்ந்த இமயம் ஐயா தலைவர், அறப்பணிச் செல்வர், அரச அதிபர், நிர்வாகி, அனைவருக்கும் அன்புத் தந்தை கௌரவ தி. இராசநாயகம் ஐயா கண்முன் நிற்கின்றார். அத்தகு தகைமையாளன், நுண்ணறிவாளன், தயாள குணமிக்கோன். அவரைச் சொற்ப காலமே நாம் கண்டதும் பழகியதும். என்னவோ எமது மனதிலே தனித்தோர் இடம் பிடித்துக்கொண்டு எம்மைத் துயரிலாழ்த்தி மீளாத் துயில் கொண்டார். அவருக்கும் சிற்சிலரது நடவடிக்கைகளால் துன்பம் நேர்ந்தது. அவப் பெயர் கேட்கவும் வைத்தனர். ஆயினும் அவரது பெருமையும், செயலாண்மையும், புகழும், பெருமிதமும், மதிப்பும், கௌரவமும் பத்திரிகைச் செய்தியிலே கண்டமை போன்று "குழந்தைகள் கதறி அழப் பிரிந்து சென்றார்" என்ற பெருமை எத்தனைபேருக்குத் தான் கிடைக்கும்? என்பதே வினா.

நன்றிக்குரியவர் மட்டுமல்ல. பின்பற்றத் தகுந்த செயல்வீரன், பண்பாளன், மானுடத் தெய்வம், மனிதருள் மாணிக்கமாகிய அவரது பணிகளால் அவர் தமிழர் நெஞ்சங்களிலே நிலைத்து நீடுழி வாழ்வார் என்பது திண்ணம்.

**கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்**
**ஓய்வு நிலை பேராசிரியர்**
**சப்ரகமுவ பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவர், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்.**

## (அமரர் திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் ஐயா அவர்கள்)

ஆம் இந்த மண்ணிலே வாழ்வாங்கு வாழ்ந்து காட்டி. ஒரு மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்பதை செயலிலே வெளிப்படுத்தியவர் மதிப்புக்குரிய இராசநாயகம் ஐயா அவர்கள் ஆவார்.

பொன் கொழிக்கும் பூமி என வர்ணிக்கப்படும் பூநகரி நகரில் விவசாய பூமியான மட்டுவில்நாடு கிராமத்திலே பரம்பரை விவசாயியான திருநாவுக்கரசுவின் வாரிசாக அவதரித்து பூநகரி மண்ணிலே வளர்ந்து கல்வியிலே வல்லுனராய் முதன்முதலாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாக கல்வியிலே சிறந்து விளங்கி தொழில் நிமிர்த்தம் அரசபணியில் இணைந்து அபிவிருத்தி உத்தியோகஸ்தராகி பின்னாளில் திட்டமிடல் பணிப்பாளராகி பூநகரி பிரதேச செயலகம், மன்னார் அரச செயலகம் என்பவற்றில் கடமையாற்றி பூநகரி பிரதேசத்தின் வளர்ச்சிக்கு திட்டங்கள் தீட்டி குடியேற்ற திட்டங்களான முட்கொம்பன் கூட்டுப்பண்ணை, கள்ளாவில், பண்டிவெட்டிதிட்டம், முழங்காவில் மகளிர் குடியேற்றத்திட்டம் என்பவற்றை உருவாக்கியதன் பேரில் இன்று அபிவிருத்தியடைந்த கிராமங்களாக முழங்காவில், முட்கொம்பன் கிராமங்கள் திகழ்கிறது. மேலாக சின்னப்பல்லவராயன்கட்டு தியாகக்குளம் அபிவிருத்தி செய்ததன் மூலம் இன்று பல ஏக்கர் காணி சிறுபோக செய்கைக்கு வித்திட்டு வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளார் இது எத்தனை காலம் சென்றாலும் அழியாத அழிக்க முடியாத அன்னாரின் பெயரை துலங்க செய்யும் செயற்பாடுகளாகும்.

மேலாக பூநகர் மண்ணின் மைந்தன் என அழைக்கப்பட்ட அன்னார், தனது பணியில் ஒருபகுதி நேரத்தை கூட்டுறவுதுறைக்கு ஒதுக்கி பூநகரி மக்களை கூட்டுறவின்பால் ஒன்றிணைத்து மக்கள் சக்தியை உருவாக்கி பூநகரி ப.நோ.கூ. சங்கத்தின் தலைமைப்பதவியை ஜனநாயக ரீதியில் பொறுப்பேற்றார். 1972ம் ஆண்டு காலப்பகுதியில் தென்மராட்சி ப.நோ.கூ. சங்கத்துடன் இணைந்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரி ப.நோ.கூ. சங்கத்தை தனித்துவமான பூநகரி ப.நோ.கூ. சங்கமாக பதிவு செய்வித்து தென்மராட்சி ப.நோ.கூட்டுறவுச்சங்கத்திலிருந்து பிரித்தெக்க அயராது உழைத்து வெற்றி கண்டார். அப்போது பூநகரி ப.நோ.கூ. சங்கத்தின் மூலதனமாக ஒரு பழைய பாரவூர்தி 06 வியாபார நிலையங்கள் மற்றும் 12 பணியார்களுடன் பொறுப்பேற்ற வகையில் திட்டமிடல் மூலம் படிப்படியாக வளர்த்தெடுத்தும் சங்கத்தின் தலைமைப்பொறுப்பில் 19 வருடங்கள் மாறி மாறி ஜனநாயக ரீதியாக செயற்பட்டு 1990ம் ஆண்டு காலப்பகுதி வரை 120க்கு மேற்பட்ட பணியார்களையும் 24 கிளை நிலையங்களும் மேலாக 02 எரிபொருள் நிலையங்கள், அரிசி ஆலை, கிராமிய வங்கி என்பவற்றை நிறுவி வடமாகாணத்தில் பிரபல்யமான சங்கமாக வளர்த்தெடுத்தார். அவர் தனது செயற்திட்டத்தில் எதிர்கால திட்டங்களை கருத்திற்கொண்டு தன்னலம் கருதாது தகுதியானவர்களை வளர்த்தெடுத்து முகாமைப்பதவிகளில் அமர்த்தும் மனப்பாங்கு கொண்டவர். அந்த வகையில் அவரால் வளர்க்கப்பட்ட பணியாளர்களில் நானும் ஒருவன் என்ற வகையில் கூட்டுறவுத்துறையில் 1976ல் இருந்து என்னை உள்வாங்கி வளர்த்தெடுத்து தனது தலைமைக்காலத்தில் பொதுமுகாமையாளர் பதவி நிலைக்கு கொண்டு வந்ததை என் வாழ்வில் என்றென்றும் மறக்க முடியாது.

1976, 1977 காலப்பகுதியில் பூநகரி மண்ணின் அபிவிருத்தி கருதி அரசியலுக்கு அப்பால் சென்று அன்றைய அரசாங்கத்தின் ஆதரவாளராகி பூநகரிப்பகுதியில் அதிகப்படியான அரச உத்தியோகங்களை பெற்றுக்கொடுத்த பெருமை அவருக்கே உரியது.

மேலாக நான் கிளிநொச்சி மாவட்டத்தின் பிரசித்த நொத்தாரிசாக நியமனம் பெறும் வகையில் சட்டக்கல்வியைத் தொடர ஆக்கம் ஊக்கம் அழித்து வந்தார். 2000ம் வருடம் நியமனம் பெற்ற போது இப்பதவியில் நியமனம் பெறுபவர் வேறு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் பதவி வகிக்க முடியாது என்ற கட்டுப்பாடு நியமனத்திற்கு தடையாக இருந்தபோது, மாவட்டத்தின் நலன்கருதி பூநகரி மண்ணினைச் சேர்ந்த ஒருவர் பிரசித்த நொத்தாரிசாக இருக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை பூநகரி ப.நோ.கூ. சங்கத்தின் வளர்ச்சிக்கும் எனது பங்களிப்பு தேவை என்பதை கருத்திற்கொண்டு உச்ச மட்ட அரச செல்வாக்கை பயன்படுத்தி அரச ஒய்வூதியமற்ற ஒருவர் நொத்தாரிசாக நியமனம் பெற முடியும் என்ற அரச தீர்மானத்தை பாராளுமன்றத்தில் பெற்று அரச வர்த்தமானி மூலம் வெளிவரச் செய்தார். இதன் மூலம் சங்க வளர்ச்சியிலும் நொத்தாரிசு கடமையிலும் ஒரேநேரத்தில் செயற்பட வைத்து மனம் சந்தோசப்பட்டார். மேலும் காலத்திற்கு காலம் நல்ல ஆலோசனை வழங்கி வந்தார். இது எனது வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவம் ஆகும்.

அவரது குறிக்கோள் பிறந்த மாவட்டமான கிளிநொச்சி மாவட்டத்தை வளம்பெற செய்யவேண்டும் என்பதாகும். அன்னாரின் அரசபணியில் தேடி வந்த பதவியான மாவட்ட அரச அதிபர் பதவியினை போர்க்கால சூழலில் பொறுப்பேற்று விடுக்கப்பட்ட பிரதேசம், விடுவிக்கப்படாத பிரதேசமென வவுனியாவும், கிளிநொச்சியும் வெவ்வேறு நிர்வாகங்களின் கீழ் இருந்த வகையிலும், போர் மேகங்கள் வான் தாக்குதல்கள், சுற்றி வளைப்புகளிற்கு மத்தியில் துணிச்சலுடன் செயற்பட்டு இருபிரதேசங்களிற்கும் இடையில் இணைப்பாளராக செயற்பட்டு பொருளாதார தடைக்கு மேலாக தொடரணி மூலம் பொருட்களை கொண்டு வந்து மக்களிற்கு பொருள் விநியோகம் செய்ததை இந்த நாடே அறியும். சூரியக்கதிர் நடவடிக்கையில் யாழ்ப்பாண மக்கள் இடம்பெயர்ந்து வந்தபோது அம்மக்களிற்கு புகலிடம் வழங்கி இடம்பெயர்ந்து வந்த சங்கங்களிற்கு இம்மாவட்டத்தில் செயற்பட வைத்து அம்மக்களின் பசியை கூட்டுறவின்மூலம் தீர்த்து வைத்தார். பின்னாளில் இளைப்பாறிய பின்பும் மீள்குடியேற்றத்தின் பின்பு வடமாகாண சபை பிரதி பிரதமசெயலாளர் போன்ற அதிகாரமுள்ள பதவியினை பெற்று மீள்குடியேறிய மக்களிற்கும், நிறுவனங்களிற்கும் தன்னாலான உதவியினைச் செய்தார். அக்காலப்பகுதியில் பெற்றாரை இழந்த ஆதரவற்ற சிறார்கள் போதிய பராமரிப்பின்றி அல்லலுறுவதைக் கருத்திற்கொண்டு பாரிய நிறுவனமான மகாதேவா சுவாமிகள் சைவச்சிறுவர் இல்லத்தை பொறுப்பெடுத்து 350 ற்கும் மேற்பட்ட மழலைகளை தத்தெடுத்து பெற்றெடுத்த பிள்ளையும் தத்தெடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையும் ஒன்றெனக்கருதி வளர்த்தெடுத்து உயர்கல்வி வரை கல்வி புகட்டி வந்தார். அவரது சுயமுயற்சியின் பெயரால், புலம்பெயர் நாடுகளிடமிருந்து பண உதவியும் பெற்றதோடு நில்லாமல் நலன் விரும்பிகள் கனவான்களை அணுகி பரமலிங்கம் ஐயா போன்ற கனவான்களிடம் பல ஏக்கர் விஸ்தீரணமான நெற்காணியை தியாகம் கிராமத்தில் அன்பளிப்பாக பெற்று சிறார்களின் உணவுத் தேவைக்கு வழி சமைத்தார். இதேபோன்று மேலும் பல ஏக்கர் விஸ்தீரணமான காணிகளை இல்லத்திற்காக பெற்று இல்லத்தின் மூலதனச் சொத்தாக்கியுள்ளார். இதன்மூலம் குறித்த சிறார்களை நிர்வாகங்கள் எதிர்காலத்தில் எவரிடமும் கையேந்தாது பராமரிக்க வழியேற்படுத்தியுள்ளார். இறுதி நிகழ்வின்போது மழலைகள் விட்ட கண்ணீர் எல்லோர் நெஞ்சங்களிலும் பதிந்துள்ளது. இந்த வகையில் அவர் ஒரு மாமனிதராக வர்ணிக்கப்படுகின்றார். தனது பணியில் ஆத்மீகத்துறையையும் வளர்த்தெடுக்கும் பணியில் இடப்பெயர்வு காலத்தில் வன்னேரிக்குளம் ஐயனார் ஆலயத்தை புனரமைப்பு செய்வித்து குடமுழுக்கு வரை நிறைவேற்றினார். மேலாக உருத்திரபுரம் சிவன் ஆலயத்தின் மீது கொண்ட பற்றுதல் காரணமாக அதன் தலைமைப் பொறுப்பை ஏற்று 1992 ல் இருந்து 2014ம் ஆண்டு வரை செயற்பட்டதும் அல்லாது, நீண்ட காலமாக பாலஸ்தான நிலையிலிருந்த ஆலத்தை போர்க்கால சூழலில் மூலப்பொருட்களை வருவித்து புனருத்தானம் செய்வித்து ஆலயத்தின் நைமித்திய கருமங்களை செய்து, செய்வித்து வந்தார்.

அன்னாரது சேவைகள் அளப்பரியது. இதன் பிரதிபயனாக விருதுகள் பல பெற்றார். அதில் விசேடமானது ஒன்று யாழ்விருது. இரண்டாவது எனது சிபாரிசில் பெறப்பட்ட அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் சாமஸ்ரீதேசமானிய விருதாகும். இவ்விருது மன்னார் மாவட்டத்தில் வைத்து கௌரவிக்கப்பட்ட விருதாகும்.

இறுதிப்போர்சூழலின் போது பூநகரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் சின்னாபின்னாப்பட்டிருந்தவேளை அரச, அரசசார்பற்ற நிறுவனம் மூலம் தலைமை அலுவலக கட்டிடம் ஒருசில கிளைக்கட்டிடங்கள் என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுத்தந்து சங்கத்தை பத்துயிர் ஊட்டினார். யாழ் மாவட்டத்திலே ப.நோ.கூ. சங்கம் ஒன்றிற்கு எரிபொருள் நிலையம் உள்ளதென்றால் அதற்கு காரணகர்த்தா அவரே ஆகும். இதனை பூநகரி மக்களும், கூட்டுறவாளர்களும் ஒருபோதும் மறக்க மாட்டார்கள். வாடியடி எரிபொருள் நிலையம் மீள அமைக்க முற்பட்ட வேளை நோய்வாய்ப்பட்டிருந்த நிலையிலும் சங்கத்தின் அழைப்பை ஏற்று சமூகம் தந்து அடிக்கல் நாட்டி ஒருவருட காலத்திற்குள் இரண்டு கோடி பெறுமதிவாய்ந்த நிலையில் அமைக்க சகல திணைக்கள மட்டத்திலான உதவிகளை காலத்திற்கு காலம் பெற்றுத்தந்தார். இன்று முதற்தர எரிபொருள் நிலையமாக பூநகரியிலே செயற்பட்டு வருகின்றது.

அவரது சேவைகள் மட்டுப்படுத்த முடியாத நீண்ட பணியென்ற வகையில் ஒருசிலவற்றை மட்டும் நினைவு கூர்ந்ததுடன் இவ்வாறான ஒருசேவையாளனை ஒருமாமனிதனை கிளிநொச்சி மாவட்டம் இதற்கு முன் காணவும் இல்லை. இனிமேல்க்காண்பதும் அரிது. அன்னார் மறைந்தாலும் ஆற்றிய சேவைகள் பணிகள் மகேசன் சேவையாக விடைபகரும். இதன் மூலம் அவரது ஆத்மா உருத்திரபுரீஸ்வரர் பாதங்களில் வீற்றிருந்து சாந்தியடைய அன்னாரின் குடும்பத்துடன் இணைந்து பிரார்த்திப்போமாக.

**சாமஸ்ரீ தேசமானிய**
**தா மோதரம்பிள்ளை அரியரத்தினம்**
**சமாதான நீதவான் 17-02 வமா - தீமு - 122 (அகில இலங்கை)**
**பிரசித்த நொத்தாரிசு**
**திருநகர் வீதி, கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர். திருநாவுக்கரசு இராசநாயகம்!

பூநகரி மண் பெற்றெடுத்த மைந்தனே
புண்ணியங்கள் பல செய்ய வந்த புண்ணியவனே
புன்னகை சிந்திடும் புதல்வனே
புண்படாமல் கதைப்பதில் வல்லவனே
பூநகரிக்கு பெருமை சேர்த்த பாமரனே
காலத்தால் அழியாத உங்கள் புகழ்
என்றும் எங்கள் நெஞ்சில் நிலைத்திருக்கும்
உங்கள் நிழல்.

உயர்திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள் சிவபதமடைந்து செய்தியைக் கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கும் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோன்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**- பிரிவால் துயருறும்**
**சரவணப்பொய்கை குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும், வடமாகாண பொது நிர்வாக அமைச்சின் முன்னாள் செயலாளரும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் தலைவருமாகிய

## உயர்திரு. திருநாவுக்கரசு இராசநாயகம்

போர்வையால் தனை மறைத்துப் போகும் இவ்வுலகிலே
பார்வையால் பல உதவிகள் பாலகருக்குப் புரிந்து
கூர்மையான பார்வையுடன் கொண்ட கொள்கையில் பற்றோடு
நேர்வழி பயணித்து நீண்டதொரு வரலாற்றைப் பெற்றவர்!

பள்ளமது பாலகர் வாழ்வில் வந்து விடக்கூடாது என்பதற்காகய்
உள்ளமெல்லாம் உன்னத எண்ணமதைக்கொண்டு
கள்ளமில்லாச் சிரிப்பை காலமெல்லாம் கண்டிடவே - இறைவன்
அள்ளித்தந்த வாழ்வினை அவர்களுக்காய் அர்ப்பணித்தவர்!

குறையேதும் தெரியாது குழந்தைகளை அரவணைத்து
கறைபடியாக் குழந்தைகளாய் எம் தமிழ்க் குழந்தைகள் மிளிர - பல்
துறை நோக்கி அவர்களது பயணம் அமைந்திட
நிறைவான பணி செய்து செறிவான பாதையை அமைத்தவர்!

வற்றாத அன்பினை வாரி வழங்கி - உலகில் வேறெவரும்
பெற்றிடாப் பேறுதனை இல்லத்துக் குழந்தைகளுக்கு அளித்து வாழ்வில்
தோற்றிடாக் குழந்தைகளாய் அவர்களைத் தேற்றி
ஆற்றுப்படுத்தி அவர்களுக்கு மாற்று வழியைக் காட்டியவர்.

மனமெல்லாம் மழலையர் மகிழ்வையே தனது இலட்சியமாய்க் கொண்டு தனக்கென்று வாழாப் பெருமகனின் ஆத்மா சாந்தியடைய வணங்குகின்றோம்.

உங்கள் பிரிவால் மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும்

**- சுவிஸ்வாழ் தமிழ் உறவுகளுடன்**
**செல்லையா குலசேகரராசசிங்கம்**
**சுவிஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனடி சேர்ந்த இமயம் அமரர் திரு. தி. இராசநாயகம்

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத் தலைவர் அமரர் திரு. தி. இராசநாயகம் அவர்களின் இவ்வுலக மறைவினால் ஆழாத்துயரத்துடன் எங்கள் உள்ளத்து உணர்வுகளை இந்த மடலில் சமர்ப்பிக்கின்றோம்.

ஈழத்தில் உயர் பதவிகளை வகிக்கும் பொழுது மக்களின் முன்னேற்றத்தையே முதல்நோக்காகக் கொண்டு சேவையாற்றி. இளைப்பாறிய பின்பும் மக்கள் சேவையே மகேசன் சேவையாகக் கருதி அளப்பெரும் சமூக சேவையாளராக வாழ்ந்த பெருமகனை இழந்து தவிக்கின்றோம். தாய் தந்தையரை இழந்து வறுமைப்பட்டு வாழும் நானூற்றிற்கு மேற்பட்ட சிறுவர்களின் வாழ்வில் ஒளியீட்டிய உத்தமனார் இவ்வுலகை விட்டு நீங்கினாலும். அவர் ஆத்மா இறை ஒளியாய் அச்சிறுவர்களின் வாழ்வுச் சிறப்புக்கு என்றென்றும் வழிகாட்டிக் கொண்டேயிருக்கும் என நாங்கள் திடமாக நம்புகின்றோம். அன்னாரின் மகத்தான சேவைகள் உள்ளத்தின் ஊற்றலைகளாய் எங்கள் நினைவுகளை ஆக்கிரமிக்க அமரரின் ஆத்மா சாந்திக்காய் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அமரர். திரு. சி. இராசநாயகம் அவர்களின் குடும்பத்தார். உற்றார். உறவினர்கள் அவர் அரவணைப்பில் வாழ்ந்த சிறுவர்கள் மற்றும் சக பணியாளர்கள் எல்லோருக்கும் எமது துயரப் பகிர்வைச் சமர்ப்பிக்கின்றோம்.

- கனடாவிலிருந்து அன்புடன்
டெல்ற்றா அக்கடமி நிர்வாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது ஆலய வளர்ச்சிக்கு உழைத்த சைவத் தொண்டர்

# அமரர். திருநாவுக்கரச இராசநாயகம்

நேற்றுவரை எங்களுடன் இன்முகம் காட்டி நேசமுடன் பழகியதை எம்மால் மறக்க முடியுமா....?

இன்று எம்மையெல்லாம் பரிதவிக்க விட்டு பரமனின் பாதங்களை பற்றிய உம்போல் அன்புள்ளங் கொண்ட இனியவரை எங்கு நாம் தேடுவோம்.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**- ஆலய பரிபாலன சபை,**
**கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி

விழிகள் கரைகிறதே...
வேதனை நெஞ்சை முட்டுகிறதே
ஓடி ஓடி திரிந்து உலாவிய இதயம்
நிரந்தரமாய் உறங்கியதேன்?
உங்கள் பிரிவின் துயரச் செய்தி கேட்டு
காற்று வீச மறுக்கிறதே வாய்பேச மறுக்கிறதே
உங்கள் பாசத்தால் கவர்ந்த உள்ளங்கள்
இன்று கண்ணீரில் மிதப்பதை தவிர்க்க
ஒரு கணம் மீண்டும் கண்திறக்க மாட்டீரோ.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், மகாதேவ சுவாமிகள் சைவச் சிறுவர் இல்லப் பணிப்பாளர்கள், பணியாளர்கள், சிறுவர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**- துயரில் பங்குகொள்ளும்**
**ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய பரிபாலன சபையினர்**
**ஜெயந்திநகர்,கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னமிட்ட கை

முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் கிளிநொச்சி மண்ணின் மைந்தரும் எல்லோரும் உண்பதற்காகவும் வாழ்வதற்காகவும் எதையாவது வழங்க வேண்டுமென்ற பெருமனதோடு அன்னமிட்டுக் கொண்டிருந்த ஒரு கொடையாளருமான எமது மதிப்பிற்குரிய இராசநாயகம் ஐயாவின் மறைவு கண்டு அதிர்ச்சியானோம். ஐயா எப்போதுமே யாருக்கும் வழங்க என்ன செய்ய முடியுமென்றே நினைத்துக் கொண்டும் அதனை செயலில் காட்டிக் கொண்டும் வாழ்ந்த பெருமனிதனாவார். 1996ல் மேலதிக அரசாங்க அதிபராகவும் திட்டப்பணிப்பாளராகவும் இருந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து சூரியகதிர் இடப்பெயர்வில் யாழ்ப்பாணம் முழுவதும் இடம்பெயர்ந்து வந்த போது அவர்களை முழுமையாக பொறுப்பெடுத்து உணவு வழங்கல் தொடக்கம் அனைத்தையும் நிறைவேற்றினார்.

அக்காலத்தில் வறிய பல மக்கள் உணவுக்கு வழியின்றி இருந்தபோது அரச அலுவலர்கள் சிற்றூழியர்களுக்கெல்லாம் நிவாரணப் பத்திரங்கள் வழங்கி உணவு வழங்கலில் ஈடுபட்டார். கியூடெக் நிறுவனத்தின் உதவியோடு இலைக்கஞ்சி திட்டத்தை ஆரம்பித்து கிராமயங்கள் தோறும் பாடசாலை பிள்ளைகளுக்கு உணவு வழங்கினார். அரச அலுவலகங்களில் காணப்பட்ட சிற்றூழியர், சாரதிகள் வெற்றிடங்களையெல்லாம் உள்ளூர் மக்களால் நிரப்பி பெரும் உதவி புரிந்தார். எழுதுநர்கள் பலலை தொண்டர்களாக நியமித்து நிரந்தர நியமனமாக்க வாய்ப்பு வழங்கினார். அன்னமிட்டுக்கொண்டே தொடர்ந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதற்காக மகாதேவா சிறுவர் இல்லத்தை புதுமுறிப்பில் ஆரம்பித்து பல அநாதைகளுக்கு உணவளித்தார். பின்னர் யுத்த முடிவில் பாதிக்கப்பட்ட தாய் தந்தைகளை இழந்த பிள்ளைகளுக்கெல்லாம் தந்தையாக இருந்து தொடர்ந்து உணவளித்தார். வயல்கள் விதைத்து உணவில் நிறைந்து வாழ வழிவகுத்தார். இவ்வகையில் அன்னமிட்ட கையாகவே ஐயா வாழ்ந்தார் என்பதனை எமது மாவட்டத்தின் அனைத்து சிற்றூழியர்கள், சாரதிகள் சார்பிலும் தெரிவித்து அவரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**- சிற்றூழியர்கள், சாரதிகள்**
**மாவட்ட செயலகம், கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி

கிளிநொச்சியின் பொக்கிஷம்!
கிடைத்தற்கரிய வழிகாட்டி!
பூநகரி தந்த பொன்னுடன்!
ஏழைகள் சிரிக்க எப்போதும்
ஓடி உழைத்த உம் பாதம்!
கூட்டுறவை நாட்டுயர்விற்கு
கூட்டிக்கொள்ள முடியும் என்பதை
நாட்டி வைத்த பெருமகன்!
இன்று ஓய்வு எடுக்கும் நாள்
மௌனமாய் ஓர் துளி கண்ணீருடன்
உங்களுக்கு விடையளிக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**– கிளி மாவட்ட கூட்டுறவு சபையும்,**
**அனைத்து கூட்டுறவு நிறுவனங்களும்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாதேவா ஆச்சிரம இல்லக்குழந்தைகளின் உள்ளத்தில் இருந்து

### இமய விழிகளுடன்........................................

அன்பைத் தந்தவரும்
இதய ஓவியமாக
எம்மை மட்டும் அல்லாது
ஏழைகளுக்கும் முதல்வனாய்
விளங்கும் எம் இல்லத் தந்தையே

அவருக்கு சுகயீனம்
வந்த நாள்
நான் அறியவில்லை
அவர் உலகத்திற்கே
அறிமுகமானவர்

மின்னல் மின்னும் போது
பெற்றோரைக் கட்டி
அணைக்க முடியாமல்
தவித்த போது
எமது இல்லத் தந்தை
எம்மை அணைத்தார்

ஓலைக் குடிசையில்
வறுமையில் வாழ்வு
வந்தாலும் கையில்
தவழும் குழந்தையின்
முகம் கண்டு வறுமையில்
மறந்து பூத்திடுவார்
எம் தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாவின் கனவுகளுடன்
தெளிவாய் வந்து
நாம் ஐயாவின் கனவுகளை
ஒலிக்கச் செய்து
ஏழைகளுக்கு நாம் உதவி
செய்து இலட்சியத்தை
அடைவேன்

தண்ணீரில் இருக்கும்
மீனுக்கு நீர் சொந்தம்
தனிமையில் இருக்கும்
எமக்கு எமது இல்லத்
தந்தை சொந்தம்

தவறுகள் செய்தால்
மன்னிக்கும் ஒரே
ஒரு நீதிமன்றம்
எம் இல்லத் தந்தையின்
நல்ல கருத்துக்கள்
மாத்திரம் தான்

**- லோ. கர்சாலினி**
**இல்ல மாணவி**
**க. பொ. த (சா/த)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்தியின் இருப்பிடம் கடவுளென்றால் பாசத்தின் இருப்பிடம் எங்கள் ஐயா

"சொல்வது யார்க்கும் எளிது" தத்துவங்கள் பேசலாம், திட்டங்கள் வகுக்கலாம். ஆனால் சொல்லிய வண்ணம் செய்வது அரிதான செயல். அரிய பெரிய செயல்களைச் செய்த பெரியார்கள் இன்றும் உலகில் வாழ்ந்து கொண்டே இருக்கின்றார்கள். அவர்கள் மறைந்தொழிந்து போகவில்லை. வாழ்வாங்கு வாழத் துடித்த அரிய பெரியார்களுள் எங்கள் பாசமிகு ஐயாவும் ஒருவரே.

அழகான வசீகரத் தோற்றம், விபூதிப் பூச்சு, வெள்ளை வேட்டி, மடித்த சால்வைத் துண்டு, புன்னகை தவழ்ந்த கூரிய கண்களுடன் கூடிய முகத்தோற்றம். "நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்ற கம்பீரமான நடை, எளிமையும் தூய்மையும் நிறைந்த அரிய பெரிய திட்டத்தின் சம்பாஷனைகளும் திட்டங்களும் நமக்கு முன் சமர்ப்பிக்கப்படும். தனி மனிதன் இத்தனை பணிகளையும் செய்தாரே என்ற பிரேமை. எமது இல்லத்தைச் சுற்றி மைல் கணக்கில் நடப்பார். பசி பாரார், கண் துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார், கருமமே கண்ணாயான கர்ம வீரராக இருந்தார் எங்கள் ஐயா

எல்லோருடனும் அன்பாகப் பழகுவார். சிறு குழந்தைகளுடன் தமாசாகப் பேசுவார். இதனால் இவரை நாம் அன்பாக ஐயா என்று அழைப்போம். பிரச்சினைகளைக் கண்டு விலகிச் செல்ல மாட்டார். பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து நிதானமாக அவற்றை அணுகி நல்ல முறையில் தீர்வு காண்பார்.

ஆதரவற்ற குழந்தைகளுக்கு ஒரு இல்லம், அடக்கம் வேண்டி விழைந்த மகளிர்க்கு ஒரு இல்லம், வேலை வாய்ப்புத் தேடிய ஆண், பெண் இருபாலாருக்கும் வேலைத் திட்டம் இவை தான் எங்கள் ஐயாவின் உடமைகள்.

இளையனார் களவியல் உரையில் பாண்டிய மன்னன் தனது அவைக்களப் பொருள் நூற் புலவர்களைப் பார்த்து " நாடு நாடாகிய ஞான்று நீங்கள் திரும்பி வாருங்கள்" என்று கூறுகின்றான். இந்த நாடும் நாடாகிய பின் அமரர் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்ட நற்கருமங்கள் யாவும் மீண்டும் தொடரும் என்ற அசையாத நம்பிக்கையுடன் எமது ஐயாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**யோ. றஜனி**
**காமராஜர் பல்கலைக்கழக மாணவி**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமய இதழ்களில் ஆனந்தக் கண்ணீர்

இராசத்தின் நாயகனே
நாயகத்தின் இருப்பிடமாய்
இல்லச் சிறார்களின் பாசத்தின்
விளக்காய் அரவணைப்பின்
சிகரமான இல்லத் தந்தையே
இராசநாயகம் ஐயா!

அனாதையாய் இருந்த எம்மை
தத்தெடுத்து தன் பிள்ளை போல
எமை வளர்த்து பேதமில்லாமல்
தந்தையாய் பேணிக்காத்த
எம் தந்தையே ஏதிலிகளாய்
அலைந்த எம்மை அணைத்தெடுத்து
ஏங்கித் தவிக்க எங்கு சென்றீர் ஐயா!

என்னை பிஞ்சு வயதில் இருந்து
வளர்த்த எம் இல்லத் தந்தையே
நின் உற்ற குழந்தைகள்
உணவு உறக்கமின்றி அலறும் சத்தம்
உம் செவிகளில் கேட்கவில்லையா!

உம்மை பார்க்க வேணும்
என்று கண்களை விழித்துக்
கொண்டாலும் கண்களை பிரிந்து
சென்றீரே என் மனம் தாங்குமா
உம்முடன் கதைப்பதற்கு பல
ஆசைகள் எனக்கு இருக்கிறது
நான் இனி யாரிடம் ஆசையைக்
கூறுவது ஐயா!

தூக்கம் கண்ணில் வரவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொப்பனம் காண வழியில்லை
எங்கே சென்று பார்த்தாலும்
தந்தையின் ஞாபகம் போகவில்லை
விழிகளில் நீர் சொரிகிறது — என்
இதயத்தில் தீ எரிய — நாம்
எப்போது எம் தந்தையின்
அரவணைப்பையும் பாசத்தையும்
ஏங்கி தவிக்கின்றோம்

வான வெளி கூட்டம் வந்து
செங்கோலாக சுற்றுவது போல
எம் தந்தையின் நினைவுகளை
பொறித்து வைக்கின்றோம்
தந்தையின் அன்பையும் அரவணைப்பையும்
கல்லறையில் மறக்காமல்
பொறித்துக் கொள்கின்றேன் என்
அன்புத் தந்தையே!.....

நிஜம் என்றும் பிரிந்தாலும்
தந்தையின் நிழல் எம்மோடு
என்றும் பயனிக்கும்...............

**க.காவேரி**
**இல்ல மாணவி**
**க.பொ.த (சா/த)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்மை தத்தெடுத்த அன்புத் தெய்வம்!!!

அருமையான காலைப் பொழுதில்
அழகான சூரியோதய
அஸ்தமனத்துடன் அபிரமித்து
பார்த்தது காலைக்காட்சி
ஆவலுடன் எழவைத்தது
எம் இல்லத்தை

வழமையாக வதனமதில்
வடிவைக் கொண்டு
வட்டமடித்துச் சுற்றித் திரிந்தார்கள்
ஏதும் அறியா சிறார்கள்
சில நாழிகை சென்ற பின்
சிலிர்க்க வைத்தது
சிறிய செய்தி ஒன்று

சிறிப்புக்கள் அடங்கின
வட்டமடிக்க எண்ணிய கால்கள்
கயிற்றுக்குள் கட்டப்பட்டிருந்தன
அதிர வைத்த அந்த செய்தி
எம் தந்தையின் இறப்புச் செய்தி
இதயத்தை இரண்டாக்கியது

தந்தையே உன்னிடம் கண்டோம்
தாய்மையை தாராளமாக வழங்குவாய்
அன்பை அள்ளி அள்ளி வழங்குவாய்
பாசத்தை பாரபட்சம் இல்லாமல் வழங்குவாய்
உன் உதவியை உள்ளம் பூரிக்க
வழங்கும் உன் சேவையை

தாயில்லாமல் தவித்த போது
தாயாய் மாறி தாலாட்டினாய்
தந்தை இல்லாமல் இருந்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க துணையாய் தயவுடன் பார்த்தாய்
எல்லாம் உறவுகளையும் இழந்த எமக்கு
உம் இதயத்தை பரிசாகக் கொடுத்தாய்

எம் உள்ளத்தில் உதித்த சூரியனே
உன்னை யார் பொசிக்கினார்கள்
எம் கதறல்கள் உமக்கு
இன்னும் விளங்கவில்லையா?
இதயத்தின் புலம்பல்கள்
உம் செவிகளில் செய்பனிடவில்லையா?
அன்புக்காக ஏங்கும் எங்களை
அரவணைக்க வருவாயா?

ஆலமரம் போல் உம் சேவையால்
அசைக்க முடியாமல் தளைத்து — நின்றீரே
எங்கு சென்றீர் தந்தையே சொல்லுவீரா?
எங்கள் மனத் தவிப்பை அறிவாயா?
கண்மூடினால் உன் சிரித்த முகமும்
கண் திறந்தால் அழகான
உன் உருவமும் அசைந்தாடுகிறது

நெஞ்சத்தை நெருப்புக் கனலாக்கியது
உம் பிரிவு — உம்மால்
ஆதரித்து அரவணைத்து வளர்ந்த
நாம் என்ன பாவம் செய்தோம்
அந்தக் காலனுக்கு — என்றும் என்
கண்ணீர் பூக்களை என் தந்தையின்
பாதங்களுக்கு சமர்ப்பணமாக்குவேன்.......

சி.மஞ்சுளா
க.பொ.த உ/த (018)
கலைப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் வாழ்விற்கு வழிகாட்டிய வைரமே

கிளிநொச்சி பூநகரி மண்ணில்
அவதரித்த அமுதசுரபியே ஐயா
நீங்கள் அனைவரையும் பரிதவிக்க விட்டு
பாதியிலே போனதெங்கோ சொல்லுங்கள் ஐயா!

குருதியை வியர்வையாக்கி கடமையை போர்வையாக்கி
விழுதாய் இருந்து கழுகாய் காவல் காத்த – தந்தையே
எமையெல்லாம் இடை நடுவில் துயரத்தில் ஆழ்த்தி
நீங்கள் மட்டும் வெகு தூரம் சென்றீரோ ஐயா!

அன்பு என்ற மூன்றெழுத்தால்
ஆதரித்த நீர் இரக்கமின்றி
பிரிவு என்ற மூன்றெழுத்தை தந்து
பித்து பிடிக்க வைத்தீரே ஐயா!

நோயோடு போயிருந்தால் நொந்திடோமே
காலன் மாயவலை வீசினானே ஐயா!
சாகின்ற வயதா உமக்கு சாதிக்கும் வயதல்லவா
சாந்தியாய் போனது ஏன் ஐயா!

நல்லவரெல்லாம் இறைவன் தன்னிடம் இழுத்துக் கொண்டால்
பூமியில் நல்லவற்றை விதைப்பதற்கு யாருளர்
பிறப்பவர் ஒரு நாள் இறப்பது இயல்பென்றாலும் – அதை
ஏற்கும் துணிவும் மனதிடம் இறைவன் நமக்கு தரவில்லையே
எத்தனையோ பேர் நான் இருக்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சொன்னாலும் ஐயாவைப்போல்
யார் தான் இருக்க முடியும்
ஒரு போதும் ஐயாவுக்கு நிகர் எவருமில்லை.

நாம் உலகில் சுடர் விட்டு ஒளி வீச தன்னை திரியாக உருக்கிக் கொண்ட எம் ஐயாவின் பாதக் கமலத்திற்கு! சரணம்.........! சரணம்.........! சரணம்.........!

**க.திலகேஸ்வரி**
**காமராஜர் பல்கலைக் கழக மாணவி**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயாவுக்கு .........!

ஐயா உம்மைப் பற்றி
எழுதும் போது
மட்டுமே நான்
தோற்று விடுகின்றேன்.

கடலலை எடுத்து வந்து
கைக்குள்ளே அடக்க
முடியாத ஒரு முயற்சி
போலவே இது எனக்குப் படுகின்றது

அஜந்தா ஓவியம் என்னை
அசத்தவில்லையே
எம் இல்லத் தந்தையின் நல்ல
கருத்துக்கள் தான் எம்மை
உயர்த்தி விட்டது

ஈபிள் கோபுரத்தை விட
எமக்கு உயரமானவர் எம்
இல்லத் தந்தை பின்னர்
உம்மைப் போலவே வர
நினைக்கின்றோம்

சாஜகான் மீது
எனக்குக் கோபம்
ஏன் தன் காதலிக்காக
மட்டுமே தாஜ்மகாலைக் கட்டினார்
இவரைப் போல சுயநலமாக கட்டாமல்
எம் தந்தையின் அன்புக் கோபுரத்தை
சாமிக்கு மேலாக கட்டுவோம்.

லோ. நிலக்ஷிகா
இல்ல மாணவி
க. பொ. த (உ/த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூலிலிருந்து சில உணர்வலைகள் .........

பூநகரி நாயகனே சென்று வாருங்கள்.
புகழோடு வாழ்ந்தவரே சென்று வாருங்கள்.
நிகரேது உமக்கொரு உவமை சொல்ல
நிமலனடி சேர்வதற்காய் சென்று விட்டீர்.

வாடியடி ஆலமரம் வாடிநிற்க
வழிதெரியா பிஞ்சுகளும் தேடிநிற்க
விடைபெற்று சென்றதேனோ விடியுமுன்னே
விடையேதும் புரியவில்லை விளக்கிச் சொல்ல.

சமூக சேவையென்றால் என்னவென்று
சொல்லினாலும் செயலினாலும் காட்டி - இந்த
சுந்தர முகத்தினாலே வென்று வந்தார்
சொர்க்கத்தில் பணியாற்ற புறப்பட்டாரோ?

வாழுமட்டும் வீழ்ந்ததில்லை உமது புகழ்
வாழ்க்கை முடிந்தாலும் மங்காது கீர்த்தி - என்றும்
மேலோங்கும் தங்கள்பணி மேன்மையுறும்
மேலிருந்து வாழ்த்துங்கள் வணங்குகின்றோம்.

அஞ்சலியில் கலந்து கொள்ள அருகிலில்லை
நெஞ்சினிலே நினைவுகளின் சுமையிருக்கு
வஞ்சமில்லா எண்ணங்களின் வடிவு இன்று
தஞ்சமென்று இறையடியை சேர்ந்திருக்கு

உண்மையான ஓய்வு இப்போ கிடைத்ததையா
உன்னதமாய் மனவமைதி பெற்றிடுங்கள்
உறவுகளின் துயரதனில் பங்குகொண்டு
உரைக்குமிந்த செய்தி என்னு உணருகின்றேன்.
ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும், எனது படைப்பின் சாராம்சமாகும்"

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org